
Regd. No. M. 4392

உங்களுடைய சாமான்களை வெளியூர்களுக்கு அனுப்ப



இனி கவலை வேண்டியதில்லை


உங்கள் ஏற்றுமதி, இறக்குமதி எவ்வளவு இருந்தாலும் அவைகளை திருப்திகரமாயும், சிக்கனச் செலவிலும், உங்களுக்கு ஒருவித சிரமமில்லாமலும், குறித்த காலத்திலும், அநேகமாய் நேரே உங்கள் வீடோ அல்லது கிடங்குகளிலேயே கொண்டு போய்ச் சேர்க்கும்படியான வசதிகளை நாங்கள் செய்கிறோம்.

விவரங்களுக்கு எழுதவும் :

ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

மவுண்டு ரோடு (போன் : 8536) மதராஸ்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.



★

★

நிஜாம் சமஸ்தானம் ராஜப்பேட்டை ஜாகிர்தார் ஸ்ரீ ஏ. என். கோவராவ் முதலியார் அவர்கட்கும், பெங்களூர், டானரி ரோடு, 11 நெம்பரிலிருக்கும் ஸ்ரீ எ. ஜி. சேனாபதி அவர்கள் குமாரி ஸ்ரீமதி: பிஜாவதி அம்மாளுக்கும் பெங்களூரில் ஆகஸ்டு 25௳ அன்று சமூகத் திருமணம் நடந்தேறியது.

கல்கி



KALKI செப்டம்பர் 17, 1944 4 அணா



இதை அளிப்பதிலேயே ஒரு அலாதி அந்தஸ்து

டிலக்ஸ் டெனர் சிகரெட்டை உங்கள் சிநேகிதர்கள் ரஸிப்பார்கள். 100% உத்தரவாதமுள்ள தூய வர்ஜீனியா புகையிலையிலிருந்துதான் டெனர்ஸ் தயாரானவை. டெனர் சிகரெட்டுகள் உங்களது ரஸிகத் தன்மைக்கு ஒரு அத்தாட்சி ஆகும். இவைகளின் தனி மணம் இவைகளுக்கே உரித்தானது. மெல்லிய தொண்டை உடையவர்கள் அனுபவிக்கக் கூடியது டெனர்தான்.

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட். லண்டன்

tenor

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD. LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA


ஊக்கம், உற்சாகத்துடன் தமது இயற்கையழகையும் கெடாமல் காக்க விரும்பும் ஸ்திரீகள் நரஸூஸ் காபி, டீயையே விரும்புகிறார்கள். ஏன்? அவை ஆரோக்கியத்தையும், சுறு சுறுப்பையும் அளிக்கும் உயரிய பானங்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். நரஸூஸ் காபி, டீ இந்தியத் தயாரிப்பில் தலை சிறந்தவை என்பது தெரிந்தது தானே.
நரஸூஸ்
இந்தியத்தயாரிப்பில் தலைசிறந்தது
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
சேலம் தென்னிந்தியா
MNK-23-TM


அடுத்த நிமிஷம் இந்த கைகள்
எப்படி
இருக்கும்?
—குழந்தை 'அழுக்கு
அபாய'த்திலிருந்து காப்பாற்
றப் படுவது ஒரு வரம் போன்றது!
LIFEBUOY
லைப்பாய் நல்ல ஸோப்புகளைக்
காட்டிலும் சிறந்தது அதுஒருநல்வழக்கம்
L. 50-50 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

எனக்கோ, இதெல்லாம் துளிக் கூடச் சகிக்கவில்லை. என்னடா இப்படி வலிய வலிய, வந்து கொண்டிருக்கிறார்களே, எந்தச் சமயம் என்ன சண்டை நேருமோ என்று பயந்துகொண்டிருந்தேன். நம்பிடைத்தான் வீட்டைக் காலி பண்ணும்போது வீட்டுக்காரர் நம்மோடு ஒரு சண்டை போடாமல் விடுவதில்லையே!



எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் எந்தக் கடையில் பல்புகள் வாங்கினேனோ அந்தக் கடைக்காரர் தினம் இந்த விஷயத்தை எனக்கு ஞாபகம் மூட்டிக்கொண்டே இருக்கிறார். பல்புகளுக்காகக் கொடுக்க வேண்டிய பணத்தை நான் இன்னும் கொடுத்த பாடில்லை.

இரண்டு முனையிலும் போர் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது என்று ஹிட்லருக்குத் தெரிந்ததுபோல் எனக்கும் தெரியும். ஹிட்லர் தாமே இரண்டு முனைப் போரை வரவழைத்துக் கொண்டார். ஆனால் என் விஷயத்திலோ என்னையறியாமல் இரண்டு பக்கங்களிலும் போர் மூண்டுவிடவே, நான் இந்த முனையில் கொஞ்ச நேரமும், அந்த முனையில் கொஞ்ச நேரமும், மாறி மாறிப் போர் புரிய நேர்ந்தது.

இந்த யுத்தத்தின் முதல் வேட்டு, எந்த முனையில் யாரால் வெடிக்கப்படப் போகிறதோ என்று பயந்து கொண்டிருக்கையில் குளிக்கும் அறையிலிருந்து ஒரு பெரிய இரைச்சல் கேட்டது. என்ன என்று ஓடிப்போய்ப் பார்த்தால் என் சஹதர்மிணிக்கும், வீட்டுக்காரரின் சஹதர்மிணிக்கும் ராம-ராவண யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருந்தது! குளிக்கும் அறையில் அடிக்கப்பட்டிருந்த மர 'ஷெல்ப்' யாருக்குச் சொந்தம் என்பதைப் பற்றித்தான் யுத்தம்.

'ஷெல்ப்' என்னமோ எங்களுக்குத்தான் சொந்தம் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் உள்ளூரிலேயே இருக்கும் எங்கள் உறவினர் ஒருவரிடமிருந்து சரசு அதைக் கடன் வாங்கியிருந்தாள். இந்த வீட்டைக் காலி பண்ணி விட்டு வேறு வீட்டுக்குப் போனால் தேவலை என்று நாங்கள் யோசனை பண்ணினதுதான் தாமதம், அந்த உறவினர் 'ஷெல்பை'த் திருப்பிக் கொடு என்று கச்சரிக்க ஆரம்பித்து விட்டார்.

'ஷெல்ப்' யுத்தத்தில் சரசுவுக்கு உதவியாகத் தலையிடலாமா, கூடாதா என்று ஒரு கணம் யோசித்தேன். ஆனால் சரசு போட்ட சத்தத்தில் இறுதி வெற்றி அவளுக்குத்தான் என்ற நிச்சயம் ஏற்படவே, நாம் தலையிட்டு வலுவில் கிடைக்கிற வெற்றியைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்று வாசல் அறைக்குத் திரும்பினேன்.

திரும்பினால் அங்கே என் தாயாருக்கும் வீட்டுக்காரக் கிழவருக்கும் பிரமாதமான சண்டை நடந்து கொண்டிருந்தது. வீட்டு மின்சாரப் பல்புகள் யாருக்குச் சொந்தம் என்பதைப் பற்றித்தான் தகராறு. மின்சார பல்புகளும் எனக்குத்தான் சொந்தம் என்பது

வீட்டில் ஏற்பட்ட ரகளையைப்பார்த்து விட்டு, சாமான் எடுப்பதற்காக வந்திருந்த வண்டிக்காரர்கள் கையில் அகப்பட்ட சாமான்களை எடுத்துக் கொண்டு கண்காணாமல் ஓடிப்போய் விட்டார்கள். அந்த சமயம் பார்த்து, நான் காலி பண்ணப் போகும் இடத்துக்குத் தாங்கள் வரலாம் என்கிற எண்ணத்தில், நாலைந்து பேர் உள்ளே நுழைந்து வீட்டுக்கு வாடகை என்ன, ஜல சௌகரியம் எப்படி, பக்கத்தில் குடியிருக்கும் வீட்டுக்காரர்கள் எப்படி என்று என்னைக் கேள்விகள் கேட்கத் தொடங்கி விட்டனர்! வீட்டுக்காரரைக் கேட்டால் உண்மையைச் சொல்ல மாட்டார் என்பது அவர்கள் எண்ணம்!

கடைசியில் ஒரு மாதிரியாக வீட்டைக் காலி பண்ணினேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன். ஆனால் எனக்கும், வீட்டுக்காரருக்கும் ஏற்பட்ட ரசாபாசத்தில், அவரைப் பார்த்து, "வா, உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அவரும் என்னைப் பார்த்து, "வா, உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.

ஆனால் வீட்டைக் காலி பண்ணிய பிறகு ஒருவரை யொருவர் சந்திக்கவில்லையாதலால், இன்னும் ஒருவரையொருவர் "பார்த்துக் கொள்ளவில்லை."

தும் போக வேண்டிய அவசியம் இல்லை ஐயா! இப்பொழுது உள்ள சட்டம், இது விஷயமாகக் குடியிருப்பவர்களுக்கு மிக்க அனுகூலமாய் இருப்பது தெரியாதா, என்ன என்று சிலர்கள் கேட்கலாம்.

நியாயந்தான். இப்பொழுது உள்ள சட்டப் பிரகாரம் வீட்டுக்காரன் நம்மை வீட்டைக் காலி பண்ணச் சொல்ல முடியாதுதான். ஆனால் வீட்டுக்காரன் நம்மோடு கூட ஒரு போர்ஷனில் குடியிருக்கக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? வீட்டுக்காரன் மனைவி நம் மனைவியிடம் கடு, கடு என்று விழக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? வீட்டுக்காரன் நம்மைப் பற்றித் தனக்குள்ளேயே முணுமுணுக்கக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? குழாய்க்கு ஜலம் பிடிக்கப் போகும் சமயத்தில் வீட்டுக்காரனும் போட்டி போட்டுக் கொண்டு ஜலம் பிடிக்கப் போகக்கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? நம் வீட்டுக்கு நம்மைத் தேடிக் கொண்டு வருகிற சிநேகிதர்கள் எல்லாரிடமும் வீட்டுக்காரன் நாம் இல்லையென்றோ, அல்லது தெரியாது என்றோ சொல்லி அனுப்பக்கூடாது என்று சட்டம் இருக்கிறதா?

ஆக, இத்தகைய சட்டங்கள் ஒன்றும் இல்லாததால் வீட்டுக்காரரை முந்திக் கொண்டு சரக என்னைத் தினம் கர்ச்சிக்க ஆரம்பித்து விட்டான். சரகவின் கர்ச்சிப்புப் பொறுக்காமல் நானும் வேறு வீடு பார்த்து, வீட்டுக்காரரிடமும் வீடு மாறப்போவதாகத் தெரிவித்து விட்டேன்.

சரி, வீடு மாறினீர், அதில் என்ன இருக்கிறது என்று விஷயம் தெரியாதவர்கள் கேட்கலாம். இவர்களுக்கு நான் சொல்லக் கூடியது, ''வீட்டை மாற்றிப் பார், அப்பொழுது தெரியும்'' என்னும் ஒரே வார்த்தைதான்.

கல்யாணத்தைப் பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப் பார், ஒண்டுக் குடித்தனம் இருந்து பார் போன்ற அழகிய பழமொழிகளைச் சிருஷ்டித்த மகானுபாவன் வீட்டை மாற்றிப் பார் என்ற பழமொழியும் ஏன் சிருஷ்டிக்காமல் விட்டார் என்று தெரியவில்லை.


நான் வீடு மாறப் போகிறேன் என்று தெரிந்ததுதான் தாமதம், வீட்டுக்காரக் கிழவி, அதாவது வீட்டுக்காரரின் தாயார் வீட்டைச் சுற்றிக் காவல் வைத்து விட்டாள்.

இத்தனை நாளாக மாடி அறையை விட்டுக் கீழே இறங்காத கிழவர், அதாவது வீட்டுக்காரரின் தகப்பனார், எங்கள் வாசல் அறைக்குப் பக்கத்தில் உள்ள திண்ணையில் மேலும் கீழும் உலாவ ஆரம்பித்து விட்டார்.


வாசல் அறையில் உள்ள சாமான்களை எடுத்துக் கொண்டு போகும்போது நான் வாசல் அறையையும் கூட எடுத்துக் கொண்டு போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவர் வேலை!

கொல்லைப்புறத்தில், குளிக்கும் அறைக்குப் பக்கத்தில் வீட்டுக்காரரின் மனைவி கவாத்து செய்து கொண்டிருந்தாள். எங்கே குளிக்கும் அறையையும் நாங்கள் கூடவே எடுத்துக் கொண்டு போய் விடுவோமோ என்று அவளுக்குப் பயம்!

வாசல் பக்கத்து அறைக்குக் காவல் வைத்தாகி விட்டது, கொல்லைப்பக்கத்து அறைக்கும் காவல் வைத்தாகி விட்டது. ஆனால் சமையல் அறை, சாமான் அறை முதலிய வற்றுக்குக் காவல் வைக்க வேண்டுமே, எப்படி வைப்பது? சமையலறையிலேயே யாரையாவது ஒருவரைக் கொண்டுவந்து நிறுத்தி வைத்தால் நன்றாய் இருக்குமா? நாங்கள் ஏதாவது தவறுதலாக நினைத்துக் கொள்ள மாட்டோமா? அதற்காகக் கிழவி ஒரு யுக்தியைக் கையாண்டாள்.



ஐந்து நிமிஷத்துக் கொருதடவை, ஏதோ ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு எங்கள் போர்ஷனுக்குள் நுழைந்து கொண்டே இருந்தாள். எங்களோடு பேசுவது போலவே நாங்கள் என்னென்ன சாமான்கள் எடுக்கிறோம் என்று கடைக் கண்ணால் ஒரு பார்வை பார்த்து விட்டுச் சென்றாள்.



வீட்டை மாற்றிப் பார்!



— நாடோடி —

நான் குடியிருந்த வீட்டை விட்டு, புது வீட்டுக்கு வீடு மாற்றிவிட்டேன்.... ஏன் இப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்? எதற்காக மூக்கின்மேல் விரலை வைக்கிறீர்கள்?

ஆம், இந்தக் காலத்தில், அதுவும் சென்னையில், வீடு மாறினேன் என்றால் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம்தான்.

சென்னையில் வீடு கிடைப்பது எத்தனைக் குதிரைக் கொம்பாய் இருக்கிறது, வீடுகளுக்கு எத்தனை கிராக்கி இருக்கிறது என்பதற்குச் சமீபத்தில் ஒரு பத்திரிகையில் வெளி வந்த வேடிக்கைக் கதை ஒன்றே போதும்.

சென்னையில் உள்ள ஏதோ ஒரு குளத்தில் ஒருவர் மூழ்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது குளத்தங்கரை வழியாக ஒருவர் செல்லவே அவரைக் கூப்பிட்டுத் தம்மைக் காப்பாற்றும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அதற்கு அவர், மூழ்கிக் கொண்டிருந்தவர் தம் வீட்டு விலாசத்தைத் தெரிவித்தால் காப்பாற்றுவதாக வாக்களித்தார். மூழ்கிக் கொண்டிருந்தவர் தாம் இன்ன தெருவில் இத்தனாம் நம்பர் வீட்டில் இருப்பதாகத் தெரிவித்தது தான் தாமதம், கரையில் இருந்தவர் மூழ்கிக் கொண்டிருந்தவரை இன்னும் ஆழத்தில் தள்ளிவிட்டு அவர் குறிப்பிட்ட வீட்டை நோக்கி ஓடினார்! வீடு இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த எத்தனையோ ஆத்மாக்களில் அவரும் ஒருவர். ஜலத்தில் விழுந்தவர் இறந்து போய் விடுவார், தாம் உடனே முந்திக் கொண்டு அவர் குடியிருந்த வீட்டைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பது அவர் ஆசை!

ஆனால் குறிப்பிட்ட வீட்டுக்குச் சென்றதும் என்ன ஏமாற்றம்! அந்த வீட்டுக்கு இவருக்கு முன்னர் வேறு யாரோ வந்து விட்டார்கள்! விசாரித்ததில் மூழ்கிக் கொண்டிருந்தவரை முதலில் குளத்தில் தள்ளி விட்டவர்தான் குடி வந்து விட்டார் என்று தெரிந்தது.

சென்னையில் உள்ளவர்கள் வீட்டுக்காக இத்தனைக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது எனக்கு எப்படி வீடு கிடைத்தது என்று நீங்கள் ஆச்சரியப்படுவது நியாயந்தான். ஆனால் வீடு கிடைத்த ரகசியத்தை வெளியில் சொல்லப் போவதில்லை. ரகசியமாகவே வைத்துக்கொள்ளப் போகிறேன்.

எதற்காகப் புது வீட்டுக்குக் குடி போனேன்? பழைய வீட்டை விடப் புதிய வீடு சௌகரியமா, என்ன என்று நேயர்கள் கேட்பது காதில் விழுகிறது.

எத்தனை வீடுகள் மாறினாலும் சரி, காலி பண்ணிவிட்டு வந்த வீட்டை இகழ்வது, புதிதாகக் குடி போயிருக்கும் வீட்டைப் புகழ்வது, பிறகு திரும்பவும் இந்த வீட்டைக் காலி பண்ணி விட்டுப் போகும்போது இதை இகழ்வது, புதிதாகக் குடி போகப் போகும் வீட்டைப் புகழ்வது, இப்படிச் சில பிரகிருதிகள் இருக்கிறார்கள். ஆனால் நான் அத்தகைய பிரகிருதி அல்லவாதலால் உண்மையைச் சொல்லி விடுகிறேன். பழைய வீடு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சௌகரியமாகவும் இருந்தது. புது வீடு துளிக்கூடப் பிடிக்கவில்லை. சௌகரியமாகவும் இல்லை.



அப்படியிருக்க வீட்டை ஏன் காலி பண்ணினீர்கள்?

நியாயமான கேள்விதான். ஆனால் வீட்டுக்காரன் போ என்று சொல்லும் போது, எப்படிப் போகாமல் இருப்பது?

அட அசட்டு மனுஷா! வீட்டுக்காரன் போ என்று சொன்ன

கறுப்பழகி

ஆதி நாராயணன்

ஒரு நாள் காலை திடீரென்று என் தகப்பனார் என்னைக் கூப்பிட்டு, "இன்று மாலை பெண் பார்க்கச் செல்லவேண்டும். நீ 'டிரஸ்' பண்ணிக் கொண்டு 'ரெடி'யாக இரு" என்று என்னிடம் உத்தர விட்டார்.

அன்று மாலை எல்லோரும் பெண் வீட்டிற்குச் சென்றோம். நான் என் கடைக் கண்ணால் அவளைப் பார்த்தேன். அப்பப்ப, பார்க்கச் சகிக்கவில்லை. ஒரே கறுப்பு!

கல்யாணப் பேச்செல்லாம் முடிந்ததும் எல்லோரும் விடை பெற்றுக் கொண்டு எங்கள் வீட்டிற்குக் கிளம்பினோம்.

அப்போது நிதானமாக என் எண்ணத்தை என் தகப்பனாரிடம் தெரிவிக்க எண்ணி "அப்பா" என்றேன்.

"ஏன்?"

"எனக்கு இந்தப் பெண் பிடிக்கவில்லை."

"என்ன? பிடிக்க வில்லையா?"

"ஆம். ஒரே கறுப்பாக இருக்கிறாள்."

"அதென்னவோ அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ கறுப்பு இஷ்டமென்று சொன்னதினால் தான், சிவப்பாக வந்த பெண்களையெல்லாம் தள்ளி விட்டு, மிகவும் கஷ்டப்பட்டு இந்தக் கறுப்புப் பெண்ணை நிச்சயம் செய்தேன். வேஷ்டி, துண்டு, எல்லாவற்றிலும் கறுப்புக்கரை வேண்டும் என்பாயே! கறுப்புக் கோட்டு தைக்கவில்லையென்பதற்காக என்னுடன் ஒரு வாரம் பேசாமலிருந்தாயே! இப்பொழுது பெண் கறுப்பாயிருந்தால் பிடிக்கவில்லையோ? எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. இனிமேல் கல்யாணத்தை நிறுத்த முடியாது" என்றார் என் தகப்பனார்.

என் தகப்பனாரிடம் நான் தலைகீழாக நின்று பார்த்து விட்டேன். ஊஹூம். அவர் ஒன்றிற்கும் மசியவில்லை. கலியாணம் நடை பெற்றது. கலியாணத்தில் பெண் இருந்த பக்கம்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. கொஞ்ச நாட்கள் கழிந்து அவள் வீட்டிற்கு வந்தாள். அவள் எதிரில் போகவே சகிக்காமல் என் அறையிலேயே அடைபட்டுக் கிடந்தேன். அன்று எப்படியோ கழிந்து இரவு வந்தது.

ஒருநாள் என் அறையில் நான் கவலையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது யாரோ வருவது போலிருந்தது. திரும்பிப் பாராமலேயே, "யார் அது?" என்றேன்.

"நான்தான்."

"நான்தான் என்றால்?"

"லலிதா!"

"லலிதா என்றால்?"

"சாக்ஷாத் தங்கள் சகதர்மிணிதான். உங்கள் தகப்பனார்தான் உங்களுக்குக் கறுப்பென்றால் மிகவும் பிரியமென்று நீங்கள் பார்க்க வந்தபொழுது என்னைக் கறுப்பு வர்ணம் பூசிக் கொள்ளச் சொன்னார். ஆனால் எனக்கென்னவோ பயமாகத்தானிருந்தது. உங்களுக்கு நிஜமாகவே கறுப்பு இஷ்டமாய் விட்டால் நான் தினம் கறுப்பு வர்ணம் பூசிக்கொள்ள முடியுமா?" என்றாள் லலிதா.

எனக்கு என் நினைவே இல்லாமற் போய்விட்டது.

"சரி பாலைக் குடியுங்கள்" என்றாள் லலிதா அன்பொழுக என்னைப் பார்த்து.

"உன் மொழிகளைக் கேட்டதே அமிர்தத்தைப் பருகினதைப் போல் இருக்கிறது. இனிமேல் பால் எதற்கு?" என்று அவள் கையைப் பற்றி என்னருகில் இழுத்தேன்.

அவள் உடனே "போதுமே. அதோ அப்பாவும் அம்மாவும் .....!" என்றாள்.

அச்சமயம் என் பெற்றோர் எங்கள் சம்பாஷணைகளைக் கவனித்து விட்டு சிரிப்புடன் திரும்பிச் சென்றது தெரிந்தது.



"என்னப்பா, எனக்கு ஒரு சோடா வாங்கிக் கொண்டு அப்படியே உனக்கும் ஏதாவது வாங்கிக் கொள் என்று பத்து ரூபாய் கொடுத்தேன். மீதி இரண்டணா கொடுக்கிறாயே?"

"எனக்கு ஏதாவது வாங்கிக்கொள்ளச் சொன்னீர்களே! இரண்டு ஷர்ட் வாங்கிக் கொண்டேன்!"

துப் பார்த்து விட்டால் நான் மன நிம்மதியுடன் உயிர் விடுவேன். அப்போது தான் நான் என் கடமையைச் செய்தவளாவேன். இதுதான் என் கடைசி ஆசை.

உன் அன்புள்ள,

சாவித்திரி ''

இக்கடிதத்தைப் படித்ததும் ரகுராமனின் மூளை குழம்பியது. சிறிது நேரம் அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. கடைசியில் கல்யாணியை நிமிர்ந்து நோக்கி, ''கல்யாணி, எல்லாம் தெய்வச் சித்தம். நம்மால் ஆவது ஒன்றுமில்லை. நான் அவளது ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்று எவ்வளவோ பாடுபட்டு இந்த விவாகத்திற்கு ஏற்பாடு செய்தேன். ஆனால் அவளது உண்மையான ஆசை இதுவென்று எனக்குத் தெரியாமல் போயிற்று. ஆனால் கோபாலன் மிகவும் நல்லவன். அவனை மணந்து கொள்வதால் உனக்கு ஒன்றும் குறைவு வராது'' என்றான்.

மணி ஒன்பதாயிற்று. கல்யாண வீட்டில் பரபரப்பு ஏற்பட்டது. மாப்பிள்ளை கோபாலன் விரத உடையைக் களைந்து போட்டு விட்டு உட்கார்ந்திருந்தான். சிலர் ரகசியமாகவும் சிலர் பகிரங்கமாகவும் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். ரகுராமன் கோபாலனைத் தேடிக் கொண்டு ஓடினான். கோபாலன் கோபத்துடனிருப்பதுபோல் காணப்பட்டான். அவன் ரகுராமனைக் கண்டதும், ''ரகு! இது என்ன வேடிக்கை!'' என்று எரிந்து விழுந்தான்.

ரகுராமனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்னடா சமாசாரம்?'' என்று மிகவும் ஆவலோடு கேட்டான்.



''என்னவா? ஒரு பைத்தியத்தை என் தலையில் கட்டி என் வாழ்க்கையையே குட்டிச்சுவராக்கப் பார்த்தாயே!......''

''பைத்தியமா!''

''ஆமாம், ஊர் சிரிக்கிறதே!''

''யார் சொன்னது?''

''யாரோ சொன்னார்கள்; அதெல்லாம் எதற்கு? எனக்கு இஷ்டமில்லை; அவ்வளவுதான். இதோ, நாங்கள் புறப்படப் போகிறோம்.''

ரகுராமன் கோபாலனை எவ்வளவோ சமாதானம் செய்தும் அவன் கேட்கவில்லை. வண்டி வாசலில் வந்து நின்றது. ஒரே பிடிவாதமாகச் சம்பந்தி வீட்டார் புறப்பட்டு விட்டனர்.

ரகுராமன் சிறிது நேரம் யோசனை செய்தான். திடீரென்று ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல் துள்ளி யெழுந்தான். கவலையோடு உட்கார்ந்திருந்த சுப்பராமய்யரிடம் சென்று, ''கவலையை விடுங்கள்; முகூர்த்தம் தவற வேண்டாம். இதோ ஸ்நானம் செய்துவிட்டு நான் வந்து விடுகிறேன்!'' என்றான். கிழவருக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

கல்யாண வீட்டில் மீண்டும் பரபரப்பு. அதே முகூர்த்தத்தில் ரகுராமனுக்கும், கல்யாணிக்கும் விவாகம் இனிது நிறைவேறியது.

மாங்கல்ய தாரணம் ஆனதும் கல்யாணி நேராக ஓடிச் சென்று சுவரில் மாட்டியிருந்த சாவித்திரியின் புகைப் படத்தின் கீழ் விழுந்து நமஸ்கரித்தாள். அவளை ஆசீர்வதிப்பது போல் படத்திற்குச் சூட்டப்பட்டிருந்த புஷ்பம் அவளது சிரசின்மீது விழுந்தது.

மறுநாள் ரகுராமனுக்குக் கோபாலனிடமிருந்து பின்கண்ட கடிதம் கிடைத்தது:—


''நான் எதிர்பார்த்ததுபோல் உனக்கும் கல்யாணிக்கும் அதே முகூர்த்தத்தில் விவாகம் நடந்தது பற்றி மிகுந்த சந்தோஷம். நேற்று உனக்கும் கல்யாணிக்கும் நடந்த சம்பாஷணையைத் தற்செயலாக உன்னைக் காண வந்த நான், கேட்கும்படி நேர்ந்தது. சாவித்திரியின் கடைசி ஆசை தெரிந்த பிறகு, நான் கல்யாணியைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பவில்லை. அதனால்தான் அப்படிப் பழியைப் போட்டு விட்டு விலகிக் கொண்டேன். நீங்களிருவரும் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று நான் ஈசனைப் பிரார்த்திக்கிறேன்.

கோபாலன்.''

யைக் கூறி விடுகிறேன். தாங்கள் அதை நிறைவேற்றுவதாகக் கூறினால் தான் என் ஆத்மா சாந்தியடையும். தாங்கள்...'' என்று அவன் ஏதோ மேலே சொல்வதற்குள், ஒரு பெருத்த இருமல் தோன்றியது. பிறகு நிரந்தரமான சாந்தி. இத்துன்ப வாழ்வினின்றும் அவனுக்கு விடுதலை!

சாவித்திரியின் ஈமக் கிரியைகள் முடிந்ததும் அடுத்தபடியாக ரகுராமன் கவனம் செலுத்தியது கல்யாணியின் விவாக விஷயத்தில்தான். கோபாலன் என்பவனும் அவனும் பள்ளித் தோழர்கள். கோபாலன் விழுப்புரத்தில் ஹைஸ்கூல் உபாத்தியாயராக இருந்தான். ரகுராமன் அவனிடம் விஷயத்தை விவரமாகக் கூறி கல்யாணியை மணப்பதற்கு அவனைச் சம்மதிக்கச் செய்தான்.

கல்யாணத்தன்று ரகுராமன் சுப்பராமய்யர் வீட்டின் ஒரு சிறு அறையில் ஈஸிசேரில் உட்கார்ந்திருந்தான். அறைக்கு வெளியே காலடிச் சத்தம் கேட்டது. அவன் திரும்பினான்; கல்யாணி உள்ளே வந்தாள். அவளது கண்கள் கலங்கியிருந்தன. சாவித்திரியை நினைந்து வருந்துகிறாளென்று நினைத்து, ''கல்யாணி, என்ன செய்யலாம்: நேர்ந்தது நேர்ந்து விட்டது. இனி நடக்க வேண்டியதைப் பார். சாவித்திரி உயிர் போகும் தருணத்தில் கூட உன்னை மறக்கவில்லை. கல்யாணிக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். 'என் கடைசி ஆசையை நிறைவேற்றுங்கள்' என்றாள். பாவம், அவள் உயிரோடு இருந்து உன் கல்யாணத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற ஒரே குறைதான் எனக்கு'' என்றான்.





துக்கம் தொண்டையை அடைக்க, ''இறப்பதற்கு முன் அக்கா உங்களிடம் வேறு ஒன்றும் சொல்லவில்லையா?'' என்று கேட்டாள் கல்யாணி.

''இல்லையே!'' என்றான் ரகுராமன்.

உடனே, தன் இடுப்பில் செருகி வைத்திருந்த கடிதத்தை எடுத்து ரகுராமனிடம் கொடுத்தாள் கல்யாணி.

''என் அன்பு மிக்க கல்யாணி,

பாவம், என்றால் என் கணவர் எவ்வளவு கஷ்டப்படுகிறார் தெரியுமா? என்னை மணந்து அவருக்குச் சுகமென்பதே கிடையாது. சதா என் கவலைதான். உத்தியோக நேரம் தவிர மற்ற நேரங்களில் எனக்கு வைத்தியம் செய்வதற்கும் சிசுருஷை செய்வதற்குமே அவருக்குச் சரியாகி விடுகிறது. கல்யாணி, அவருக்கு உன்மீது எவ்வளவு இரக்கம் தெரியுமா? அவரிடம் சொல்லிவிடப் போகிறேன். உயிருடனிருக்கையிலேயே உங்களிருவருக்கும் விவாகம் செய்வித்

முகமெல்லாம் ஒரே துயர மயம் என்று ஆக்கிக்கொண்டு ; போயினை !: அடாடா, இங்கு வந்தாயே ; நின்கேள் ஆவரோ : உனக்குச் சமானம் என்று சொல்ல முடியுமா ?]

மேலும் சொல்லுகிறான் : வெறும் வேடனான நான்தானா உன்னைப் புகழ்கிறதற்கு? சூரியப் பிரகாசத்தில் எப்படிச் சந்திரன் நக்ஷத்திரங்கள் இவைகளின் ஒளி மறைந்து ஒடுங்கிப் போகின்றனவோ அதுபோல் அல்லவா உன்னுடைய மூதாதைகளின் பெருமைகள் எல்லாம் உன் புகழில் மறைந்து ஒடுங்கிப் போகின்றன !

'என்புகழ் கின்ற(து)ஏ ழை
எயினனேன் ! இரவிஎன் பான்
தன்புகழ்க் கற்றை,மற் றை
ஒளிகளைத் தவிர்க்குமா போல்,
மன்புகழ் பெருமைநுங் கள்
மரபினோர் புகழ்கள்எல் லாம்
உன்புகழ் ஆக்கிக்கொண் டாய்,
உயர்குணத்(து) உரவுத்தோ ளாய்!'

[என் புகழ்கின்றது ஏழை எயினனேன் : எப்படிப் புகழ முடியும் வேடனாகிய நான் : இரவி என்பான் தன் புகழ் கற்றை : சூரியனது கிரணங்களின் தொகை : மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல் : சந்திரன் முதலான ஒளிகளை அடக்கி அவைகள் இல்லாதன போலச் செய்யும் முறையில் ; மன் புகழ் பெருமை: தெய்வகீர்த்தி என்று சொல்லக்கூடிய பெருமை வாய்ந்த: நுங்கள் மரபினோர் : உங்கள் மூதாதையர்களின் ; உயர் குணத்து உரவுத்தோளாய் : உயர் குணமும், புஜ பலமும் அற்புதமாய் ஒருங்கே அமைந்தவீரனே !]

ராமன் மாத்திரமல்ல, ராமனுடைய மூதாதைகள் யாருமே, பரதனுக்குச் சமானமாகார்கள் என்ற வியப்பில் நிற்கிறான் குகன். அப்படி நிற்கும் குகனைப் பார்த்து, 'எங்கே தங்கினான் அண்ணன் ராமன் ?' என்று கேட்கிறான் பரதன். இதோ காட்டுகிறேன் வா என்று குகன் புறப்பட்டான். அப்படியே எழுந்து ஓடுகிறான் பரதன்.

கார்எனக் கடிதுசென் றான்,
கல்லிடைப் படுத்தபுல் லின்
வார்சிலைத் தடக்கைவள் ளல்
வைகிய பள்ளிகண் டான்,
பார்மிசைப் பதைத்துவீழ்ந் தான்,
பருவரல் பரவைபுக் கான்,
வார்மணிப் புனலால்மண் ணை
மண்ணுநீர் ஆட்டுங்கண் ணன்.

[கார் எனக் கடிது சென்றான் : புயலடிக்கும் போது விரைந்து ஓடும் மேகத்தைப் போலச் செல்லுகிறான் ; வார்சிலைத் தடக்கை வள்ளல் : நீண்ட வில்லை ஏந்திய ராமன் ; கல்லிடைப் படுத்த புல்லின் வைகிய பள்ளி கண்டான் : கல்லில் பரப்பிய புல்லின்மேல் படுத்திருந்த படுக்கையின் தன்மையைப் பார்த்தான் — சகிக்க முடியவில்லை பரதனுக்கு ; பருவரல் பரவை புக்கான் : துன்பமாகிய கடலுள் அமிழ்ந்து விட்டான் ; வார் மணிப் புனலால் : முத்துப் போல் வடிந்து கொண்டிருந்த கண்ணீரால் ; மண்ணை மண்ணும் நீர் ஆட்டும் கண்ணன் : பூமியை மெழுகுவதற்காக நீரைக் கொட்டும் தன் மையமான கண்ணினன்— பரதன்.]



அழகியகட்டிலில் அன்னத் தூவியில் மெத்தையில் ராமன் படுத்திருக்கும் அழகைப் பார்த்துள்ள கண்கள், பரதனது கண்கள். இப்போதோ அவன் படுத்திருந்த கல்லையும் காட்டுப் புல்லையும் பார்க்கின்றன ! என்ன செய்யும் அவை! கண்ணீராய்க் கரைகின்றன!

கடைசி ஆசை

ஏ. கே. பட்டுசாமி

இரவு மணி ஒன்று. மெயில் வண்டி விழுப்புரத்தைத் தாண்டி விட்டது. ரகுராமன் தனது மனைவி சாவித்திரியுடன் அந்த வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவர்களுக்கு எதிர்ப்புறத்தில் ஒரு பெரியவரும் அவர் பெண்ணும் உட்கார்ந்திருந்தனர். அவர்களது உடையிலிருந்தும், அப்பெண் பிறந்த மேனியாய் யாதொரு ஆபரணங்களுமின்றி இருந்ததிலிருந்தும், அவர்கள் மிக்க வறுமை நிலையிலுள்ளவர்களென்பது புலனாகியது.

மூவர் அவருடன் பேச்சுக் கொடுத்தார். ஊர், பேர், குலம், கோத்திரம், உத்தியோகம், அப்போது பிரயாணம் செய்ய வேண்டி நேர்ந்த காரணம் முதலியவற்றை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர். அவர் கூறியவற்றிலிருந்து பின் வரும் விஷயங்கள் தெளிவாயின :

அவருடைய பெயர் சுப்பராமய்யர். ஊர் திருவையாறு. ஒரு ஓட்டை வீட்டைத் தவிர வேறு ஆஸ்தி ஒன்றும் இடையாது. பெண்ணின் பெயர் கல்யாணி. சிறு வயதிலேயே தாயை இழந்தவள். அவளுக்கு இன்னும் விவாகமாகவில்லை. வரதக்ஷிணையின்றி அவளை மணக்க ஒருவரும் சம்மதிக்கவில்லை. அவருடைய தள்ளாத வயதில் வயிற்றுச் சாப்பாட்டுக்கே தவிக்கையில், வரதக்ஷிணைக்கு எங்கே போவது!

இச்சரிதையைக் கேட்டு ரகுராமனும் சாவித்திரியும் உருகிப் போயினர். பாவம், அப்பெரியவர் இக் கதையைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அச்சிறுமி பலபல வென்று கண்ணீர் உகுத்து விட்டாள். "அவள் அழகு ஒன்றே போதாதா? பணம் என்னத்துக்கு?" என்று நினைத்தான் ரகுநாதன்.

சாவித்திரி கல்யாணியைத் தேற்றினாள். சாவித்திரிக்கு அவளைவிட இரண்டு வயதுதான் அதிகமிருக்கும். எனினும், பெற்றெடுத்த தாயோ அல்லது ஓர் அருமைச் சகோதரியோ கூட அவ்வளவு வாத்ஸல்யத்துடன் அவளைத் தேற்றியிருக்க முடியாது. அந்த க்ஷணம் முதல் அப் பெண்கள் இருவரும் அத்தியந்த சிநேகிதைகளாயினர்.

ரகுராமன் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்தது. சாவித்திரி, கல்யாணியிடம் தன் விலாசத்தைக் கொடுத்து, "அடிக்கடி கடிதம் போடு" என்றாள். ரகுராமன் அப்பெரியவருக்குத் தேறுதல் கூறி, கல்யாணிக்குத் தக்க வரனைத் தான் தேடிக் கொடுப்பதாய் வாக்களித்தான். அச் சிறுமி அவனை நன்றியுடன் நோக்கினாள். வண்டி நகர்ந்தது. அவர்கள் விடைபெற்றுக் கொண்டனர்.

அது முதல் சாவித்திரியும் கல்யாணியும் கடிதங்களின் மூலம் தங்கள் நட்பை விருத்தி செய்து வந்தனர். அவ்வப்போது சாவித்திரி ரகுராமனைக் கேட்டு ஏதாவது பணம் வாங்கிக் கல்யாணிக்கு அனுப்புவாள். இவ்வண்ணம் ஒரு ஆண்டு கழிந்தது.

மறு வருடம் ரகுராமனுக்கு துர் அதிர்ஷ்டம் பிடித்தது. சாவித்திரி நோய்வாய்ப் பட்டாள். அடிக்கடி இருமினாள். தேகம் இளைத்தது.

இறக்கும் தருவாயில்கூடச் சாவித்திரி கல்யாணியை மறக்கவில்லை. கணவனை அருகே அழைத்தாள். "நான் இறந்து போவதைப் பற்றி வருந்த வேண்டாம். நான் இருந்து உங்கள் வாழ்வைச் சுகப்படுத்த முடியாது. நான் இறப்பதற்குச் சந்தோஷப்படுகிறேன். ஆனால், ஒரே ஒரு குறை. ஏழைக் கல்யாணி கண்ணீர் நிறைந்த கண்களுடன் என் எதிரில் நிற்பதுபோல் தெரிகிறது. நான் அவளுக்குக் கடிதம் எழுதி விட்டேன். எனது கடைசி ஆசை



வீட்டுக்காரர் :—ரவி நம்து சாதிப்பாய்த்தே! நமஸ்க்த தங்கள் என் கிற்கிறீர்கள்!

விருந்தாளி :—ஏதாவது என் சாமான்கள் தவற விட்டு வீட்ட பேசுகிறேன் என்றார். ஆமாம், நீங்கள் ஏன் வெறிக்க வெறிக்கப் பார்க்கிறீர்கள்?

வீட்டுக்காரர் :—தப்பித் தவறி என் சாமான் ஏதாவது சித்தாம் பேரன்விடப் பேசிற்றே என்றுதான்.



கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

76. கண்ணீராய்க் கரையும் கண்கள்

ராமன் என்னும் அயோத்திக்கு மாதிரமா சக்கரவர்த்தி? உலகத்தை எல்லாமே ஆளக்கூடிய தன்மை வாய்ந்தவன் அல்லவா? அப்படிப்பட்ட புண்ணிய ஆத்மா காட்டில் இருந்து கொண்டு கிழங்கையும் காயையுமா அருந்த வேண்டும்? பதினாலு வருஷம் இப்படிக் கழியவேண்டுமே! விதியின் கொடுமைதான் என்ன! இதற்கு விமோசனம் இல்லையா என்று ஏங்கிய வண்ணமாய் இருக்கிறது குகனது உள்ளம்.

இப்படிச் கைசோர்ந்த நிலையில் இருக்கும் குகனிடம் பரதன் சொல்லுகிறான், தான் வந்தது ராமனை அழைத்துப் போகத்தான், அரசன் ஆக்கத்தான் என்பதாக. இந்த வார்த்தையைக் கேட்டான் குகன்.

கேட்டனன் கிராதர்வேந் தன்
கிளர்ந்தெழும் உயிரன்ஆ கி
மீட்டுமண் அதனில்வீழ்ந் தான்,
விம்மினன், உவகைவீங் கத்
தீட்டரு மேனிமைந் தன்
சேவடிக் கமலப்பூ வில்
பூட்டிய கையன்,பொய் யில்
உள்ளத்தன் புகலலுற் றான்.

[கேட்டனன் கிராதர் வேந்தன் : வேடர் தலைவன் கேட்டானோ இல்லையோ ; கிளர்ந்தெழும் உயிரன் ஆகி : சோகத்தினால் அரை குறையாய் இருந்த உயிர் பூரணமாய் நிறைந்தது என்னும்படி பொலிவு பெற்றவனாகி ; மீட்டு மண் அதனில் வீழ்ந்தான் : இடச் என்று பூமியில் விழுந்தான். எதற்காக ; தீட்டரும் மேனி மைந்தன் : ஓவியத்தில் எழுத முடியாத அழகு வாய்ந்த பரதனது ; சேவடி கமலப்பூவில் பூட்டிய கையன் : செந்தாமரை போன்ற பாதங்களை இறுகப் பிடித்தவனாய் ; பொய் இல் உள்ளத்தன் : களங்கம் என்பதே இல்லாத உள்ளத்தனாய் ; புகலல் உற்றான் : வாய் விட்டுப் பேச ஆரம்பித்தான்—குகன்.]

குகனை எந்தகைய வேகத்தோடு, மண்ணில் விழச் செய்கிறார் கம்பர்! எப்படி பரதனது பாதங்களை இறுகப் பிடிக்கச் செய்கிறார் பாருங்கள்!

பரதன் குகன் காலில் விழுந்தான். அதைப் பெரிதும் மதித்தான் குகன். தன் சொந்தத் தம்பி என்று கருதி அவனைத் தழுவி நின்றான்.

ராமனைக் கொண்டு வரவே தான் வந்தது என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் பரதன் சாமான்ய மக்கட் பிறவி அல்ல, தெய்வந்தான் என்று பட்டு விட்டது குகனுக்கு. அப்படித் தோன்றியவுடன் தழுவிய நிலையில் சும்மா நிற்கமுடியுமா? குகன் பேசுகிறதைக் கேளுங்கள்:

'தாயுரை கொண்டுதா தை
உதவிய தரணிதன் னைத்,
தீவினை என்னநீத் துச்
சிந்தனை முகத்தில்தேக் கிப்,
போயினை! என்றபோழ் து,
புகழினோய்! தன்மைகண் டால்,
ஆயிரம் இராமர்நின் கேழ்
ஆவரோ, தெரியின்அம் மா?'

[தாயுரை கொண்டு : கைகேயி கேட்டுக் கொண்டபடி ; தாதை உதவிய தரணி தன்னை : தசரதனே கொடுத்த ராஜ்யத்தை ; தீவினை என்ன நீத்து : அந்த ராஜ்யம் பஞ்சமா பாதகத்தில் ஒன்றுதான் என்று உதறித் தள்ளி ; சிந்தனை முகத்தில் தேக்கி :

தலையை நிமிர்த்தினதான் தாமதம், ஆச்சரியத்தினால் அதன் கண்கள் விரிந்தன. பிரயாணிகளைக் கழுத்தைப் பிடித்துக் கீழே தள்ளிய ஆசாமியைப் பார்த்து, "அட பாவி! நீயா!" என்றது செக்ஷன் 144.

செக்ஷன் 144 பார்த்து ஆச்சரியப்பட்ட ஆசாமி, பஸ் கண்டக்டர் அல்ல, இந்தியத் தற்காப்புச் சட்டம்!

"நீ எதற்காக அப்படிப் பிரயாணிகளைப் பிடித்துக் கீழே தள்ளினாய்?" என்று செக்ஷன் 144 இந்தியத் தற்காப்புச் சட்டத்தைப் பார்த்துக் கேட்டது.

"எனக்கு இப்பொழுது இந்த வேலை தான் கொடுத்திருக்கிறார்கள். பஸ்ஸில் நிற்கும் பிரயாணிகள் ஆறு பேருக்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது என் வேலை. அதோ அந்த போர்டைப் பாரும்" என்று "சுருட்டுக் குடிக்காதே" "தயவு செய்து டிக்கட் கேளுங்கள்" என்று எழுதப்பட்டிருந்ததற்குப் பக்கத்தில் "இந்தியத் தற்காப்புச் சட்டத்தின் கீழ் இந்த பஸ்ஸில் ஆறுக்கு மேல் நிற்கும் பிரயாணிகளை ஏற்றக் கூடாது" என்றிருந்த போர்டை இந்தியத் தற்காப்புச் சட்டம் வெட்கத்துடன் காண்பித்தது.

இதைப் பார்த்ததும் செக்ஷன் 144-க்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஒரு காலத்தில் மகாத்மாஜி, ராஜாஜி, பண்டிட்ஜி முதலியவர்களைக் கைது செய்ய உபயோகமாயிருந்த இந்தியத் தற்காப்புச் சட்டம்தானா இப்பொழுது பஸ் கண்டக்டர் வேலை பார்க்கிறது என்று நினைத்துப் பார்த்தபோது அதற்கு ஏற்பட்ட சந்தோஷத்தில் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கி உல்லாசமாகச் சீட்டி யடித்துக் கொண்டே வீடு திரும்பியது.



கல்யாணக் கட்டுப்பாடு



'ஆட்டுக்கல்லி'



ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் பின்கண்ட விளம்பரம் வெளி வந்தது :—

உடனே ஒரு மனைவி தேவை. நல்ல மோட்டார் டயர் வைத்திருப்பவர்கள் மட்டும் எழுதவும். கடிதத்துடன் டயர் போட்டோ அனுப்ப வேண்டும்.

"அம்மாஞ்சி! நம்ம சாமா வீட்டுக் கலியாணத்துக்கு நீங்கள் வரவில்லையோ?"

"இல்லையே, அத்தான்! என்ன விசேஷம்?"

"அதை ஏன் கேட்கிறீர்கள்? காப்பி முதல் கத்தரிக்காய் வரை ரேஷன்! பிள்ளை கலெக்டர் வீட்டுப் பிள்ளைதான். வரதக்ஷிணையும் ரூபாய் ஆயிரக்கணக்கில். வெள்ளிப் பாத்திரங்கள் ஏதேஷ்டம். புடவைகளின் விலையோ ரூபா இருநூறு, முந்நூறு! ஆனால், 'ஐயா! அவருக்கு ஒரு டம்ளர் காப்பி கொண்டு வந்து கொடும்' என்றால், 'ரேஷன் காலம் ஸார்! பால், காப்பிக் கொட்டை கிடைத்தாலும் சர்க்கரை எங்கே கிடைக்கிறது?' என்று கேட்கிறார்கள்.

"ஐய்! இட்டிலி கொண்டுவாரும் என்றால், 'உளுந்தும் பருப்பும் இல்லாமல் இட்டிலி எங்கிருந்து வரும்?' என்கிறார்கள். 'இலையில் இன்னும் கொஞ்சம் உப்புமா வையப்பா!' என்றால், 'சவை படி பதினாறு அணா, ஸார்!' என்று ஞாபக மூட்டுகிறார்கள். இந்த சீஸனில்தான் கலியாணங்களெல்லாம் நடக்கிறது. ஆனால், வரதட்சிணைக்கு மட்டும் ஏன் கட்டுப்பாடு ஏற்படுத்தக் கூடாது? எஸ். எஸ். எல். ஸி. தேறினால் இவ்வளவு ரூபாய், பி. ஏ. தேறினால் இவ்வளவு ரூபாய், பி. எஸ்ஸி கோட்டுக்கு இவ்வளவு ரூபாய் என்று 'கன்ட்ரோல்' செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? போயும் போயும் சாப்பாட்டைத்தானா ரேஷன் செய்ய வேண்டும்? 'இலைபோடச் சொன்னாரா, இலையை எண்ணச் சொன்னாரா?' என்று சொல்வார்கள். அந்த மாதிரி இப்பொழுது சர்க்கார் இலைகளை யல்லவா எண்ணிப் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்!"

"நீர் இவ்வளவு நாழி சொல்லியும் என்ன பிரயோசனம்? என்னதான் வரதக்ஷிணைக் கட்டுப்பாடு செய்தாலும் 'ப்ளாக் மார்க்கெட்' எங்கே போச்சு? அது இருக்கும்போது பிள்ளையைப் பெற்றவர்களுக்கு என்ன குறைச்சல்?" என்று கேட்டார் அம்மாஞ்சி.

அத்தான் வாயைத் திறக்கவில்லை.



வழிப்போக்கன்

ஒரு நாள் செக்ஷன் 144-க்குப் பொழுதே போகவில்லை. முன்னெல்லாமாவது அதன் தயவு சர்க்காருக்கு அடிக்கடி வேண்டியிருந்தது. நினைத்தால், "உடனே புறப்பட்டு வா" என்று தந்தி யடிப்பார்கள். பொது ஜனங்களும் அதைக் கண்டு நடுங்குவார்கள்.

ஆனால் யுத்தம் வந்தாலும் வந்தது, செக்ஷன் 144-ன் செல்வாக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து விட்டது. அதை இப்பொழுது சீந்துவார் கிடையாது. செக்ஷன் 144-க்குப் பதில் இந்தியத் தற்காப்புச் சட்டம் என்னும் புது ஆள் சர்க்காருக்கு வேண்டியவனாகி விட்டான்.

இதையெல்லாம் நினைத்துப் பார்த்த போது செக்ஷன் 144-க்குக் கண்களில் ஜலமே வந்துவிட்டது.

சரி, கடற்கரைக்காவது போய்ச் சற்று நிம்மதியாக இருந்து துக்கத்தை மறந்து விட்டு வருவோம் என்று செக்ஷன் 144 பஸ் ஸ்டாண்டை நோக்கிப் புறப்பட்டது.

பஸ் ஸ்டாண்டில் செக்ஷன் 144 கால் ஓய நின்றதுதான் மிச்சமே யொழிய, அந்தப் பக்கமாக வந்த ஒரு பஸ்ஸும் அங்கு நிற்கவில்லை. எல்லாப் பஸ்களிலும் அளவுக்கு மீறியே கூட்டம் இருந்தது.

இதைப் பார்த்ததும் செக்ஷன் 144-க்கு உண்டான கோபம் சொல்லி முடியாது. "பஸ்கள் நிற்கும் இடம்" என்று போட்டிருக்கும் பலகையை "பஸ்கள் நிற்காத இடம்" என்று மாற்றி விடலாமா என்று கூட ஆத்திரத்துடன் திரும்பியது.

ஜனங்கள் இந்த மாதிரி ஆத்திரப்பட்டு, ஏதாவது செய்து விடுவார்கள் என்று எதிர்பார்த்தோ, என்னமோ, பஸ் கம்பெனிக்காரர்கள் அநேக பஸ் ஸ்டாண்டுகளில் பழைய போர்டுகளை எடுத்து விட்டுப் புதுப் போர்டுகள் மாட்டிவைத்திருக்கிறார்கள். இந்தப் புதுப் போர்டுகளில் ஒரு பஸ்ஸின் உருவப்படத்தை மாத்திரம்போட்டு வைத்திருக்கிறார்கள். பஸ் நிற்குமா, நிற்காதா என்று ஒரு தகவலும் கொடுக்க வில்லை!

ஆனால் செக்ஷன் 144 ஆத்திரத்துடன் போர்டு பக்கம் திரும்பினதுதான் தாமதம், ஒரு பஸ் வந்து நின்றது. பஸ்ஸிலிருந்து இறங்க வேண்டியவர்கள் எல்லாம் இறங்கினதும், ஏற வேண்டியவர்கள் எல்லாம் ஒருவருக்கொருவர் முண்டியடித்துக் கொண்டு ஏறினார்கள்.

பஸ்ஸில் எல்லா இடங்களிலும் ஜனங்கள் உட்கார்ந்திருந்தார்கள். இன்னும் சிலர் வெறும் வளையத்தைப் பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஒரு ஆசாமி எல்லாரையும் முண்டியடித்துக் கொண்டு, துவைத்து, மிதித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார். அந்த ஆசாமி வெகு அலட்சியமாக ஜனங்களை மிதித்துக் கொண்டு போனதைப் பார்த்து பஸ் கண்டக்டராக்கும் என்று செக்ஷன் 144 நினைத்தது. அந்த ஆசாமி நின்று கொண்டிருந்த பிரயாணிகளை ஒவ்வொருவராக எண்ணினார். ஆறு எண்ணியதும், மீதிப் பின்னால் இருந்த எல்லாரையும் கழுத்தைப் பிடித்துக் கீழே தள்ளி, "அடுத்த பஸ்ஸில் வாருங்கள்" என்று சொன்னார். நல்ல வேளை, செக்ஷன் 144 ஒரே ஒரு எண்ணிக்கையில் தப்பித்தது. ஏனெனில் அதுதான் ஆறாவது நபராக நின்று கொண்டிருந்தது!



எத்தனை பேர் வந்தாலும் ஏற்றிக் கொள்ளும் பஸ்ஸில் ஏன் இப்படிக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறார்கள் என்று கேட்பதற்காக செக்ஷன் 144 தலையை நீட்டியது.



என்றுமே இதைச்செய்யாதீர்கள்

வண்டிக்கு வெளியே தொங்கி நின்று பிரயாணம் செய்யாதீர்கள். அப்படிச் செய்தால் ஒரு கை காட்டிக் கம்பத்திலோ, பாலங்களின் சுவற்றிலோ அடிபட்டுச் சிதறிவிட நேரிடலாம். இப்படி பிரயாணம் செய்கையில் காயமடைந்தால் உங்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்காது. ஏனெனில் இந்தவகை பிரயாணம் சட்ட விரோதமானது. வண்டிக்கு உட்புறத்தில் இடம் கிடைக்காவிடில் பிரயாணத்தை நிறுத்துங்கள். உயிரை இழப்பதும் அங்கஹீனமடைவதும், உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் துரோகம் செய்வதாகும்.

வண்டிகள் குறைவாக இருப்பதால்தான் இப்பொழுது நெருக்கடியும் ஜனக்கூட்டமும் அதிகமாக இருக்கிறது. சேனை பூராவுக்கும் உணவுப் பொருள்கள், துணிமணிகள் விறகு கொண்டுபோவதுதான் ரயில்வேகளின் முதல் வேலையாதலால், பிரயாணி வண்டிகள் குறைந்திருக்கின்றன. பிரயாணத்தைவிட உங்கள் உணவும், உடையும், சரீர ஆரோக்கியமும் பன்மடங்கு முக்கியம்.

பிரயாணத்தைக் குறையுங்கள்.

அபாயகரமாக பிரயாணம் செய்யாதீர்கள்

AAA 484—TM.

காலக்ஷேபம்

விபரீதப் பதில்

ராமு:—ஏ சோமு! நம்ம தொந்தி வாத்தியாருக்கும், கடிகாரத்திற்கும் என்ன ஒற்றுமை?

சோமு:—அவருக்கும் இரண்டு கைகள் உண்டு.

ராமு:—ஆனால், என்ன வித்தியாசம்?

சோமு:—கடிகாரம் ஓடும்; அவரால் ஓட முடியாது. —எம். எஸ். மார்க்கண்டன்.

★

சரிதான்

தகப்பனார்:—"பிள்ளைகளை வளர்க்கும் விதம்" என்ற இந்தப் புஸ்தகத்தை நீ ஏன் படிக்கிறாய்?

பிள்ளை:—நீங்கள் என்னைச் சரியாக வளர்க்கிறீர்களா என்று தெரிந்து கொள்வதற்காகத்தான். —பி. ஏ. கிருஷ்ணன்.

★

தின்ற ஆகாரம்

"நான் நேற்று ஒரு ஸ்வப்பனம் கண்டேன். எல்லா வைடமின்களும் அடங்கிய ஆகாரம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது போலவும், அதை நான் தின்று மாதிரி பார்ப்பது போலவும் ஸ்வப்பனம் கண்டு கொண்டிருக்கும் பொழுது..."

"என்ன நடந்தது?"

"திடீரென்று விழித்துப் பார்த்தேன். பாயின் ஒரு மூலையைக் காணோம்!"

—எஸ். பி. எஸ். வாசன்.

★

வாஸ்தவம்தான்!

ஒருவர், "உத்தரவின்றி உள்ளே வரக் கூடாது" என்று எழுதியிருந்த போர்டைப் பார்த்துவிட்டு உடனே உள்ளே நுழைந்தார்.

உள்ளே இருந்தவர்:—ஏன் ஐயா, வெளியில் உள்ள போர்டைக் கவனிக்கவில்லையா?

வந்தவர்:—வெளியே ஒருவரும் இல்லை. ஆகையால் உங்களையே உத்தரவு கேட்கலாம் என்றுதான் வந்தேன்!

—வி. ஆர். கிருஷ்ணமூர்த்தி.

★

பார்த்த இடம்

உபாத்தியாயர் "சமுத்திரம் பார்த்தவர்கள் கையைத் தூக்குங்கள்," என்றார். வகுப்பில் ஒரே ஒரு பையன் மட்டும் கையை தூக்கினான்.

உபா:—கிட்டு! சமுத்திரம் பார்த்தவனைப் போல் கையைத் தூக்கினாயே, எங்கேடா பார்த்தாய்?

கிட்டு:—சினிமாவிலே ஸார்!

—டி. பி. சுப்பிரமணியம்.

அண்டப் புளுகு

முக்கால் புளுகன்:—அடே! எங்கப்பா ஆபீஸ் எத்தனை பெரிது தெரியுமா? தினம் தபாலில் கடிதங்கள் போடுகிறார்களே, அதற்கு ஸ்டாம்பு ஒட்டுவதற்கு ஜலம் இறைக்கப் பத்துபேர் இருக்கிறார்கள்!

முழுப் புளுகன்:—இவ்வளவுதானா! எங்கள் கடையில் மிகப் பெரிய கணக்குப் புத்தகம் இருக்கிறது. அதில் வரவு எழுதும் இடத்திலிருந்து செலவு எழுதும் இடத்திற்கு மோட்டாரில் போவதற்கே ஒரு நாள் பிடிக்கும்!

—எம். எஸ். எம்.

★

கெட்டிக்காரர்

நடிகர்:—ராமாயணத்தில் ஒருவரைச் சொன்னால் அம்மாதிரி நடித்துக் காண்பிப்பேன்!

டைரக்டர்:—திரௌபதி.

நடிகர்:—ராமாயணத்தில் சொல்லுங்கள் என்றால் கந்த புராணத்தில் சொல்கிறீரே?

—கே. எஸ். ராஜகோபாலன்.

★

சொல்லாத காரணம்

ஒருவன்:—அடே, உன்னைத்தான் டாக்டர் ஒரு வேலையும் செய்யாதே என்றாரே? இப்பொழுது ஏன் செய்கிறாய்?

வேலைக்காரன்:—நான் அவருடைய வீட்டு வேலையைத் தானே செய்கிறேன். அதனால் ஒன்றும் சொல்ல மாட்டார்.

—கே. நடராஜன்.


★

உபயோகம்

உபாத்தியாயர்:—ஏண்டா முத்து, ஒட்டைச் சிவிங்கிக்கு ஏன் கழுத்து இவ்வளவு நீளமாயிருக்கிறது?

முத்து:—அதனால் உபயோகம் உண்டு ஸார்!

உபாத்தியாயர்:—கழுத்து நீளமாயிருப்பதால் என்னடா உபயோகம்?



முத்து:—இதற்கு இவ்வளவு நீளக் கழுத்து இல்லாவிட்டால், ஒரு அணாக் கொடுத்து இதைப் பார்க்க நாம் இங்கே வருவோமா?

—எம். கே. சவுண்டப்பன்.



யாய் விட்டது!" என்றது பெருச்சாளி.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. பிள்ளையார் பூஜையன்று ஒரு கூடை கொழுக்கட்டை எப்படியாவது கொண்டு வரவேண்டும்" என்றது குரங்கு.

பிள்ளையார் சதுர்த்தியன்று காட்டில் ஏக அமர்க்களம். பூஜைக்காகப் பெரிய பந்தல் போட்டு ஆடம்பரமாகத் தோரணங்கள் எல்லாம் தொங்கவிடப்பட்டிருந்தன. மிருகங்களெல்லாம் ஸ்நானம் செய்து பட்டு உடுத்திக்கொண்டு, கூடை கூடையாகப் பழங்களைத் தூக்கிக் கொண்டு வந்தன. பட்சணம், பழம் எல்லாம் தயாராய் வந்து சேர்ந்தது. கொழுக்கட்டைதான் அதுவரை வந்து சேரவில்லை. கஜேந்திரபுரி அரசனான யானையாருக்குக் கோபம் கோபமாய் வந்தது. "இன்னுமா வரவில்லை, அந்தக் குரங்கு?" என்று அது ஆத்திரப்பட்டுப் பூமியைக் காலால் உதைத்தது. என்ன ஆச்சரியம்! உடனே காலால் உதைத்த இடத்திலிருந்து ஒரு கூடை கொழுக்கட்டை கிளம்பிற்று. உடனே குரங்கும் வந்து சேர்ந்துவிட்டது. கொழுக்கட்டைக் கூடையைப் பார்த்ததும் மிருகங்களுக்கு நாக்கில் ஜலம் ஊற ஆரம்பித்தது.



பூஜை ஆரம்பமாயிற்று. பிள்ளையாரைச் சுற்றிலும் மிருகங்கள் நின்று கொண்டிருந்தன. கரடியார் மந்திரங்களை ஒன்று விடாமல் ஒழுங்காகச் சொல்லிப் பூஜை செய்தார். நைவேத்தியங்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு வரும் பொழுது, லட்டுகம், மோதகம் என்றவுடன் 'ஓம்' என்று சத்தம் கேட்டது. மிருகங்களெல்லாம் சத்தம் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தன. அங்கு நிஜமாகப் பிள்ளையாரே கொழுக்கட்டையைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

கூடையில் ஒன்று கூட மிச்சம் இல்லை. அதுவும் போதவில்லையென்று மற்றப் பட்சணம் பழங்களையும் சாப்பிட ஆரம்பித்தார். மிருகங்களுக்கோ பசி தாங்கவில்லை. எல்லா மிருகங்களும் கொழுக்கட்டைக்காகக் கூடையிடம் ஓடின. ஆனால் கூடைக்குள் ஒரு பெரிய பெருச்சாளி படுத்திருந்தது. அது ஒரு பெரிய கொழுக்கட்டை என்று நினைத்துக் குரங்கு அதை எடுத்தது. குரங்கின் கையில் பிடிபடாமல் பெருச்சாளி ஓடிற்று. வாகனம் ஓடவே, பிள்ளையார் வாகனத்தைப் பிடிக்க ஓடினார். ஏனென்றால் வாகனம் இல்லாமல் எப்படி எல்லார் வீட்டுப் பூஜைக்கும் போக முடியும்? கொழுக்கட்டைக்காக மிருகங்களும் பிள்ளையாரைப் பின்பற்றி ஓடின.



கஜேந்திரபுரி அரசனான குஞ்சரம் காட்டில் மிருகங்களெல்லாம் சேர்ந்து பிள்ளையார் சதுர்த்தி கொண்டாட வேண்டும் என்று தண்டோரா போட்டது. பிள்ளையார் சதுர்த்தி என்றதும் மிருகங்களுக்கெல்லாம் கொழுக்கட்டை தின்னலாம் என்ற ஆசை உண்டாயிற்று. ஆனால் ஒருவருக்கும் கொழுக்கட்டை செய்யத் தெரியாது. எனவே, எல்லா மிருகங்களும் அரசனிடம் சென்று கொழுக்கட்டை செய்யத் தெரியாது என்று முறையிட்டன. குரங்கு மாத்திரம் வரவில்லை.


"இந்தக் கூட்டத்திற்கு வராத குரங்கார்தான் கூடை நிறையக் கொழுக்கட்டை கொண்டு வரவேண்டும்" என்று சிங்கராஜா உத்தரவு போட்டு விட்டது.

குரங்காருக்கு ராஜாவின் உத்தரவு தெரியவே, "நாம் பயந்து கொண்டு கூட்டத்திற்குப் போகாமல் இருந்தும் நம்மை விடவில்லை. இதற்கென்ன செய்வது?" என்று அது யோசித்துப் பார்த்தது. அதற்கு ஒன்றும் தோன்றவில்லை.

இப்படி வருத்தப் பட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்த போது, பக்கத்தில் சரசரவென்று சத்தம் கேட்கவே, திரும்பிப் பார்த்தது. வளையிலிருந்து அப்பொழுதுதான் காற்று வாங்குவதற்காக வெளியே வந்தது பெருச்சாளி.

அதைப் பார்த்ததும், "நாளைக்குப் பிள்ளையார் சதுர்த்தி. உங்களுக்கெல்லாம் கொழுக்கட்டை நிறையக் கிடைக்கும்!" என்றது குரங்கு.

"உனக்கும் வேண்டுமென்றால் சொல்லு. இதோ, ஒரு நொடியில் எத்தனை கொழுக்கட்டை வேண்டுமானாலும் தருகிறேன். எல்லாக் கொழுக்கட்டையும் சாப்பிட்டால் பிள்ளையாருக்குத் தேகம் ரொம்பப் பருத்துப் போய்விடுமாம். அப்புறம் ஒரு பெண்ணும் பிள்ளையார் அழகைக் கண்டு மயங்க மாட்டாளாம். அவருடைய வாகனமான நான் கூடக் கொழுக்கட்டை தின்றுதான் இப்படிக் கொழு, கொழு வென்று ஆய்விட்டேன். எங்கள் பிள்ளையார் கல்யாணம் செய்து கொண்டால், தம்பதிகளை எப்படிச் சுமப்பது என்று எனக்கு இப்பொழுதே கவலை




தாயார் :—ராமுவின் பல்லில் சொத்தை விழுந்திருக்கே; அவனைப் பல் டாக்டரிடம் அழைச்சுண்டு போய் அந்தப் பல்லைப் பிடுங்கிக்கொண்டு வாருங்களேன்.

பையன் (அழுது கொண்டே) :—ஐயோ, நான் வரமாட்டேன். பல்லை வலிக்கும்!

தகப்பனார் :—அடே! இப்படி யெல்லாம் அழுது கூச்சல்கிச்சல் போட்டாயோ, உன்னை டாக்டரிடம் அழைச்சுண்டே போகமாட்டேன், பார்த்துக்கோ!

னேன் அல்லவா? இல்லை, என் சொந்தக் குழந்தை !' என்றார் மெதுவான குரலில்.

'சொந்தப் பெண்ணா!' என்றேன் நான் ஆச்சரியத்துடன்.



'ஆமாம், ஒரு காரியத்தை உத்தேசித்துத் தான் அவள் அனாதைக் குழந்தை என்று சொன்னேன். வெகு நாட்களாகவே எனக்குச் சமூக சீர்திருத்தத்தில் நம்பிக்கை உண்டு. சுமார் இருபது வருஷத்துக்கு முன் விதவா விவாகம், மாதர் மறுமணம் என்றெல்லாம் சிலர் ஏட்டுச் சுரைக்காய்க் கதை பேசினார்களே தவிர, காரியத்தில் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், ஊரில் எவ்வளவோ பேர் தடுத்தும் நான் பிடிவாதமாய் ஒரு கைம் பெண்ணையே கல்யாணம் செய்து கொண்டேன். எல்லோரும் எங்களைப் பகிஷ்கரித்தார்கள். நான் அதை லட்சியம் செய்யவில்லை. சோபனா பிறந்த பிறகு ஊர் வம்பு இன்னும் அதிகமாயிற்று. ஊராரின் பழிச் சொல்லால் ஏற்பட்ட வேதனையே என் மனைவியைக் கொன்று விட்டது. அன்று முதல் எனக்கு உலகமே வெறுத்துவிட்டது. அங்கேயிருந்தால் குழந்தையின் க்ஷேமத்துக்குக் கூட ஆபத்து வந்துவிடும் என்று பயந்து காசியைப் பார்க்கக் கிளம்பினேன். அனாதைக் குழந்தை என்றால் எல்லோரும் அநுதாபம் காட்டுவார்களல்லவா? ஆகவே, உன்னிடம் சொன்னதைப் போன்று, யாரோ ஒருவர் இந்தக் குழந்தையைக் கொண்டு வந்து என்னிடம் விட்டுச் சென்றதாகக் கதை கட்டிவிட்டேன். நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. இந்த அனாதைக் குழந்தையிடம் எல்லோரும் பச்சாத்தாபம் காட்டுகிறார்கள். இவளைப் பார்த்துவிட்டுத்தான் ஒரு தர்மவான் எனக்கு இந்த வேலைகூடக் கொடுத்தார். ஒரு அனாதைக் குழந்தைக்குக் காட்டுகிற அன்பைக்கூட ஒரு குற்றமும் அறியாத என் காமாக்ஷிக்குக் காட்டவில்லையே, இது என்ன உலகம்?'

என்று வருந்தினார் அந்தக் கிழவர்.

கவலைப்படாதீர்கள். 'சோபனாவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இனிமேல் என்னுடையது' என்றேன் நான். அதைக் கேட்ட அவர் நன்றியறிதலுடன் என்னைப் பார்த்துவிட்டுக் கண்ணை மூடினார்.

நான் ஊரார் சிலருடைய உதவியுடன் அங்கு செய்ய வேண்டியவைகளைச் செய்து முடித்துவிட்டுச் சோபனாவுடன் ஊர் திரும்பினேன். அவள் ரொம்ப நாள் துக்கக் கடலில் ஆழ்ந்திருந்தாள். கடைசியில் ஒரு நாள் நானே தைரியமாக, 'என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள இஷ்டமா?' என்று கேட்டேன்.

'இல்லை !' என்றாள் சோபனா.

'இல்லையா ?' என்று கேட்டேன் ஆச்சரியத்துடன்.

'நிச்சயமாக இல்லை. என் இஷ்டம் என்ன என்பதை இத்தனை நாளாய்த் தெரிந்துகொள்ள முடியாதவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு நான் என்ன செய்கிறது ?' என்றாள் சோபனா.

அப்பொழுது அவள் சிரித்த ஒரு குறும்புச் சிரிப்பு என்னைக் குதூகலத்தில் ஆழ்த்தியது. அடுத்தபடி கல்யாணத்துக்கு வேண்டியவற்றைச் செய்ய ஆரம்பித்தேன். அவசரத்தில் யாருக்கும் அதைப் பற்றிச் சொல்ல முடியவில்லை. கல்யாணத்தை ஒரு கோவிலிலேயே முடித்துக் கொண்டு விட்டேன். எங்கள் புது வாழ்க்கையில் நாங்கள் அனுபவித்த இன்பம்தான் உன்னைக் கொஞ்சநாள் மறக்கச் செய்து விட்டது. என்னை மன்னித்துக் கொள்' என்று தன் கதையைக் கூறி முடித்தான் சேகரன்.

"இப்பொழுது நீ உன் மனைவிக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்கிறாயாக்கும் !" என்றேன் நான்.

"இல்லை ; அவள் எனக்கு ஹிந்தி சொல்லிக் கொடுக்கிறாள் !" என்று மகிழ்ச்சியுடன் கூறினான் சேகரன்.

"என் பெயர் ஜம்புகேச்வரய்யர். எனக்கு உற்றார் உறவினர் ஒருவரும் கிடையாது. ஒரே உறவாயிருந்த என் மனைவி பத்து வருடங்களுக்கு முன்னால் இறந்து போய் விட்டாள். எனக்குக் குழந்தை குட்டிகள் எதுவும் கிடையாது. என் மனைவி இறந்ததும் ஏகாங்கியாகி விட்ட நான், ஸ்தல யாத்திரை செய்வதை மேற்கொண்டேன்.

ஒரு நாள் இரவு காசி நகரில் தர்ம சாலையில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த என்னைத் தட்டி எழுப்பினார் ஒருவர். அவர் பக்கத்தில் கண்ணைக் கசக்கியபடி ஏழு வயதுப் பெண்ணொருத்தி நின்று கொண்டிருந்தாள்.

நான் கோபத்துடன், 'என்ன வேண்டும்?' என்று கேட்டேன்.

'இவள் என் பெண் சோபனா. இவளை நீங்கள்தான் இனிமேல் காப்பாற்ற வேண்டும். நான் கங்கையில் விழுந்து உயிரைவிடப் போகிறேன்!' என்று சொல்லிக் கொண்டே அந்த மனிதன் என் பதிலுக்குக்கூடக் காத்திராமல், ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டான்!

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தப் பெண், 'அப்பா!' என்று ஹிந்தியில் சொன்னபடி என் காலைக் கட்டிக் கொண்டாள்.

'பகவானே! இதென்ன கால்கட்டு?' என்று நான் நினைத்தேன். ஆனாலும் என்ன செய்வது? நடப்பது நடந்தே தீருமல்லவா? கள்ளங் கபடமற்ற அந்தத் துர்ப்பாக்கியப் பெண் அன்று முதல் என் குழந்தையானாள்.

கடைசியில் இந்த ராஜ்வாரா கிராமத்திலிருந்து அங்கு வந்த ஒருவர் எனக்குச் சிநேகிதமானார். அவர் தம் நிலங்களைக் கவனித்துக்கொள்ள ஒரு காரியஸ்தர் வேண்டும் என்றும், அந்த வேலையை ஏற்கச் சம்மதமானால் தன்னுடன் வரலாமென்றும் சொன்னார் அந்தப் புண்ணியவான்.

நான் தனியா யிருந்திருந்தால் அதற்குச் சம்மதித்திருக்க மாட்டேன். ஆனால் எனக்குக் கடவுளாகக் கொடுத்த கால்கட்டு அதற்குச் சம்மதிக்கச் செய்தது. இவ்வூருக்கு அவருடன் வந்து சேர்ந்த நான், சில வருடங்களில் இவ்வூர்க்காரனாகவே ஆகி விட்டேன். இப்பொழுது சோபனாவின் கல்யாணத்தைப் பற்றிய கவலைதான் எனக்கு' என்று பெருமூச்சுடன் நிறுத்தினார் அவர்.

★

கதை முடிந்ததும் டீ பாத்திரங்களை எடுத்துப் போகச் சோபனா உள்ளே நுழைந்தாள். அவளிடம் எனக்கும் சேர்த்துச் சமைக்கும்படி சொல்லி விட்டு, 'புறப்படுங்கள்; நானும் வருகிறேன். ஊரைச் சுற்றிக் காட்டுகிறேன் உங்களுக்கு. இன்று எங்கள் வீட்டிலேயே நீங்கள் சாப்பிடவேண்டும்' என்றார் அவர்.

சோபனாவின் அழகில் சொக்கிப் போயிருந்த நான், மெதுவாக எழுந்தபடி, 'சரி' என்றேன்.

இதுதான் எங்கள் முதல் சந்திப்பு. அப்புறம் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் நான் ராஜ்வாராவுக்குப் போகத் தொடங்கினேன். அன்றும் ஞாயிற்றுக் கிழமைதான். ஜம்புகேச்வரய்யர் ஜுரத்தில் படுத்துக் கொண்டிருந்தார். சோபனா என் வரவை ரொம்ப ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.



அன்று சாயந்திரம் அவர் உடம்பு ரொம்ப அதிகமாகிவிட்டது. என்னையும் சோபனாவையும் தம் பக்கத்தில் வரும்படி சமிக்ஞை செய்தார். இருவர் கைகளையும் ஒன்றாகச் சேர்த்துத் தம் மார்பில் வைத்துக்கொண்டு, "அப்பா! நான் கண்ணை மூடுமுன் அந்த விஷயத்தைச் சொல்லிவிட வேண்டும். சோபனா என் வளர்ப்புப் பெண் என்று கூறி

கடிதம் எழுத எனக்கு ரொம்ப ஆசை தான். ஆனால் சில காரணங்களால் அது முடியாமற் போய்விட்டது. என் கல்யாணக் கதை ரொம்ப சுவாரஸ்யமானது. அதைச் சொல்கிறேன். கேட்கிறாயா?" என்றான்.

என் மனைவி காப்பி கொண்டு வந்தாள். மூவரும் காப்பி அருந்தியதும் சேகரன் பின்வருமாறு கூறினான்:

★

"**நா**ன் இங்கிருந்து மாற்றலாகிப் போனேனல்லவா? அந்த ஊரில் எனக்கு நண்பனொருவன் கிடைத்தான். ஒரு நாள் அவன் வீட்டிற்குப் போயிருந்த நான், பேச்சு வாக்கிலே தென்னிந்திய கிராமங்களைப் பற்றிய வர்ணனையி லிறங்கினேன். அதைக் கேட்ட அவன், 'அம்மாதிரி கிராமமொன்று இங்கிருந்து பதினைந்து மைல்கள் தூரத்திலிருக்கிறது. பெயர் ராஜ்வாரா என்பது. நான் இரண்டு மூன்று தடவைகள் போய் வந்திருக்கிறேன். ரொம்ப அழகான கிராமம். சுற்று வட்டாரத்தில் பெரிய கிராமமும் அதுதான்' என்றான்.

எனக்கும் வட இந்தியக் கிராமங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அப்பொழுது உண்டாயிருந்ததாகையால், அடுத்த ஞாயிற்றுக் கிழமையே ராஜ்வாராவிற்குப் புறப்பட்டேன்.

ராஜ்வாரா ஒரு சிறிய ரயில்வே ஸ்டேஷன். என் நண்பன் சொல்லியபடி கிராமம் ரொம்பவும் அழகாகத்தானிருந்தது.

கிராமத்துத் தெருவொன்றின் வழியாக நான் போய்க் கொண்டிருந்த பொழுது, ஒரு வீட்டு வாசலில் நின்றிருந்த கிழவர் ஒருவர் என்னை உற்று நோக்கினார். நான் கொஞ்ச தூரம் போனதும் கைதட்டி அழைத்தார் அவர். 'எதற்காக அழைக்கிறீர்?' என்று ஆச்சரியத்துடன் அவரை நெருங்கினேன்.

'நீங்கள் என்ன மதராஸியா?' என்று அவர் சுத்தத் தமிழில் கேட்டார்.

'ஆமாம்; உங்களுக்கு எப்படித் தெரிந்தது?' என்று கேட்டேன் நான் ஆச்சரியத்துடன்.


'துணி அணிந்திருக்கும் மாதிரியிலிருந்து தெரிந்து கொண்டேன். அது சரி, இப்பொழுது நீங்கள் இந்த ஊரைப் பார்க்க வந்திருக்கிறீர் போலிருக்கிறது. அப்படியானால் என் வீட்டில் சற்று சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள்' என்றார் அவர்.

'எங்கோ வடநாட்டிலிருக்கும் இந்தக் கிராமத்திற்கு இந்தத் தமிழர் எப்படி வந்தார்?' என்று வியந்த வண்ணம் நான் அவரை நோக்கினேன். என் எண்ணத்தைப் பார்வையிலிருந்தே அறிந்து கொண்டவர் போல் அவர், 'உள்ளே வாருங்கள்; சொல்கிறேன்' என்றார்.

நான் வீட்டிற்குள் சென்றேன். என்னைக் கண்டதும் கூடத்தில் நின்ற பெண் சட்டென்று அப்பால் சென்றாள். உள்ளேயிருந்த ஒரு நாற்காலியில் என்னை உட்காரச் சொல்லிவிட்டு, 'சோபனா! சோபனா!' என்று அழைத்தார் அந்தக் கிழவர்.

'என்ன வேண்டும்?' என்று ஹிந்தியில் கேட்டபடி உள்ளேயிருந்து வந்தாள் அந்தப் பெண்.

அவளை டீ தயார் செய்து கொண்டு வரும்படி கிழவர் ஹிந்தியில் பணித்தார்.



அவளும் தன் கடைக் கண் வீச்சை என்மேல் ஒருமுறை வீசி விட்டு உள்ளே சென்றாள். சிறிது நேரத்திற்குப் பிறகு டீ சாப்பிட்டதும் அந்தக் கிழவர் என்னைப் பார்த்து, 'தமிழனான நான் எப்படி இங்கே வந்தேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களல்லவா? என் கதையைச் சொல்கிறேன், கேளுங்கள்' என்று ஆரம்பித்தார்.

கோபம்

டி. ஜி. ஸ்ரீநிவாசன்

"அடுத்த வெள்ளிக்கிழமை என் மனைவியுடன் உன்னைப் பார்க்க வருகிறேன். இத்தனை நாள் கடிதம் போடாததற்கு மன்னிக்கவும். இதர விஷயங்கள் நேரில்" என்று என் நண்பன் சேகரன் எழுதிய கடிதத்தைப் பார்த்ததும் எனக்குக் கோபம் வந்தது.

கோபத்திற்கு முதல் காரணம் அவன் ஆறு மாதமாய்க் கடிதம் எழுதாதது. சேகரன் வடக்கே மாற்றலாகிப் போனபொழுது பிரம்மசாரியாயிருந்த அவன், என்னிடம் சொல்லாமல் கல்யாணம் செய்து கொண்டான் என்பது என் கோபத்திற்கு இரண்டாவது காரணம்.

"வரட்டும் அவன்; உண்டு, இல்லை என்று ஆக்கிவிடுகிறேன்!" என்று நிர்மானித்துக் கொண்டேன்.

★

சேகரனுக்குத் தாயார் தகப்பனார் கிடையாது. அவன் மாமாதான் அவனை வளர்த்து வந்தார். அவனை பி. ஏ., வரையில் படிக்க வைத்து ஒரு வேலையும் செய்து வைத்தபின் அவர் நிம்மதியாகக் கண்ணை மூடினார்.


சேகரனும் நானும் சிறு வயதிலிருந்தே நண்பர்களாயிருந்தோம். ஒரே பள்ளிக்கூடத்தில் படித்த எங்களுக்கு, ஒரே ஆபீஸில் வேலையும் கிடைத்தது. சில மாதங்களிலேயே அவனை வட இந்தியாவுக்கு மாற்றி விட்டார்கள். போகும் பொழுது, "உனக்கு வாரம் ஒரு முறை விரிவாகக் கடிதம் எழுதுகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனவன், ஆறு மாதத்திற்கப்புறம் அன்றுதான் முதல் கடிதம் போட்டிருக்கான்.— அதுவும் எல்லாம் நேரில் சொல்வதாக!

வெள்ளிக்கிழமை லீவ் எடுத்துக் கொண்டு, நண்பனையும் அவன் புது மனைவியையும் எதிர்பார்த்தபடி வீட்டில் உட்கார்ந்திருந்தேன். அன்று மத்தியானம் இரண்டு மணிக்கு வாசலில் குதிரை வண்டி வந்து நின்றது. சேகரனுடன் வண்டியிலிருந்து இறங்கிய பெண்ணைக் கண்டதும், "எவளோ ஹிந்துஸ்தானிக்காரியைக் கல்யாணம் செய்து கொண்டு வந்திருக்கிறானே!" என்று நான் எண்ணினேன்.

அவர்களை வரவேற்று உள்ளே போனதும், என் மனைவியைக் காப்பி தயார் செய்யச் சொல்லி விட்டு, கூடத்தில் அமர்ந்தோம். அதுவரை மௌனமாயிருந்த சேகரன், "என் மேல் உனக்கு ரொம்பக் கோபம்; இல்லையா?" என்று கேட்டான்.

"பின்னே இல்லாமலென்ன? வாரம் ஒருமுறை கடிதம் எழுதுகிறேன் என்று சொல்லிப் போனவன், ஆறு மாதம் கழித்து ஒரு கடிதம் போட்டிருக்கிறாய்! உன் கல்யாண விஷயத்தைப் பற்றியாவது எனக்குத் தெரிவித்தாயா? அதுவும் இல்லை" என்றேன் நான் மனத்தாங்கலுடன்.

அவன் சிரித்துக்கொண்டே, "கோபம் வேண்டாம், துரை! உனக்கு விரிவாகக்



ராமன்:—ஸார், கிருஷ்ணன் என்னைக் கேலி பண்ணுகிறான்.

வாத்தியார்:—என்னடா கேலி பண்ணினான்?

ராமன்:—"வாத்தியார் மூக்குமாதிரியே யிருக்குடா உன் மூக்கு" என்கிறான், ஸார்!

காந்திஜி பக்த சபா - வெள்ளி விழா

(ஸ்தாபிதம்: 1919)

செயின்ட் மேரிஸ் ஹால்

30-9-44 முதல் 9-10-44 வரை (பத்து தினங்கள்)

30-9-44 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு

கானகலாதர ஸ்ரீ மதுரை மணி ஐயர் — பாட்டு
திருவாங்கூர் சமஸ்தான வித்வான் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை — பிடில்
குற்றாலம் சிவ வடிவேல் பிள்ளை — மிருதங்கம்
மதராஸ் ஸ்ரீ வேணு நாயக்கர் — கஞ்சிரா

1-10-44 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு

இசைவாணி வசந்த குமாரி — பாட்டு
ஆர். எஸ். கோபால கிருஷ்ணன் — பிடில்
தஞ்சாவூர் கிருஷ்ணமூர்த்தி ராவ் — மிருதங்கம்

1-10-44 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு

சங்கீத வித்வான் சித்தூர் சுப்ரமண்யம் பிள்ளை (தக்க பக்க வாத்தியங்களுடன்) பாட்டு

(காந்திஜி பிறந்த தினம்) 2-10-44 திங்கட்கிழமை மாலை 6-10 மணிக்கு

சங்கீத ரத்னாகர அரியக்குடி ராமாநுஜ அய்யங்கார் — பாட்டு
மைசூர் சமஸ்தான வித்வான் டி. சௌடையா — பிடில்
திருவாங்கூர் சமஸ்தான வித்வான் பாலக்காடு மணி ஐயர் — மிருதங்கம்
திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் பழனி சுப்ரமண்யம் பிள்ளை — கஞ்சிரா

3-10-44 செவ்வாய்க்கிழமை மாலை 6-10 மணிக்கு

சங்கீதபூபதி மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயர் — பாட்டு
மைசூர் சமஸ்தான வித்வான் டி. சௌடையா — பிடில்
திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் பழனி சுப்ரமண்யம் பிள்ளை — மிருதங்கம்
சென்னை வில்வாத்திரி அய்யர் — கடம்

4-10-44 புதன்கிழமை மாலை 6-10 மணிக்கு

திருவாங்கூர் சமஸ்தான வித்வான் ஜி. என். பாலசுப்ரமண்யம் — பாட்டு
மைசூர் சமஸ்தான வித்வான் டி. சௌடையா — பிடில்
திருவாங்கூர் சமஸ்தான வித்வான் பாலக்காடு மணி அய்யர் — மிருதங்கம்
சென்னை வேணு நாயக்கர் — கஞ்சிரா

5-10-44 வியாழக்கிழமை மாலை 6-10 மணிக்கு

பால வேணுகான டி. ஆர். மஹாலிங்கம் — புல்லாங்குழல்
திருவாங்கூர் சமஸ்தான வித்வான் ராஜமாணிக்கம் பிள்ளை — பிடில்
திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் பழனி சுப்ரமண்யம் பிள்ளை — மிருதங்கம்

6-10-44 வெள்ளிக்கிழமை மாலை 6-10 மணிக்கு

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் — பாட்டு
சென்னை கோவிந்தசாமி நாயகர் — பிடில்
சென்னை எஸ். வி. எஸ். நாராயணன் — மிருதங்கம்
சென்னை வில்வாத்திரி ஐயர் — கடம்

7-10-44 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு

என். நடராஜ், ஏ. ஆர். சகுந்தலை அவர்கள் கோஷ்டியாரால் இந்திய நடனங்கள்

8-10-44 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு

கான சரஸ்வதி டி. கே. பட்டம்மாள் — பாட்டு
திருவள்ளூர் சுப்ரமண்யம் — பிடில்
கல்பாத்தி ராமநாத ஐயர் — மிருதங்கம்

வி. வி. சடகோபன், கே. பி. சுந்தராம்பாள், என். ஸி. வஸந்த கோகிலம்
இவர்களது பாட்டுக் கச்சேரிகளும் உண்டு.

9-10-44 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு


சபை அங்கத்தினர் 12-வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகளால் கிருஷ்ணார்ஜுன நாடகம்
புரோகிராம் சமயோசித மாறுதலுக்குட்பட்டது.

சீஸன் டிக்கெட்டுகள் (10-9-44) முதல் அடியில் கண்ட இடங்களில் கிடைக்கும்.

1. காந்திஜி பக்த சபா, 72, ஆசாரப்பன் தெரு, ஜார்ஜ் டவுன். 2. தோட்டம் எவரெஸ்ட், பெரியமேட், பார்க் டவுன். 3. வி. எஸ். குமாரசுவாமி அய்யர், தண்டையார்பேட்டை. 4. துர்க்கா பவுண்டரி, அம்மன் கோவில் தெரு, கொண்டித்தோப்பு.

கலைவள்ளல் எஸ். கே. சுந்தரம், தலைவர். டி. எஸ். எம். நாயுடு, காரியதரிசி.

முதல் நாளிரவே படுக்கப் போகுமுன் விடியற் காலை ஐந்து மணிக்கே படுக்கையை விட்டு எழுந்துவிட வேண்டுமென்று திட்டம் போட்டுக் கொள்கிறேன். அதற்காக அலாரம் கடியாரத்தைத் திருப்பி வைத்துவிட்டுக் காற்றோட வாசல் வராந்தாவில் போய்ப் படுத்துக் கொள்கிறேன். பொழுது விடிந்து கடியாரத்தில் மணி ஐந்து அடிக்கும் போது, முதல் நாளிரவு போட்ட திட்டத்தைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ளத் தோன்றுகிறது. எனவே, அரை மணி கழித்து எழுந்திருக்கலாம் என்று இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாகத் திரும்பிப் படுத்துக் கொள்கிறேன்.



சிறிது நேரத்துக்கெல்லாம் அன்றைய காலைப் பத்திரிகை என்மீது வந்து விழுகிறது. "இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுக்காம லிருப்பது அநீதி" என்று சர்ச்சில் துரையே பிரசங்கம் செய்திருந்தால் கூட அப்போது எனக்கு அதில் அவ்வளவு சுவாரஸ்யம் தட்டுவதில்லை. எனவே வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்துக்குத் திரும்பிப் படுத்துக் கொள்கிறேன். அப்போது அந்தக் காலைப் பத்திரிகை என் இடுப்பின்கீழ் அகப்பட்டுக் கொள்கிறது. அதையும் லட்சியம் செய்யாமல் எழுந்திருக்க வேண்டிய நேரத்தை அரை மணி, அரை மணியாகத் தள்ளிப் போட்டுக் கடைசியாக 8½ மணிக்குக் 'கடனே' என்று கண்களை விழித்துப் பார்க்கிறேன். பத்திரிகையின் ஞாபகம் வருகிறது. எழுந்து உட்கார்ந்து அதை எடுத்துப் படிக்கச் சோம்பல் பட்டுக் கொண்டு படுத்தவாறே இடுப்பின் கீழுள்ள அந்தப் பத்திரிகையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிய்த்துப் படிக்க ஆரம்பிக்கிறேன்! இதற்குள் மணி பத்துக்கு மேல் ஆகிவிடுகிறது. அப்புறம் முகூர்த்தம் முகூர்த்தம்தான்!

சோம்பேறிகள் கண்களை மூடி ஆனந்தப்படுகிற நேரம் விடியற் காலையில்தான்! என்னதான் கோழி கூவினாலும், குடுகுடுப்பாண்டி தொந்தரவு செய்தாலும், மனைவி, "காப்பி ஆறிப் போகிறது" என்று உயிரை வாங்கினாலும் ஏனோ எனக்குப் படுக்கையை விட்டுப் பிரிய மனம் வருவதில்லை!

ஒரு வேலையும் செய்யாது சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு நண்பர்களுடன் குஷியாகச் சம்பாஷித்துப் பொழுதை ஓட்டுவதில் ஏற்படும் ஆனந்தத்தை அனுபவித்துப் பார்த்தவர்கள், ஒரு நாளும் சோம்பல் வேண்டாம் என்று கூறமாட்டார்கள்.

சோம்பல் மனிதனுடைய வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான குணமாகும். தலை வலிக்குத் தலை எவ்வளவு அவசியமோ, பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஹிந்து முஸ்லிம் வேற்றுமை எவ்வளவு அவசியமோ, அதேமாதிரி மனிதனுக்குச் சோம்பலும் அவசியமாகும். ஆகையால், சோம்பலுக்கு ஒரு 'ஜே' போடுகிறேன். ஏன்? "சோம்பலோ, சோம்பல்!" என்று சந்தோஷ ஆரவாரமே செய்யக்கூடத் தயாராயிருக்கிறேன்!

சோம்பலோ சோம்பல்

சாவி

"அடே, ராமய்யரைப் போய்க் கூட்டிக் கொண்டு வாடா!"

"அவர் எங்கே இருப்பாருங்க?"

"கோடி வீட்டுத் தெருத் திண்ணையில் உட்கார்ந்திருப்பாருடா!"

"ஏன் சாமி, அங்கே அவர் இல்லாவிட்டால்?......"

"பின்னை யார் கோயிலண்டை இருப்பார்; அழைத்து வாடா."

"அங்கேயும் இல்லையென்றால்?..."

"வயல் காட்டில் இருப்பார்."

"வயல் காட்டிலும் இல்லாவிட்டால்?......"

"குளத்தங் கரையில் இருப்பார்!"

"குளத்தங் கரையிலும் இல்லையென்றால்?......"

"சும்மா திரும்பி வந்து தொலைடா!"

"அதற்கு நான் ஏன் சாமி போகணும்?"

●

கடைசியில் இப்படிக் கேட்ட அந்த வேலைக்காரன், முழுச் சோம்பேறி என்றாலும், மிகவும் புத்திசாலி! சோம்பேறிகளாயிருப்பவர்கள்தான் புத்திசாலிகளாயுமிருக்கிறார்கள். புத்திசாலிகளைத்தான் சோம்பலும் நாடுகிறது. சோம்பேறிகளைப் புத்திசாலித்தனம் விரும்புவது போல் கடவுளும் சோம்பேறிகளை விரும்புகிறார்.



"சோம்பரை உகத்தி போலும்
சூழ்புனல் அரங்கத்தம்மா......"

என்று தொண்டரடிப்பொடி ஆழ்வார் பாடியிருக்கிறார் அல்லவா? சோம்பல் உள்ளவர்களிடத்தில்தான் கடவுளுக்குப் பிரியம் அதிகமாம்.


கடவுளே சோம்பேறிகளை விரும்பும்போது அப்படிப்பட்ட சோம்பலை நாம் விரும்பாமலிருக்க முடியுமா?

எனவே, "சோம்பிக் கிடக்காதே; எறும்பைப் போல் உழை" என்று சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. இன்னும் பார்க்கப் போனால், எறும்பைப் போல் சோம்பேறி ஜந்துக்களை உலகத்தில் வேறு எங்கும் காண முடியாது. மழைக் காலத்துக்கு வேண்டிய ஆகாரத்தை முன்கூட்டியே சேர்த்து வைத்து விட்டு, மாரிக் காலம் ஆரம்பமானதும் அவை வளைகளில் படுத்துச் சுகமாகச் சோம்பிக் கிடக்கின்றன அல்லவா?

●

நான் ஒரு முழுச் சோம்பேறி என்பதை இப்போது சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (இவ்விடத்தில் நான் புத்திசாலி என்பதை நாசூக்காகச் சொல்லியிருப்பதை நேயர்கள் கவனிக்கவும்.)

'எனக்கு ஒரு கல்யாணத்துக்குப் போக வேண்டியிருக்கிறது. காலை ஆறு மணிக்கு முகூர்த்தம்.



இப்போது
சேமிக்கப்படும்
ஒவ்வொரு
ரூபாயும் . . .

யுத்தம் நின்றவுடன் அதிகப் பொருள் வாங்க உதவும். இப்போதுள்ள உயர்ந்த விலையில், நாம் கொடுக்கும் தொகைக்குத் தகுந்த அளவு பொருள்கள் கிடைப்பதில்லை யென்று சாதாரண அறிவு படைத்தவர்களுக்குக் கூடத் தெரியும். அன்றியும் விலைகள் குறைந்து கொண்டு வருகின்றன என்பதை நினைவில் வையுங்கள். ஒரு வருஷத்திற்கு முன்பு, துணி, உணவு தானிய வகைகள், மருந்து வகைகள் ஆகியவற்றின் விலைகளையும், இப்போது அவை விற்கும் விலைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அறிவாளி, பணத்தைச் சேமித்தான். ஆகவே, முன்னைவிட இப்போது குறைந்த விலைக்கு வாங்கக் கூடும். இப்போது இயன்றவரை சேமித்து சமாதானம் மீண்டும் ஏற்பட்ட பிறகு, உங்கள் பணத்தைக் கொண்டு இரண்டு மடங்கு பொருட்கள் வாங்குவதுதான், எல்லாவற்றைவிட மகா புத்திசாலித்தனமான காரியம்.

நீங்கள் சேர்த்து வைக்கும் தொகையை பத்திரமான வகையில் முதலீடு செய்கிறோமா என்பது பற்றி நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். இந்த காலத்தில் நகைகள், நிலம், கட்டடங்கள், செய்பொருட்கள், பண்டங்கள் முதலியவற்றின் மேல் போட்டு வைக்கும் தொகைகளால் கஷ்டந்தான். அவற்றின் விலைகள் அளவிற்கு மீறி அதிகமாயிருக்கின்றன. அவை என்றைக்காவது இறங்கத்தான் செய்யுமென்பது நிச்சயம்.

பத்திரமாயிருக்கும் பொருட்டும், தக்க பலனளிக்கும் பொருட்டும், பணத்தை சர்க்கார் கடன் பத்திரங்களிலும் தேசிய சேமிப்பு சர்ட்டிபிகேட்டுகளிலும், இன்ஷுரன்ஸ்களிலும், கூட்டுறவு சங்கங்களிலும், தபாலாபீஸ் சேமிப்பு நிதியிலும் போட்டு வையுங்கள்.

உங்களால் இயன்றவரை
மிச்சப் படுத்துங்கள்.
மிச்சப் படுத்தியதை முதலீடு செய்யுங்கள்.

தேசியப் போர்முனையார் விடுக்கும் தேசிய வேண்டுகோள்

AAA 1113 TM



முதல் ஆள்:—இப்படிச் சண்டை போடுகிறார்களே, அவர்கள் மேலே ஒரு கல்லை விட்டு எறியலாமா?

சரமாக ஒருவன் உள்ளே புகுந்துவிட்டான். மருதப்பனுக்கு மூக்குக்குமேல் கோபம் வந்துவிட்டது. அவன் முன்போல் பெண்டாட்டிக்குப் பயந்த மருதப்பனா என்ன, கோபம் வராமலிருப்பதற்கு? அவன்தான் சிப்பாய் மருதப்பனுச்சே! ஆகவே, அதிகாரத் தொனியில் "டேய், நான் கீழே இறங்குவதற்குள் ஏண்டா ஏறினாய்?" என்று சொல்லி மருதப்பன் அவனுடன் சண்டைக்குப் போனான்.

அந்த ஆசாமி காக்கி உடைக்குப் பயந்தவனாகத் தெரியவில்லை. அவன் மருதப்பனை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டே, "சர்க்கார் உன்னை ஜப்பான்காரனுடன் சண்டை போடச் சொன்னார்களா? இல்லை, என்னுடன் சண்டை போடச் சொன்னார்களா?" என்று கேட்டான்.

அதைக் கேட்ட மருதப்பன் ஆத்திரமடைந்து, அவனைப் பிடித்து இழுத்துக் கீழே விட்டான். அந்த ஆசாமி அவனை அனாயாசமாகத் தள்ளிவிட்டு, மீண்டும் ரயிலில் ஏறப்போனான். அவனை மருதப்பன் பிடித்து இழுக்க, மருதப்பனை அவன் பிடித்து இழுக்க, அதனால் அங்கு ஒரு பெரிய அமளி ஏற்பட்டுவிட்டது.

போலீஸார் விரைந்து வந்தனர். அவர்கள் மருதப்பனைச் சில கேள்விகள் கேட்டதும், அவன் உண்மையில் பட்டாளத்தில் சேர்ந்தவனல்ல என்பதும், போலி வேஷதாரி என்பதும் வெளியாகிவிட்டன. அதனால் குற்றம் சாட்டப்பட்டு மருதப்பன் பாதுகாப்பில் வைக்கப்பட்டான்.

3

மருதப்பன் ஒரு சிப்பாயினுடைய உடையை அணிந்துகொண்டு போலியாக நடித்திருக்கிறான் என்பது சந்தேகமில்லாமல் தெரிந்து விட்டது. அதனால் அவனுக்கு ஆறுமாதக் கடின காவல் தண்டனை விதிக்கப் போவதாக நீதிபதி கூறினார். மருதப்பன் மிகவும் பயந்து போய்விட்டான். அவனால் அழுகையை அடக்க முடியவில்லை. விஷயத்தைச் சொல்லித் தன்னை மன்னிக்கும்படி நீதிபதியைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று அவன் நினைத்தான்.

"சாமி, நான் எல்லாவற்றையும் ஒளிக்காமல் சொல்லி விடுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று அவன் ஆரம்பித்தான். "என் வீட்டுக்காரி எனக்கு அடங்கி நடக்கிறதே இல்லை. என்னை மிரட்டிக் கொண்டேயிருந்தாள். அவளை அடக்குவதற்கு என்னென்னமோ செய்து பார்த்தேன்; முடியவே யில்லை. ஊரெல்லாம் என்னைப் பெண்டாட்டிக்குப் பயந்தவன் என்று பரிகாசம் செய்தார்கள். அதனால்தான் ஒரு யுக்திசெய்து இப்படி வேஷம் போட்டேன். இந்தச் சிப்பாய் உடையைக் கண்டு அவள் அடங்கி விட்டாள். நான் பேசாமல் வீட்டிலேயே அவளை மிரட்டிக் கொண்டிருக்காமல் இங்கு வந்தது பிசகாய்ப் போய்விட்டது. சிப்பாய் உடை அணியவே எனக்குத் தலைகிறுக்கு வந்து இப்படிச் செய்து விட்டேன். என்னை மன்னிக்க வேணும். இனிமேல் இப்படிச் செய்யவே மாட்டேன்" என்று கையெடுத்துக் கும்பிட்டான்.

"ஆ! அப்படியா? இந்தக் காக்கி உடைக்கு அவ்வளவு சக்தி யிருக்கிறதா? அடடா! இத்தனை நாள் எனக்குத் தெரியாமல் போய்விட்டதே" என்றார் நீதிபதி.

"ஊஹூம், இத்தனை நாளாய் வேஷம் போட்டுக்கொண்டா என்னை ஏமாற்றினாய்? வா வீட்டுக்கு, அப்புறம் பேசிக்கிறேன்" என்று கர்ஜித்தாள் நியாயஸ்தலத்திற்கு வெளித் தாழ்வாரத்திலிருந்த மருதப்பன் மனைவி.

"ஐயோ! என் பெண்டாட்டி எப்படியோ இங்கே வந்து விஷயத்தைத் தெரிந்து கொண்டாளா? அப்படியானால் எனக்கு மன்னிப்பு வேண்டவே வேண்டாம். சாமி! அதற்குப் பதிலா இந்த ஆறுமாதத் தண்டனையை ஆறு வருஷமாகச் செய்து விடுங்க" என்று நீதிபதியைப் பார்த்துக் கெஞ்சினான் மருதப்பன்.

"இது நல்ல யோசனைதான். ஆனால் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டதாகச் சொல்லிக்கொண்டு இங்கேயே இருந்தால் குட்டு வெளியாய் விடுமே?"

"அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். 'ஜப்பான்காரன் நம்ம தேசத்துக் குள்ளே கால் வைப்பதற்குப் பயந்து கொண்டு கிடக்கிறான். அதனாலே புதிசாச் சேர்ந்த சிப்பாய்களுக்கெல்லாம் ஆறு மாசம் லீவ்' என்று நான் சொல்லி விடுகிறேன். நம்ம ஊர்க்காரர்கள் நான் இப்போ என்ன சொன்னாலும் நம்பி விடுவார்கள். உனக்கு அதைப்பற்றிக் கவலையே வேண்டாம். ஆறு மாதத்துக்கு மிரட்டி அடக்கி வைத்திருந்தால் பிறகு உன் பெண்சாதி எப்பவும் பயந்து நடப்பாள். அப்புறம் அதிகாரம் பண்ணவே தைரியம் வராது."

மருதப்பனுக்கு வந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. தனது தீராத கவலையெல்லாம் அப்பொழுதே தீர்ந்துவிட்டதாக நினைத்துத் தன் நண்பனை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டான். "சின்னப்பா, இது ரொம்ப நல்ல யோசனை. இன்றைக்குச் சாயங்காலமே நாம் பழனிக்குப் போவோம், வா! நம்ம காரியத்தையும் பார்த்துக் கொள்ளலாம். சாமி தரிசனமும் செய்து கொள்ளலாம்" என்றான் மருதப்பன் குதூகலமாக.

2

சின்னப்பனுடைய யுக்தி பூரண திருப்தியுடன் வேலை செய்கிறது. மருதப்பன் இப்பொழுது வீட்டில் சர்வாதிகாரம் நடத்துகிறான். அவன் காக்கி உடை அணிந்து கொண்டு கையில் ஒரு சிறு பிரம்புடனும் காலில் ஆணியடித்த பூட்ஸுடனும் டக்டக் என்று நடப்பதைப் பார்த்து அவன் மனைவிக்குப் பயம் தட்டிவிட்டது. இதுவரை கேலி செய்து கொண்டிருந்த ஊர் ஜனங்களெல்லாம் இப்பொழுது மருதப்பனை மரியாதையோடு சென்று பார்க்கலானார்கள். அவன் சண்டை தீர்ந்து வந்தவுடன் அந்த ஊரிலுள்ள புறம்போக்கு நிலமெல்லாம் அவனுக்கே கிடைக்குமென்றும், அதனால் அவன் பெரிய பண்ணைக்காரனாகி விடுவானென்றும் எல்லோரும் பேசிக் கொண்டார்கள். "மருதப்பன் என்னமோ அப்பாவி மாதிரி இருந்தான்; வாஸ்தவத்திலே அவன் மகா தைரியவான். அவனை அந்தச் சிப்பாய் உடையிலே பார்ப்பதற்கே பயமாயிருக்கிறது!" என்று அவர்கள் வெளிப்படையாக ஒருவருக் கொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

பத்து நாட்கள் இவ்வாறு கழிந்தன. பிறகு ஒரு நாள் மருதப்பன், சின்னப்பனுக்குத் தெரியாமல் சிப்பாய் உடையணிந்து கொண்டு ஈரோட்டிற்குப் புறப்பட்டான். காட்டுப் பாளையத்திலிருந்து பத்து மைல் தூரத்தில் உள்ள நகரம் ஈரோடு. அதற்கு ரயிலில் போவதுதான் சுலபம். அவன் ரயிலில் ஏறி உட்கார்ந்த பிறகு அதே பலகையில் யாரும் உட்காரத் துணியவே யில்லை. ஜோராக மருதப்பன் காலை நீட்டிப் படுத்துக் கொண்டான். அந்தச் சமயத்தில் அவனுக்குத் தன்னை ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு சிப்பாய் ரயிலில் ஏற முயன்ற போது பிடித்து உந்தியது ஞாபகத்திற்கு வந்தது. அதை இப்பொழுது நினைத்தபோது அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. "இன்றைக்கு அப்படி என்னை யார் தள்ள முடியும்? நான் வேண்டுமானால் யாரையும் கல்தா கொடுக்கலாம்" என்று பெருமையாக எண்ணிக் கொண்டான்.

ரயில் ஈரோடு ஜங்ஷனில் வந்து நின்றது. ரயில் மேடையில் எங்கும் ஒரே கூட்டம். எல்லோரும் ஒருவருக்கு முன் ஒருவராக ரயிலில் ஏறி இடம் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று தயாராக இருந்தார்கள். மருதப்பன் இறங்குவதற்குள்ளாக, அவசரம் அவ



சிப்பாய் மருதப்பன்

— பெ. தூரன்

"நீ இருக்கும் வரையிலாவது எனக்கு ஏதாவது வழி சொல்லிக்கொண்டிருந்தாய்; இப்போது அதற்கும் ஒருவருமில்லை. என் தலைவிதி அப்படி இருக்கிறது" என்றான் மருதப்பன்.

அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்த துயரம் அவன் வார்த்தையில் தொனித்தது.

"சும்மா கவலைப்படாதே. இன்னும் ஒரு மாதத்திற்கு நானிருக்கிறேன். அதற்குள் உன்னுடைய துன்பமே தீர்ந்து போகும்படி ஒரு நல்ல தோது சொல்லுகிறேன்" என்றான் சின்னப்பன்.

சின்னப்பன் இப்பொழுது சிப்பாய் உடையில் காட்சி யளிக்கிறான். இரண்டாவது உலக மகா யுத்தத்தில் நேசக் கட்சியில் அவன் ஒரு வீரன். அவன் சைன்யத்தில் சேர்ந்து ஆறு மாதங்களாகி விட்டன. ஒரு மாத லீவில் அவன் இப்பொழுது சொந்த ஊருக்கு வந்திருக்கிறான்.

"அவளைக் கண்டாலே எனக்கென்னமோ பயமாயிருக்கிறது. ஊரெல்லாம் இது தெரிந்து போய்விட்டது. எல்லாரும் என்னைப் பெண்டாட்டிக்குப் பயந்தவன் என்று கேலி பண்ணுகிறார்கள்" என்றான் மருதப்பன்.

"உனக்கு நான் ஒரு நல்ல தந்திரம் சொல்லிக் கொடுக்கிறேன். அதன்படி நடந்தால் நிச்சயம் உன் கஷ்டம் தீர்ந்து விடும். வீட்டில் நீ ராஜாமாதிரி இருக்கலாம்."

"அதுதான் நான் வேணுமென்று கேட்கிறேன். சொல்லேன், பார்க்கலாம்."

"இந்த இரண்டு நாளாய்ப் பார்த்தாயா? எத்தனை பேர் என்னை வந்து பார்க்கிறார்கள்! என்னைக் கண்டாலே எல்லோரும் பயப்படுகிறார்கள்; எழுந்து நின்றுகொள்ளுகிறார்கள். இதெல்லாம் எதனால் தெரியுமா? எல்லாம் இந்த ராணுவ உடையினால்தான். முன்னெல்லாம் என்னை யாராவது ஒரு பொருட்டாக மதித்தார்களா? கிடையாது. காக்கி உடை போட்டுக்கொண்டு, காலில் பூட்ஸ் மாட்டிக் கொண்டு டக் டக் என்று நடந்தால் தன்னைப் போல எல்லாரும் மதிக்க வேண்டாமா! இந்தக் காக்கி உடைக்கு இத்தனை மகிமை இருக்குமென்று எனக்கு இதுவரையில் தெரியாது. நீயும் இதைப் போட்டுக்கொண்டு காலில் பூட்ஸ் மாட்டிக் கொண்டு டக் டக் கென்று நடக்க ஆரம்பித்தால் உன் பெண்சாதி தன்னைப்போல் அடங்கி விடுவாள்."

"ஆமாம், அதைப் போட்டுக் கொள்வதென்றால் பட்டாளத்தில் சேரவேணுமே?"

"நீ ஒன்றும் சேரவேண்டாம். பேசாமல் என்னுடன் ஒரு வாரத்திற்கு வா. இரண்டு



பேரும் எங்காவது தலைமறைவாக ஒரு ஊருக்குப் போய்விடுவோம். அங்கே உனக்கு இந்த உடையைப் போட்டுக்கொண்டு எப்படி நடக்கிறதென்று சொல்லிக் கொடுக்கிறேன். பிறகு, இங்கே வந்து நீயும் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டதாகச் சொல்லிக்கொண்டு அவளை மிரட்டி விடலாம்."

இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் பாஸிசத்திற்கு விரோதிகள். ஜப்பானில் இருப்பதுபோல ஒரு சர்வாதிகாரி, சுதந்திர இந்தியாவிற்கு இருக்க முடியாது. இராணுவம் வியாபாரம் என்னும் இரட்டை சர்வாதிகாரியால் ஆளப்பட்டு வரும் ஒரு நாடு சுயேச்சை வழங்குவதாகக் கூறுவது கேலிக் கூத்தாகும். அது ஒரு சுத்தப் பொய். ஜப்பானியரிடமிருந்து எவ்வித உதவியும் நமக்கு வேண்டாம்.

வெற்றி வழியே விடுதலை

AAA 1018 T M

இதைக் கவனிக்க வேண்டும். அறிவு அடைய வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் உயர்குல அகம்பாவத்தை ஒழித்து உபநிஷத்தில் சொல்லிய வண்ணம் குரு எந்தக் குலமாயினும் வணக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

"அரசனும் யாதொரு மந்திர பூர்வ சடங்குமின்றி உபதேசம் செய்ய ஆரம்பித்தான் என்று உபநிஷத்தில் சொல்லியிருப்பதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், அறிவு பெற்றவன் தகுந்தவர்களுக்குத் தடையும் தாமதமும் இன்றி உபதேசிக்க வேண்டும். இது அறிவு படைத்தவனுடைய கடமை. உபநிஷத்துக் கதையில் இந்தத் தத்துவம் கிடக்கிறது."

"இவ்வாறே சங்கராச்சாரியர் எழுதியிருக்கிறாரா? அல்லது இது உங்கள் வியாக்கியானமா?" என்று ராஜசேகரன் கேட்டார்.

"இவ்வாறே தம் நூலில் சங்கராச்சாரியர் எழுதியிருக்கிறார். என் சரக்கு அல்ல. ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாகவே எழுதிய நூலில் இவ்வாறு எழுதியிருக்கிறார். சீர்திருத்தத்துக்காகக் கிளர்ச்சி செய்கிறவர்கள் நம்முடைய முன்னோர்களைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும்."

நண்பர் ராஜசேகரன் கொஞ்சம் தணிந்தார்.

"எல்லாவற்றுக்கும் வேதமே பிரமாணம் என்கிறீர்களே, அப்படி வைத்துக் கொண்டால் ஸையன்ஸ், பூகோளம், சரித்திரம் எதும் வேண்டாமே? புது ஆராய்ச்சிக்கு இடமே இல்லையல்லவா? கிரகணம் பிடித்தால் பாம்பு சூரியனைப் பிடித்துக் கொண்டது, பூனை குறுக்கே ஓடினால் போன காரியம் கெட்டுப் போகும் என்றெல்லாம் அல்லவோ வேதம் சொல்லுகிறது? இதைப் பற்றியெல்லாம் உங்கள் சங்கராச்சாரியர் என்ன சொல்லுகிறார்?" என்றார்.

"அவ்வாறெல்லாம் வேதத்தில் சொல்லவில்லை. பாம்பு சூரியனை விழுங்குவதாகச் சொல்லிக் கொண்டே நம்மவர்கள் அப்படி விழுங்குவதைக் கணக்குப் போட்டு எந்தத் தேதியில் எந்த மணியில் சம்பவம் நடக்கும் என்பதைக் கண்டு சொல்லியும் வருகிறார்கள் அல்லவா? பகவத்கீதை வியாக்கியானத்தின் முடிவில் ஒரு விஷயம் சங்கராச்சாரியர் எழுதியிருக்கிறார். அதைக் கேட்டால் ஆச்சரியப்படுவீர்" என்றேன்.

"சொல்லும் கேட்கலாம்" என்றார் வாலிபர்.

"வேதத்திலிருந்து மேற்கோள் எடுத்துச் சொல்லி ஆட்சேபிப்பவர்களைப் பற்றிச் சொல்லுகிறார்:

கண்ணால் கண்டோ, அல்லது வேறு வழியில் பிரத்தியட்சமாக நாம் சந்தேகமின்றி அறியக்கூடிய விஷயத்தில் சுருதியைப் பிரமாணமாக எடுத்துக் காட்டுவது தவறான முறை. லௌகிக அறிவினால் காணமுடியாத விஷயங்களுக்குத் தான் சுருதிப் பிரமாணம். நெருப்பு குளிர்ந்திருக்கும், அல்லது வெளிச்சம் இருண்டு கொண்டிருக்கும் என்று நூறு சுருதி வாக்கியங்கள் தேடி எடுத்துச் சொன்னாலும் அவை பிரமாணம் அல்ல. அவ்வாறு வேதத்தில் சொல்லியிருந்தாலும் அதைக் கவனிக்க வேண்டியதில்லை. அல்லது பதங்களுக்குச் சாத்தியமான வேறு பொருள் கொடுத்துப் படிக்க வேண்டும்."

ராஜசேகரன் எழுந்து நின்றார். முகத்தில் மகிழ்ச்சிக் குறி கண்டேன்.

"நம்முடைய பெரியோர்கள் அறிவுப் பிரமாணங்களைப் பற்றியும் ஜாதி உயர்வு தாழ்ச்சியைப் பற்றியும் இப்படியெல்லாம் எழுதியிருக்கிறார்களா?" என்றார்.

"நம்முடைய அறிவீனமும் சோம்பலுமே நம்முடைய தாழ்ச்சிக்குக் காரணம். நம்முடைய முன்னோர்கள் எழுதிய உபநிஷத்திலாவது வேறு நூல்களிலாவது உண்மை ஆராய்ச்சிக்கும் உண்மை அறிவைப் பின்பற்றி வாழ்க்கை நடத்துவதற்கும் எவ்விதத் தடையும் கிடையாது" என்றேன்.

பழைய வேதாந்த நூல்களில் அக்காலத்தில் ஜனங்கள் நம்பிய லௌகிக விஷயங்களை உதாரணமாகவோ, அல்லது விளக்க முறையில் சேர்த்தோ சொல்லியிருக்கலாம். ஆனால் அந்த விஷயங்களைப் பற்றி சுருதி வாக்கியமே பிரமாணம் என்பது, அவற்றைப் பற்றிப் புதிய ஆராய்ச்சியே கூடாது என்பது, அல்லது ஆராய்ச்சிப் பயனை ஒப்புக் கொள்ளுவது சநாதன தருமத்திற்கு விரோதம் என்பது சாஸ்திரத்தில் சொல்லப்படவில்லை.

வேதமும் வேதாந்தமும் லௌகிகத்திற்கு உட்படாத விஷயத்தைப் பற்றிய சாஸ்திரம். லௌகிக விஷயங்கள் லௌகிக ஆராய்ச்சியின் முடிவையே பொருந்தியிருக்க வேண்டும். ஆராய்ச்சியின் பயனாக முன்னால் ஜனங்கள் நம்பியது பின்னால் தள்ளப்படலாம். வேதமாவது வேதாந்தமாவது அதைத் தடுக்கவில்லை. வேதாந்தத்துக்கும் புதிய லௌகிக அறிவுக்கும் யுத்தம் கிடையாது. உண்மையே பிரதானமாகக் கொண்டது வேதாந்தம். "உண்மையே வெற்றி அடையும், உண்மையே ராஜ பாட்டை" என்பது உபநிஷத்து வாக்கியம்.

என்று அவரும் சேர்ந்து எல்லாருமாக அசுவபதியிடம் போனார்கள்.

அசுவபதி ஒரு க்ஷத்திரியன். சிற்றரசன். வந்த பிராமணர்களுக்கு அவன் முறைப்படி மரியாதையும் உபசாரமும் செய்தான். "ஐயன்மீர்! உங்கள் தவம் சரியாக நடைபெறுகிறதா? என் சிறு நாடு உங்கள் அநுக்கிரகத்தால் அறம் வழுவாமல் காப்பாற்றப்பட்டு வருகிறது. திருடர்கள், லோபிகள், குடியர்கள், கல்வி பெறாத மூடர்கள், ஒழுக்கம் கெட்டவர்கள், யாருமே நகரத்திலாவது கிராமங்களிலாவது கிடையாது. ஆகையால் ஒழுக்கம் தவறிய ஸ்திரீகள் இல்லை என்று நான் சொல்லவும் வேண்டியதில்லை. நான் ஒரு யாகம் நடத்த எண்ணியிருக்கிறேன்."

"வந்ததா யாகம்?" என்றார் ராஜசேகரன்.

"அவசரப்பட வேண்டாம், கேளும்" என்று சொல்லிக் கதையைத் தொடர்ந்தேன்.

• • •

"இந்தச் சமயத்தில் நீங்கள் வந்தது என் பாக்கியம்" என்றான் அசுவபதி.

"நீங்கள் இருந்து இந்த யாகத்தை நடத்திக் கொடுத்துத் தக்ஷிணை பெற்றுப் போக வேண்டும். வழக்கம்போல் குறைவு இல்லாமல் செய்வேன்."

பிராமணர்கள், "அரசனே! நாங்கள் வந்த காரியம் வேறு. நீர் பரம்பொருளைப் பற்றி ஞானம் அடைந்திருக்கிறீர் என்று கேள்விப்பட்டு உபதேசம் பெற வந்தோம்" என்றார்கள்.

"நாளை பேசலாம்" என்றான் அசுவபதி.

மறுநாள் அதிகாலையில் பிராமணர்கள் எழுந்து குருவின்முன் சீடர்கள் நிற்பது போல் க்ஷத்திரியனான அசுவபதியின் முன் பிராமணர்களும் உத்தாலகரும் கையில் விறகுக் குச்சிகள் வைத்துக் கொண்டு வணங்கினார்கள். இது அந்த நாட்களில் வழங்கி வந்த சீடர்களுடைய பண்பாடு.

அரசனும் உபதேசத்துக் குரிய பூர்வ சடங்குகள் ஏதும் இன்றி பிராமணர்களுக்கு உபதேசித்தான்.

"உம்முடைய வாதத்தின் பொருள் தெரிந்தது. உபநிஷத்தில் இம்மாதிரி இருந்தாலும் இருக்கலாம். ஆனால் பிற்பாடு வியாக்கியானம் செய்தவர்கள் எல்லாவற்றையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி யிருக்கிறார்களே, அதற்கென்ன செய்வது?" என்றார் ராஜசேகரன்.



"ஸார்! பையன் ஏதாவது விஷமம் பண்ணி உங்களுக்குத் தொந்தரவு கொடுத்தால் என்னிடம் சொல்லுங்கோ!"

"ஏன் இப்படிச் சொல்கிறீர்? வியாக்கியானம் செய்திருப்பவர்களில் ஒருவர் சங்கராச்சாரியர். அவர் ஒன்றும் உபநிஷத்தைக் கெடுக்கவில்லையே?" என்றேன்.

"சங்கராச்சாரியர் அத்துவைதம் ஸ்தாபித்துவிட்டுப் புகழ் பெற்றார். ஆனால் ஆசாரங்கள் விஷயத்தில் அவர் என்ன சொல்லுகிறார்? பழைய பாடம் தானே?" என்றார்.

"புகழ் பெறுவதற்காக ஏதோ செய்துவிட்டுப் போய்விடவில்லை சங்கராச்சாரியர்" என்றேன் கொஞ்சம் கோபமாக.

"இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் வியாக்கியானத்தில் மழுப்பித்தான் இருப்பார்" என்றார் ராஜசேகரன்.

"அவர் எழுதி யிருப்பதைக் கேட்க விரும்பினால் சொல்லுகிறேன்" என்றேன்.

"தமிழில் சொல்லுங்கள்" என்றார் ராஜசேகரன், வடமொழியின் பேரில் தனக்குள்ள வெறுப்பைக் காண்பிக்க.

• • •

"ஏதேனும் ஒரு காரியத்தின் பொருட்டு ஒருவன் மற்றொருவனிடம் போனால் உடனே தெளிவாக இன்ன காரியத்தின் பொருட்டு வந்தேன் என்று சொல்ல வேண்டும். இதுதான் பண்பட்டவர்களின் ஆசாரம். அதை அநுசரித்து இந்தப் பிராமணர்கள் அசுவபதியிடம் தாங்கள் சென்ற நோக்கத்தை உடனே விவரமாகச் சொன்னார்கள். வேதம் ஓதிய உயர் குலத்தவர்கள் ஜாதி அகம்பாவத்தை ஒழித்துத் தங்களை விட ஒரு படி தாழ்ந்த குலம் என்று கருதி வரப்பட்ட க்ஷத்திரியனைக் கையில் சமித்து எடுத்து வணங்கி நின்றார்கள்.

உண்மையே ராஜபாட்டை

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

என் வாலிப நண்பர் ராஜசேகரன் எஞ்ஜினீரிங் காலேஜில் படித்து வருகிறார். தீவிர சீர்திருத்தக்காரர்.

"கோபித்துக் கொள்ளாமலிருந்தால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். வேதாந்த ஆராய்ச்சியிலும் பழைய குப்பைகளிலும் ஏன் வீணாகப் பொழுது போக்குகிறீர்? புராணக் கதைகளில் என்ன இருக்கிறது? ஜாதி வித்தியாசங்களை ஒழித்தாலொழிய நமக்கு விமோசனம் கிடையாது" என்றார் ஒரு நாள், மாலை கடற்கரை மணலில் நான் நடந்து கொண்டிருந்தபோது என்னை அவ்விடம் சந்தித்து.

"பழைய புஸ்தகங்களில் ஒன்றும் அவ்வளவாக தவறுகள் இல்லையே? புதிய புஸ்தகங்களிலுங்கூட நூற்றுக்கு முப்பது பங்கு பொய்யும் வீணும் தானே இருக்கிறதாகத் தோன்றுகிறது" என்று மெதுவாகச் சொல்லிப் பார்த்தேன்.

"பிராமண குலத்தின் லாபத்திற்காகவே எழுதியிருக்கும் இந்த நூல்களை ஏன் இன்னும் கட்டிக்கொண்டு அழுகிறீர்?" என்றார் எஞ்ஜினீர் ஆகப் போகிறவர்.

"எந்தப் புஸ்தகத்தைப் பற்றிச் சொல்லுகிறீர்? ராமாயணமா? கீதையா? பாரதமா?" என்றேன்.

"எல்லாவற்றையும் பற்றித்தான் சொல்லுகிறேன். உங்கள் உபநிஷத்தைப் பற்றியும் தான்" என்றார்.

ஒரு கட்டுமரம் மணலில் அமிழ்த்துப் போட்டிருந்தது. அதன் மேல் சௌகரியமாக உட்கார்ந்தோம்.

"உபநிஷத்தில் என்ன இருக்கிறது? எவ்விடத்தில் எடுத்துப் பார்த்தாலும் யாகங்கள் செய்வதைப் பற்றித்தான் இருக்கிறது" என்றார் ராஜசேகரன்.

"அந்தக் காலத்தில் யாகங்கள் செய்து கொண்டிருந்தார்கள். ஆதலால், அதைப் பற்றிச் சொல்லி யிருப்பதில் என்ன பிசகு? இந்தக் காலத்துப் பத்திரிகைகளில் கிரிக்கெட்டைப் பற்றியும் ஸினிமாவைப் பற்றியும்தானே பத்தி பத்தியாக எழுதப்படுகிறது? ஆனால் உபநிஷத்தின் விஷயம் வேறு" என்றேன்.

"உபநிஷத்தில் யாகங்கள் செய்யச் சொல்லித் தானே எழுதி யிருக்கிறார்கள்?"

"இல்லவே இல்லை. யாகங்கள் செய்யச் சொல்லவும் இல்லை; பிராமணர்களுக்காகப் பொய்ப் பட்ச பாதமும் உபநிஷத்தில் இல்லை" என்று அழுத்தமாகச் சொன்னேன்.

அதன்மேல் சாந்தோக்ய உபநிஷத்திலிருந்து ஒரு கதை எடுத்து அவருக்குச் சொன்னேன்.



* * *

ஐந்து பிராமணப் பண்டிதர்கள் பரம்பொருளைப் பற்றி உபதேசம் பெறுவதற்காக உத்தாலகர் என்ற ஒரு பெரியாரிடம் சென்றார்கள். உத்தாலகர், "என்னைவிட அதிகம் தெரிந்த அசுவபதியிடம் போகலாம், வாருங்கள்"

வேலைப் போலவே அவ்வளவும் செய்திருக்கிறார்கள். என்னையே அவர்கள் ஏமாறச் செய்து விட்டார்கள். வடநாட்டுக்கு நான் யாத்திரை சென்றபோது என்னிடம் கொடுக்கப்பட்ட வேல் என்னுடைய சொந்த வேல்தான் என்று எண்ணி நான் ஏமாந்து போனேன். இங்கே திரும்பி வந்ததும் தான் என்னுடைய வேலை மாமல்லர் பத்திரமாய் வைத்திருந்தார் என்று தெரிந்தது. அந்த வேலின்மேல் ஆணை வைத்து நாங்கள் இருவரும் ஏகாம்பரர் சந்நிதியில் சிநேகப் பிரதிக்ஞை செய்து கொண்டோமே, தங்களுக்குத் தெரியுமா?'' என்று பரஞ்சோதி வினவினான்.

''தெரியும், தளபதி! தெரியும். உன்னைப் போன்ற சிநேகிதன் கிடைத்திருக்கும்போது மாமல்லன் இன்னும் உற்சாகக் குறைவாயிருக்கும் காரணம் தான் எனக்கு விளங்கவில்லை.''

''எட்டு மாதமும் வீணில் கழித்ததாக மாமல்லர் எண்ணுவது பெரும் பிசகு, அம்மா! கோட்டை மதில் பாதுகாப்புக் காரியம் மட்டுமல்ல; கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தமாக்க இன்னும் எவ்வளவோ செய்திருக்கிறார். காஞ்சி ஜனங்களுக்கு இரண்டு வருஷங்களுக்குத் தேவையான தானியங்கள் சோழ நாட்டிலிருந்து வந்து சேர்ந்திருக்கின்றன. நகருக்குள்ளிருந்து அநாவசியமான ஜனங்கள் எத்தனையோ பேரை வெளியேற்றியாகிவிட்டது. முக்கியமாக, காஞ்சி நகருக்கே ஒரு அவலட்சணமாயிருந்த காபாலிகர்களை வெளியேற்றியது பெரிய காரியம். அதற்குக் குமார சக்கரவர்த்தி வெகு நல்ல யுக்தியைக் கையாண்டார். தேவி! காஞ்சியிலுள்ள மதுபானக் கடைகளையெல்லாம் மூடிவிட வேண்டும் என்று நேற்றைய தினம் கட்டளை போட்டார். இன்றைக்கு அவ்வளவு காபாலிகர்களும் கையில் மண்டை ஓட்டையும் மாட்டுக் கொம்பையும் எடுத்துக் கொண்டு வடக்குக் கோட்டை வாசல் வழியாகப் போய் விட்டார்கள்......!''

இப்படிப் பரஞ்சோதி சொல்லிக் கொண்டே வருகையில் அந்தப்புரத்துச் சேடி ஒருத்தி, அரண்மனை முன்கட்டிலிருந்து உள்ளே வந்து, சக்கரவர்த்தினியின் அருகில் நின்று மெதுவான குரலில் ஏதோ கூறினாள்.

அதைக் கேட்ட தேவியின் முகத்தில் வியப்புக் குறி தோன்றிற்று.

''மாமல்லா! அப்பாவிடமிருந்து செய்தியுடன் சத்ருக்னன் வந்திருக்கிறானாம்!'' என்றாள்.

மாமல்லர் விவரிக்க முடியாத பரபரப்புடன் எழுந்து போக முயற்சித்தபோது, ''குழந்தாய்! சத்ருக்னன் இங்கேயே வரட்டும். செய்தி என்னவென்று நானும் தெரிந்து கொள்கிறேன்'' என்றாள் அன்னை.






கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழியைத் தூர்க்கப் போகிறார்கள். அல்லது பெரிய பெரிய மரங்களை வெட்டிக் கொண்டு வந்து பாலம் போடப் போகிறார்கள். போட்டு விட்டுக் கோட்டைக் கதவுகளைத் தகர்க்க யானைகளை ஏவப்போகிறார்கள்! அந்த யானைகளுக்கு முதலில் மதுவைக் கொடுத்து விட்டுத்தான் ஏவுவார்கள்! ஆனால், ஆகா! அந்த யானைகள் எப் பேர்ப்பட்ட அதிசயத்தை அநுபவிக்கப் போகின்றன? கோட்டை வாசலின் மேல் மண்டபத்திலிருந்தும் பக்கத்து மதில் சுவர்களின் மேலிருந்தும் வஜ்ராயுதம் விழுவது போல் வேல்கள் வந்து அவற்றின் தலைமீது விழும் போது, அந்த மதுவுண்ட யானைகள் பயங்கரமாய்ப் பிளிறிக் கொண்டு திரும்பி ஓடி, வாதாபி வீரர்களைத் துவைத்து நாசமாக்கப் போகிற காட்சியை நினைத்துப் பார்க்கையிலேயே எனக்குச் சிரிப்பு வருகிறது, தேவி! இது மட்டுமா? மேலேயிருந்து விழுகிற வேல்களுக்குத் தப்பிச் சில யானைகள் வந்து கதவிலே மோதக் கூடுமல்லவா? அதனால் கோட்டைக் கதவு பிளக்கும் போது தான் அந்த யானைகளின் அதிசயம் அளவு கடந்ததாகப் போகிறது! வெளிக் கதவு பிளந்ததும், உள்ளே நீட்டிக் கொண்டிருக்கும் வேல் முனைகள் அவற்றின் மண்டையைப் பிளக்கும்போது, ஆகா! அந்த யானைகள் வந்த வேகத்தைக் காட்டிலும் அவை திரும்பி ஓடும் வேகம் அதிகமாயிராதா?" என்றான் பரஞ்சோதி.

"அப்படியா? கோட்டையின் வெளிக் கதவுக்கு உள்ளே இன்னொரு கதவு போட்டிருக்கிறதா?" என்று மாமல்லரின் அன்னை கேட்டாள்.

அதுவரையில் மௌனமாயிருந்த மாமல்லர் அப்போது சம்பாஷணையில் சேர்ந்து, "ஆம், அம்மா! வெளிக் கதவுக்குப் பின்னால், வேல் முனைகளை நெருக்கமாய்ப் புகுத்திய இன்னொரு கதவு அமைத்திருக்கிறது. அதோடு இல்லை; மூன்று கோட்டை வாசல்களிலும் மேற்படி கதவுக்குப் பின்னால் சுவரே எழுப்பியாகி விட்டது. வடக்கு வாசல் ஒன்றில்தான் சுவர் எழுப்பவில்லை. ஆனால் அந்த வாசல் கதவுகளுக்குப் பின்னால் கையில் வேல் தாங்கிய பதினாயிரம் வீரர்கள் ஆயத்தமாய் நின்று கொண்டிருப்பார்கள்!... இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் மூல காரணம் யார் தெரியுமா? நமது தளபதி பரஞ்சோதிதான்! இவர் முதல் முதலில் காஞ்சியில் புகுந்த அன்று மதயானையின் மேல் வேலை எறிய, யானை திரும்பி ஓடிற்றல்லவா? அன்றைக்குத் தானே சளுக்கர் படையெடுப்பைப் பற்றியும் செய்தி வந்தது? மறுநாளே இந்தக் காஞ்சிமா நகரிலுள்ள கொல்லர்கள் எல்லாரும் வேல் முனைகள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்! தளபதி அன்று செய்த காரியத்தினால்தான், வாதாபியின் யானைப் படையை எதிர்ப்பதற்கு யோசனையே அப்பாவின் மனதில் உதயமாயிற்றாம். இதையெல்லாம் அப்பாவே என்னிடம் சொன்னார்!" என்று மாமல்லர் பெருமையுடன் கூறிப் பரஞ்சோதியை அன்புடன் தழுவிக் கொண்டார்.

"தேவி! இந்த எட்டு மாதத்தில் காஞ்சி நகர்க் கொல்லர்கள் செய்திருக்கும் வேலையை நேற்று நான் பார்த்தேன். லட்சோப லட்சம் வேல்களைச் செய்து குவித்திருக்கிறார்கள். காஞ்சி நகர்க் கொல்லர்கள் வெகு கெட்டிக்காரர்கள், அம்மா! நான் கொண்டு வந்திருந்த சோழ நாட்டு





முடிந்து விடவில்லையே? இன்னும் ஆரம்பமாகக் கூட இல்லையே? மகாபாரத யுத்தத்தைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பெரிய யுத்தம் இனிமேல் தானே நடக்க இருக்கிறது? மாமல்லர் வீரச் செயல்கள் புரிவதற்கு இனிமேல்தானே சந்தர்ப்பங்கள் வரப்போகின்றன?" என்றான்.

"போதும், போதும்! எத்தனை யுத்தம் நடந்தால்தான் என்ன? எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம் வந்தால்தான் என்ன? அப்பா என்னை இந்தக் கோட்டைக்குள்ளேயே பூட்டி வைக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்?" என்று மாமல்லர் கொதிப்புடன் கேட்டார்.

புதல்வனின் மனோ நிலையைக் கண்ட அன்னை பேச்சை மாற்ற விரும்பி, "கோட்டையைப் பத்திரப் படுத்துவதற்கு மாமல்லன் செய்திருக்கும் காரியங்களைப் பற்றிச் சொன்னாயே? அப்படி என்னென்ன செய்திருக்கிறான், சொல் பார்க்கலாம்!" என்றாள்.

"தேவி! நமது கோட்டையின் அகழியைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?"

"ஆமாம்; எட்டு மாதங்களுக்கு முன்பு பார்த்திருக்கிறேன். சக்கரவர்த்தி புறப்பட்டுச் சென்ற பிறகு நான் அரண்மனையை விட்டு வெளிக் கிளம்பவே இல்லை."

"நானும் எட்டு மாதங்களுக்கு முன்பு பார்த்ததுதான். முன்னே பார்த்தபோது சிறு கால்வாய் மாதிரி இருந்தது. இப்போது பார்த்தால் சமுத்திரம் மாதிரி அலை மோதிக் கொண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் முதலைகள் வாயைப் பிளந்து கொண்டு காணப்படுகின்றன. வாதாபியின் சைன்யத்தில் எத்தனை பேருக்கு இந்த அகழியில் மோட்சம் கிடைக்கப் போகிறதோ, தெரியவில்லை!" என்றான் பரஞ்சோதி.

"அகழியில் அவர்கள் இறங்கினால் தானே? பாலங்கள் அமைத்துக் கொண்டு வந்தால்? அல்லது படகிலே வந்தால்?"

"தேவி! அகழியின் அருகில் வருகிறவர்கள் மீது அம்புகளைப் பொழிய ஆயிரம் வில் வீரர்கள் மதிள் சுவர்கள்மீது மறைந்து காத்திருப்பார்கள்! அப்படியும் அகழியைத் தாண்டி வருகிறவர்களுக்கு, மதிள் சுவருக்கும் அகழிக்கும் மத்தியில் எத்தனையோ அதிசயங்கள் காத்துக் கொண்டிருக்கும். வெளிக்குத் தெரியாத பள்ளங்களில் அவர்கள் விழுந்து காலை ஒடித்துக் கொள்வார்கள். ஆங்காங்கே கண்ணுக்குத் தெரியாதபடி விரித்திருக்கும் வலைகளிலும் பொறிகளிலும் சிக்கிக் கொள்வார்கள். இதையெல்லாம் மீறி வந்து, மதிள் சுவர்மேல் ஏற முயற்சிக்கும் சளுக்க வீரர்களின் தலைகளின் மீது மதிள் சுவரின்மேல் வைத்திருக்கும் பாறாங் கற்கள் உருண்டு விழும்! ..."

"வாதாபி சைன்யம் கடலைப்போல் பெரியதென்று சொல்கிறார்களே, பரஞ்சோதி! லட்சக் கணக்கான வீரர்கள் மனது வைத்தால் அகழியை ஆங்காங்கே தூர்த்து வழி ஏற்படுத்திக் கொள்ளலாமே?"

"ஆமாம், தேவி! அகழியைத் தூர்க்கலாம்; ஆனால் கோட்டை மதிளை அவ்வளவு சுலபமாக இடிக்க முடியாதே!"

"கோட்டை வாசலுக்கு எதிரே அகழியைத் தூர்த்துக் கொண்டு யானைகளை ஏவினால், என்ன செய்கிறது, தளபதி? மத்தகஜங்களின் தாக்குதலுக்கு எதிரே கோட்டைமரக் கதவுகள் என்ன செய்யும்?" என்று பட்டமகிஷி கேட்டபோது, பரஞ்சோதி எதையோ நினைத்துக் கொண்டவன்போல் சிரித்தான்.

"அப்பா! ஏன் சிரிக்கிறாய்?"

"தாங்கள் கேட்டதை நினைத்துத் தான் சிரிக்கிறேன். உண்மைதான், தேவி! வாதாபி வீரர்கள் அப்படித் தான் செய்யப் போகிறார்கள். நமது

மதிநுட்பத்தையும் தீர்க்காலோசனையையும் பற்றிப் பேசுகிறபோது, எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிகிறது!" என்று மாமல்லர் கூறுகையில், அவருடைய கண்கள் நெருப்புத் தணலைப் போல் சிவந்து தீப் பொறியைக் கக்கின.

"குழந்தாய்! வீணாக அலட்டிக் கொள்ளாதே! கங்கபாடி ராஜாவின் நீசத்தனமான காரியத்தை நினைத்தால் எனக்கும் கோபமாய்த்தானிருக்கிறது! அதற்காக என்ன செய்யலாம்? எதற்கும் காலம் வரவேண்டுமல்லவா?" என்றாள் புவனமகாதேவி.

"தேவி! துர்விநீதனுக்குத் தக்க தண்டனை கொடுக்க இதற்குள்ளாகவே சக்கரவர்த்தி திட்டம் போட்டிருப்பார்; சந்தேகமில்லை" என்றான் பரஞ்சோதி.

"சக்கரவர்த்தி திட்டம் போட்டிருப்பார்; அதை நிறைவேற்றவும் செய்வார். ஆனால் நான் ஒருவன் எதற்காக யுவ மகாராஜா, குமார சக்கரவர்த்தி, மஹா மல்லன் முதலிய பட்டங்களைச் சுமந்து கொண்டிருக்கிறேன்? — அம்மா! சக்கரவர்த்தி போர்க்களம் போன உடனே தொண்டை நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி அனுப்பினார் அல்லவா? ஒவ்வொரு கோயிலிலும் பாரத மண்டபம் கட்டி மகா பாரதம் படிக்கும்படி கட்டளை அனுப்பினாரல்லவா? அநேக நாள் நானும் ஏகாம்பரர் கோயிலுக்கும் திருமேற்றளிக் கோயிலுக்கும் போய்ப் பாரதம் கேட்டேன். பாரதத்தில் விராட ராஜன் மகன் உத்தரகுமாரன் என்று ஒரு மகா வீரன் வருகிறான். விராட ராஜன் சைன்யத்துடன் வேறு பக்கம் போருக்குச் சென்றிருக்கையில் இன்னொரு பக்கத்தில் துரியோதனன் படையெடுத்து வந்ததை அறிந்து உத்தர குமாரன் தான் ஒருவனாகவே அந்தப் படையை எதிர்ப்பதற்குச் செல்கிறான். ஆனால் படையைப் பார்த்ததும் பயந்துபோய்த் தேரிலிருந்து குதித்து ஓடி வருகிறான். அந்த உத்தர குமாரனை விடக் கேடானவன் ஒருவன் உண்டு என்றால், அவன் நான்தான். உத்தர குமாரனாவது போர்க்களத்துக்குப் போய்விட்டுத் திரும்பி ஓடி வந்தான். நானோ அரண்மனையை விட்டு வெளிக் கிளம்பவே இல்லை. மகாபாரதக் கதையை எழுதியது போல் இந்தக் காலத்துக் கதையை யாராவது எழுதினால், என்னுடைய வீரத்தையும் தீரத்தையும் எவ்வளவு பாராட்டுவார்கள்; அம்மா! ஆனாலும், நான் சாந்தமாயிருக்க வேண்டுமென்று நீங்கள் இருவரும் சேர்ந்து உபதேசிக்கிறீர்கள். நான் எப்படிச் சாந்தமாயிருப்பது?" என்று கூறிய போது, மாமல்லரின் கண்களில் நீர் தளும்பி நின்றது.


அவருடைய முகத்தை நெருக்கு நேர் பார்க்க முடியாதவனாயிருந்த பரஞ்சோதி, சக்கரவர்த்தினியை நோக்கி, "தேவி! பல்லவ குமாரர் தம்மை உத்தர குமாரனுடன் ஒப்பிட்டுக் கொள்வது கொஞ்சமும் பொருத்தமாயில்லை. மற்ற எல்லாரும் போருக்குப் போனபோது உத்தரகுமாரன் என்ன செய்து கொண்டிருந்தான்? தன்னுடைய தங்கை உத்தர குமாரி நாட்டியம் கற்றுக் கொள்வதைப் பார்த்துக் கொண்டு காலங் கழித்தான். மாமல்லர் அப்படிக் காலங் கழிக்கவில்லையே!" என்றான். இவ்விதம் அவன் சொல்லி வருகையில், இயற்கையாக அந்த மூன்று பேருக்கும் சிவகாமியின் நாட்டியக் கலை விஷயம் ஞாபகம் வந்தது.

போர்க்களத்துக்குப் போகாத இந்த எட்டு மாதங்களில் தாம் ஆயனர் வீட்டுக்குப் போய்ச் சிவகாமியின் நடனத்தையும் பார்த்துக் கொண்டு காலம் போக்கியிருந்தால் நிலைமை இன்னும் எவ்வளவு கேவலமாகியிருக்கும் என்று எண்ணியபோது மாமல்லரின் முகம் சுருங்கியது.



பரஞ்சோதியும் தான் நடனக் கலையைப் பற்றிப் பிரஸ்தாபித்தது தவறு என்பதை உணர்ந்து கொண்டு, "மேலும், யுத்தம் ஒன்றும் இப்போது

கிறாரே? அவர் குறைப்படுவதில் நியாயம் ஒன்றுமே இல்லை. கோட்டை மதில், நகரம் எல்லாவற்றையும் நான் நன்றாய்ச் சுற்றிப் பார்த்தாகி விட்டது. இந்தக் காஞ்சிக் கோட்டையை ஏறக்குறையப் புதிய கோட்டையாகவே செய்து விட்டிருக்கிறார். தேவேந்திரனும் விருத்திராசுரனும் சேர்ந்து படையெடுத்து வந்தால் கூட இப்போது காஞ்சிக் கோட்டைக்குள்ளே அவர்கள் புக முடியாது. வாதாபி புலிகேசியும் தலைக்காட்டுத் துர்விநீதனும் என்ன செய்துவிடப் போகிறார்கள்?" என்று தளபதி பரஞ்சோதி கூறினான்.



"கோட்டையை அவ்வளவு பலப்படுத்த மாமல்லன் அப்படி என்னென்ன காரியங்கள் செய்திருக்கிறான்? நீதான் எனக்குச் சொல்ல வேண்டும், பரஞ்சோதி! மாமல்லனிடம் நான் ஏதாவது கேட்டால் எரிந்து விழுகிறான்; எனக்கு ஒன்றுமே சொல்லுவதில்லை. அந்தப்புரத்திற்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டிய அபலை ஸ்திரீக்கு யுத்த விஷயங்கள் எல்லாம் என்ன தெரியப் போகிறது என்று அவனுக்கு எண்ணம்!" என்றாள் மகேந்திர பல்லவரின் பட்டமகிஷி.

"அம்மா! எனக்கு அதைப் பற்றிப் பேசப் பிடிக்காததின் காரணம் உங்களுக்குத் தெரியாதா? அந்தப்புரத்தில் அடைபட்டுக் கிடக்கும் அபலை ஸ்திரீ உண்மையில் தாங்களா? நானல்லவா பெண்ணிலும் கேடானவனாகக் கோட்டைக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறேன்! ஆகா! மகேந்திர பல்லவர் இப்படி என்னை வஞ்சிப்பார் என்று நான் நினைக்கவில்லை!" என்று கூறி மாமல்லர் கைகளைப் பிசைந்து கொண்டார்.

"குழந்தாய்! உன் தந்தையைப் பற்றி எதுவும் சொல்லாதே! அவர் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அது முன் யோசனையுடனும், தீர்க்க திருஷ்டியுடனும் இருக்கும்..." என்று புவனமகாதேவி கூறுவதற்குள் பரஞ்சோதி, "உண்மை, தேவி! உண்மை! இதை நானே நேரில் கண்டு சொல்கிறேன். மகேந்திர சக்கரவர்த்தியைப்போல் மதிநுட்பமும், முன்யோசனையும் உள்ளவர்களை ஈரேழு பதினாலு உலகத்திலும் காண முடியாது என்று நான் சத்தியம் செய்வேன். அவர் ஏதாவது கட்டளையிட்டால், அதில் கட்டாயம் நியாயம் இருக்கத்தான் இருக்கும்!" என்றான்.

"அழகுதான்; ஒருவருக்கு இரண்டு பேராய்ச் சேர்ந்து கொண்டீர்கள் அல்லவா? அப்படியென்றால் நானும் உங்களோடு சேர்ந்து கொள்கிறேன். மகேந்திர பல்லவர் ரொம்பவும் முன்யோசனையுடன் காரியங்களைச் செய்கிறவர்தான்; சந்தேகமில்லை. ஆனால் அவருடைய தந்தை சிம்மவிஷ்ணு மகாராஜா இன்னும் அதிக முன்யோசனை உள்ளவர். வெகு வெகு தீர்க்கமான திருஷ்டி அவருக்கு இருந்திருக்க வேண்டும். ஆகையினால்தான் அவர் சளுக்கர்களையும் கதம்பர்களையும் விரோதித்துக் கொண்டு துர்விநீதனுடைய தந்தைக்குப் பட்டங் கட்டி வைத்தார். அவரே நேரில் தலைக்காட்டுக்குப் போயிருந்து தம் கையினாலேயே மகுடம் சூட்டினார்! அந்தக் காரியத்துக்கு எவ்வளவு நன்றாய் இப்போது துர்விநீதன் நன்றி செலுத்துகிறான் பாருங்கள்! சிங்கமும் சிங்கமும் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் போது நடுவில் நரி நுழைவதுபோல், புலிகேசி படையெடுத்திருக்கும் சமயம் பார்த்துத் துர்விநீதனும் பல்லவ ராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறான்! புலிகேசி காஞ்சிக்கு வருவதற்குள் தான் முதலில் வந்து சேர்ந்து விட்ட பெருமையை அடைய வேண்டுமென்று அவனுக்கு ஆசை போலிருக்கிறது! அவசர அவசரமாக எங்கும் இராத் தங்காமல் துர்விநீதன் தன் சைன்யத்துடன் வந்து கொண்டிருக்கிறான்! இது தெரிந்தும், நான் இந்தக் கோட்டைக்குள்ளே அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது! நீங்கள் சக்கரவர்த்தியின்



[பூர்வ கதை: காஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு பல்லவ சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த மகேந்திர வர்ம சக்கரவர்த்தியின் குமாரர் மாமல்ல நரசிம்மருக்கும், அரண்ய மத்தியில் வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்த ஆயனச் சிற்பியின் மகள் சிவகாமிக்கும் காதல் ஏற்பட்டு வளர்ந்து வருகிறது.

பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்த வாதாபி புலிகேசியின் சைன்யத்தை எதிர்ப்பதற்காக மகேந்திரர் பல்லவ சைன்யத்துக்குத் தலைமை வகித்து வடக்கே செல்கிறார். போகும்போது, தம் குமாரரிடம் காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போவதில்லையென்று வாக்குறுதி பெற்றுக்கொண்டு செல்கிறார்.

ஆயனச் சிற்பிக்காக அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து வரச் சென்ற பரஞ்சோதி என்னும் இளைஞன் வழியில் பல்லவ சைன்யத்தைச் சேர்ந்து அரும் பெரும் வீரச் செயல்கள் புரிகிறான். அவனைக் காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தமாக்கும் பொருட்டுச் சக்கரவர்த்தி அனுப்பி வைக்கிறார்.

பரஞ்சோதி மாமல்லரிடம் நட்புரிமை பூண்ட பின் ஆயனச் சிற்பியின் அரண்ய வீட்டுக்கு வந்து, எதிரி சைன்யம் நெருங்கி வருவதால் ஆயனரும் அவர் மகளும் ஒன்று காஞ்சிக் கோட்டைக்குள் வரவேண்டும் என்றும், இல்லாவிடில் சோழநாட்டுக்குப் போகலாமென்றும் தெரிவிக்கிறான்.

பரஞ்சோதியை ரதத்தில் ஏற்றிக் கொண்டு வந்த கண்ணபிரான் குமார சக்கரவர்த்தியிடமிருந்து சிவகாமிக்குக் காதல் ஓலை கொண்டு வந்து கொடுக்கிறான். அதைப் படித்த கிளர்ச்சியினால் சிவகாமி ஆனந்த பரவசமாக நடனம் ஆடுகிறாள்.

நாகநந்தி என்னும் புத்த பிக்ஷு, மாமல்ல நரசிம்மனைப் 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்று குறிப்பிட்டு, அவன் பல்லவ சிம்மாசனத்துக்குத் தகுதியற்றவன் என்று சக்கரவர்த்தி தீர்மானித்து விட்டதாகச் சொல்கிறார். இந்த வார்த்தைகள் உருக்கிய ஈயத்தைப்போல் சிவகாமியின் செவியில் விழுகின்றன. மாமல்லரின் காதல் ஓலையை நெருப்பில் இட்டு எரித்துவிட எண்ணிச் சிவகாமி அந்த ஓலையை வைத்திருந்த மரப் பொந்தில் போய்த் தேடுகிறாள். பொந்தில் ஓலையைக் காணவில்லை.

ஒற்றர் தலைவன் சத்ருக்னன் மேற்படி காதல் ஓலையைக் கவர்ந்து கொண்டு போய்ச் சக்கரவர்த்தியிடம் கொடுக்கிறான். அவருடைய கட்டளையுடன் காஞ்சிக்குத் திரும்புகிறான்.]

அத்தியாயம் 17

முற்றுகைக்கு ஆயத்தம்

கண்ணபிரானும் கமலியும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த அதே சமயத்தில் அரண்மனை அந்தப்புரத்தின் முன் வாசல் மண்டபத்தில் அமர்ந்து, மகேந்திர பல்லவரின் பட்டமகிஷியான புவன மகாதேவியும், மாமல்ல நரசிம்மரும், தளபதி பரஞ்சோதியும் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள்.

"தேவி! சென்ற எட்டு மாதங்களாக இந்தக் கோட்டைக்குள்ளே அடைபட்டுக் கிடக்க நேர்ந்ததின் பொருட்டுக் குமார சக்கரவர்த்தி ஓயாமல் குறைப்பட்டுக் கொண்டிருக்



சிறந்த சமையற்காரர்கள்

இப்பொழுது வேண்டுவது

காமதேனு

சாதாரண தினப்படி சமையலாக இருந்தாலும் சரி அல்லது விசேஷ விருந்துகளுக்கான பலகார வகைகளானாலுஞ்சரி, அவற்றின் இயற்கைச் சுவை மாறாமல் தயாரிக்க சிறந்த சமையற்காரர்கள் காமதேனுவையே விரும்புகிறார்கள். எந்த உணவையும் மணம் மாறாமல் தயாரிக்க உதவுவது காமதேனு. ஏனெனில் அது சுவையற்று மணமற்று இருப்பதால் உணவின் இயற்கை மணத்தைக் கெடாமல் காக்கிறது. மேலும் அதில் வைட்டமின்கள் மிகுந்திருப்பதால் ஆரோக்கியம் அளிக்க வல்லது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு; நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு.





சிறந்த சமையற்காரர்கள் வேண்டுவது

காமதேனு

வனஸ்பதி

தயாரிப்பவர்கள் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.

மேட்டூர்டாம் — தென்னிந்தியா

மானேஜிங் ஏஜண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.,
திருச்சிராப்பள்ளி.

சோல் விற்பனை ஏஜண்டுகள் :
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபூடர்ஸ் லிட்., 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.



அன்னை
கஸ்தூரி பா
ஞாபகார்த்த நிதிக்காக
ஸ்ரீமதி
எம். எஸ். சுப்புலக்ஷ்மி
இசைக் கச்சேரி

★

டவர் டாக்கீஸ் - தஞ்சாவூர்
ஞாயிறு 24-9-1944 மாலை 5-15 மணிக்கு

தஞ்சாவூர் ஜில்லா வாசிகளும் பக்கத்து ஜில்லாக்களிலுள்ளவர்களும் கச்சேரிக்கு விஜயம் செய்து அன்னை கஸ்தூரிபாயின் ஞாபகார்த்த நிதிக்குத் தாராளமாய்க் கைங்கர்யம் செய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

டிக்கெட் விவரங்கள் : ரூ. 25, ரூ. 10, ரூ. 5, ரூ. 2.

கச்சேரிக்கு ரூ. 100, நன்கொடை அளித்தவர்களுக்குத் தனி இடம் ரிஸர்வ் செய்யப்பட்டிருக்கிறது

கீழ்க்கண்ட இடங்களில் டிக்கெட்டுகள் கிடைக்கும் :

தஞ்சாவூர்
1. டவர் டாக்கீஸ்.
2. ஆனந்தா லாட்ஜ்.
3. ஸ்ரீ. டி. கே. சுப்ரமணியம், 'கல்கி' ஏஜண்டு.

கும்பகோணம்
1. டாக்டர் ஆர். மகாலிங்கய்யர் பச்சையப்ப முதலி தெரு.
2. ஸ்ரீ. வி. ராமசாமி முதலியார், B. A., B. L., வைஸ் - சேர்மன், முனிசிபல் கௌன்ஸில்.
3. மெஸர்ஸ் டி. எஸ். ஆர். & கோ.
4. ஸ்ரீ. எஸ். ஆராவமுதம், 'கல்கி' ஏஜண்டு.

மாயவரம்
1. ஸ்ரீ. வி. சாமி ஐயங்கார், பட்டமங்கலம் தெரு.
2. ஸ்ரீ. வி. கனகசபை செட்டியார், சேர்மன், முனிசிபல் கௌன்ஸில்.
3. ஸ்ரீ. ஏ. வி. வெங்கடராமன், 'கல்கி' ஏஜண்டு.


நாகப்பட்டணம்
1. ஸ்ரீ. ஏ. எம். பி. திருவம்பலம் செட்டியார், சேர்மன், முனிசிபல் கௌன்ஸில்.
2. மெஸர்ஸ், ராமன் & கம்பெனி, 'கல்கி' ஏஜண்டுகள்.

திருவாரூர்
1. ஸ்ரீ. துரைசாமி செட்டியார், முனிசிபல் கௌன்ஸிலர், விஜயபுரம்.
2. மெஸர்ஸ். ஏ. என். ரத்னம்&கோ. 'கல்கி' ஏஜண்டுகள்.

மன்னார்குடி
1. ஸ்ரீ. கே. எஸ். சாம்பசிவ ஐயர், குன்னியூர் ஹவுஸ்.
2. ஸ்ரீ. கே. எஸ். சுவாமிநாத உடையார், கீழ ராஜ வீதி
3. ஸ்ரீ. என். பழனிவேலு பிள்ளை 'கல்கி' ஏஜண்டு.

மைக், ஒலிபெருக்கி ஏற்பாடுகள் : திருச்சி ரேடியோ சேல்ஸ் & சர்வீஸ்

நமது பிரத்யேகப் படங்கள்



திரும்பி வரும் மகாத்மாவை வரவேற்க, பிர்லா மாளிகை வாசலில் ராஜாஜி தயாராய்க் காத்திருக்கிறார். பக்கத்திலிருப்பவர்கள் ஸ்ரீ ஆர். டி. பிர்லாவும் ஸ்ரீ கே.எம். முன்ஷியும். எது எப்படியானாலும், மகாத்மா உள்ள இடத்தில் மாலைப் பிரார்த்தனை நடக்கத் தவறுவதில்லை.

அப்போழுது, பம்பாய் வாசிகள் பதினாயிரக் கணக்கில் கூடுவதில் என்ன ஆச்சரியம்?





போட்டோ: எல்லிஸ் ஆர். டங்கன்

நமது பிரத்யேகப் படங்கள்








ஜனாப் ஜின்னாவை அவருடைய வீட்டிலே சந்திக்க மகாத்மா புறப்படுகிறார்.

ஜனாப் ஜின்னாவின் 'மவுண்ட் ப்லெஸண்ட்' என்னும் மாளிகையின் முன் வாசல்.

ஜனாப் ஜின்னாவும் அவர் சகோதரியும் "எப்போ வருவாரோ?" என்று எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

மகாத்மாவின் கரத்தைப் பிடித்துக் குலுக்கி ஜனாப் ஜின்னா நல்வரவு கூறுகிறார்.

காந்தி - ஜின்னா சந்திப்பு





"தேசத்தைப் பிரிக்கும் விஷயம் ஒருபுறம் இருக்கட்டும்; எங்களில் ஒருவரிடமிருந்து ஒருவரைப் பிரிக்கமுடியாது" என்று இரு தலைவர்களும் காமிரா முன் நிற்கிறார்கள்.

"முகத் தோற்றத்திலிருந்து எங்களைப் பிடிக்க முயல வேண்டாம்" என்று மகாத்மாஜி பத்திரிகை நிருபர்களைக் கேட்டுக் கொள்கிறார்.


முதல் நாள் பேச்சு முடிந்து, மகாத்மா புறப்பட்டு விட்டார்.



காந்தி - ஜின்னா சந்திப்பு







சந்திப்புக்கு மூல
காரண புருஷரான
ராஜாஜி முதல்
நாளே பம்பாய்
எக்ஸ்பிரஸில்
வந்து இறங்கினார்.
பம்பாய் மேயரும்
காங்கிரஸ் தலைவர்
களும் அவரை வர
வேற்றனர்.

மறுநாள் மகாத்
மாஜி பொதுஜன
நெருக்கத்தி
லிருந்து தப்புவதற்
காக தாதர்ஸ்டேஷ
னில் இறங்கினார்.
ஆனால் தம்
புகைப் படக்கார
ரிடமிருந்து அவர்
தப்ப முடியவில்லை.

வான சஞ்சாரம்

"இசைத் தேனீ"

இம்மாதம் 5வ. சென்னை நிலையத்தில் எஸ். சோமசுந்தரம் பாடினார். சிந்து ராமக்கிரியா, காம்போதி, ஸிம்மேந்திர மத்யமம் முதலிய ராகங்களை விஸ்தாரமாய்ப் பாடினார். 'பாலிந்துவலைவாணி' என்ற உருப்படியில் மேல் பஞ்சமம் வரை அநாயாசமான சஞ்சாரங்களுடன் நிரவல்களைக் கொட்டினார்.

அன்று மாலையிலும் இரவிலும் எம். கல்பகம் போற்றத்தக்க அமரிக்கையுடன் நின்று நிலைத்துப் பாடினார். சாவேரி, தன்யாசி, பூர்வகல்யாணி இவைகளோடு தோடியையும் விஸ்தாரமாய் விளம்பினார். 'கவிநீருமோ' என்ற உருப்படியில் கண்ட சங்கதிகளும் நிரவலும் தேர்முறையாயிருந்தன.

6வ. சென்னையில் எஸ். சங்கரன் பாடிய காம்போதி, பைரவி, கானமனோஹரி ராகங்கள் நல்ல வடிவங்கள் கொண்டிருந்தன. பிர்க்காவுக்கும் குறைவில்லை. 'நீ முத்துபோரு' என்ற கிருதியில் நிரவலும் ஸ்வரமும் படபடவென்று மழைபோல் பெய்தன. 'ஸாரஸதனயனே' என்ற உருப்படியில் ஊறுகாய்க்குக்கூட ஒரு பிர்க்கா இல்லை. அடுத்தபடியும் அழகான சஞ்சாரங்களுடனும் பாடினார். பாட்டுக்களைப் பல சுகமாய் அமைத்துக் கொள்ளும் நிச்சய ஞானமும் சாதகமும் கொண்டவர் என்று தெரிந்தது.

அன்றிரவு திருச்சியில் மாகூர் முத்துசாமி ஐயர் வயலின் தனிக் கச்சேரி செய்தார். தாம் இக்காலத்திய படபடப்பு சங்கீத வித்வான் கோஷ்டியைச் சேர்ந்தவரல்ல என்று நிரூபிப்பதற்காகவே ஆதிமுதல் அந்தம்வரை ராகம் உருப்படி எல்லா வற்றையும் சௌக்கமாய் வாசித்தார் போலும்! அவர் அன்று எடுத்துக் கொண்ட ராகங்களில் காம்போதியும் மணிரங்கும் மிகச் சிறப்பாய் விளங்கின. நீண்ட கார்வைகளும் கமகங்களும் நிறைந்திருந்தன.

7வ. சென்னை திருச்சி நிலையத்தார்கள் நம்மைக் கொஞ்சம் தர்மசங்கடத்தில் ஆக்கி விட்டார்கள். திருச்சியில் சாத்தூர் சுப்ரமணியம் கச்சேரி. சென்னையில் அதே வேளையில் எ. ஆர். சுந்தரத்துக்குப் பதிலாக வசந்தகுமாரியின் சங்கீதம். எதைக் கேட்பது? எப்படியோ அங்குமிங்குமாக சமாளித்தேன். சாத்தூர் சுப்பிரமணியத்துக்கு நடுத்தரத்துக்கு மேலான நய சாரீரம். மூன்று ஸ்தாயிகளிலும் தெளிவான சஞ்சாரம். அவசரமோ படபடப்போ கிடையாது. கமகப் பொழிவுடன் அனுபவித்துப் பாடினார். பேகடையை விஸ்தாரமாய் ஆலாபனை செய்து அதில் தானம் பல்லவியும் பாடிக் கச்சேரியைச் சிறப்பித்தார்.



வி. சங்கரன்

வசந்த குமாரிக்கோ சாரீரம் குளிர்ந்த தன்மையது. பாணி முடுக்கானது. வாகுவான பிடிகள். தைரியமும் நிச்சயமும் கொண்டவர். ராகங்களில் தெளிவு. உருப்படிகளில் ராகபாவப் பொழிவு. வேறென்ன வேண்டும்? மலைய மாருதத்துடன் சுகமாய் ஆரம்பித்தார். பைரவியில் ஒரு போடு போட்டார். [illegible] பைரவியில் [illegible] கொண்டு வரும் பாட்டுடன் கச்சேரியை [illegible] முடித்தார்.

8வ. திருச்சி நிலையத்தில் கேட்ட டி. எம். தம்மலவல்லியின் பாட்டு குறிப்பிடத்தக்கதாயிருந்தது. காம்போதி ராகமும் அதில் 'பதநி வருவது' என்ற பதமும் அழகாய் விளங்கின.

அன்று மாலையிலும் இரவிலும் திருச்சியில் நடந்த நடராஜசுந்தரம் பிள்ளையின் நாகஸ்வரக் கச்சேரி ஜோராயிருந்தது என்று சொல்லத் தேவையில்லை. பந்துவராளி மிகச் சிறப்பு வாய்ந்திருந்தது. ரதிபதிப்ரியா, வாசஸ்பதி, ஹனுமத்தோடி இவைகளையும் தேர்ந்தியாய் வாசித்தார். [illegible] வெகு ஆனந்தமாயிருந்தது.

9வ. சென்னையில் அறிவிக்கப்படும் கச்சேரி மகாவித்வத்தின் புன்னாகவராளி கச்சேரியாக அமைந்தது. அந்த பாலப் பையனின் வாசிப்பு கர்னாடிகமாக இருந்ததில் வியப்பு என்ன? பிலஹரி, சங்கராபரண ராகங்களுக்குப் பின் பைரவியைப் பல்லவி ராகமாய் எடுத்துக் கொண்டு சக்கைப்போடு போட்டார். 'எந்தா நினைதோ' என்ற கிருதியில் கண்ட ஸ்வரப்ரஸ்தாரம் அழகும் விறுவிறுப்பும் கொண்டு மனத்தைக் கவர்ந்தது.

10வ. சென்னையில் ஆர். தங்கம்மாள் ஸ்ரீவன் நிறைந்த சாரீரத்துடன் வராளி, விஜயநாகரி, அமிர்தவர்ஷினி என்ற அபூர்வ ராகங்களை சரளமாயும், விஸ்தாரமாயும் பாடிப் பிரமிக்கச் செய்து விட்டார்.

11வ. சென்னையில் நடந்த மன்னார்குடி சாம்பசிவய்யரின் கச்சேரி, சென்ற வாரக் கச்சேரிகளுக்கெல்லாம் சிகரமாய் விளங்கியது. தயாளமாய் இழையும் சாரீரம்; நானாக்கான பிடிகள்; பிர்க்காவே கிடையாது. அதிசௌக்கிய நடை; சாஹித்யத் தெளிவு; ராகபாவச் செழிப்பு. எல்லாம் பொருந்தியிருந்தன. 'கன்னட[illegible]ளை' ராகம் மிகச் சிறப்பாயிருந்தது [illegible] சங்கீதமயமாயிருந்தும் [illegible] [illegible]ங்காரங்களின் கருத்துக்களும் [illegible] ரதியில் தென்பட்டது. 'ராமசீதா' 'ஓ ஜக[illegible]' என்ற கிருதிகள் மனதைக்கவரும் வகைப்[illegible]ல் விளங்கின.

கேட்டுப் பாருங்கள்!

17வ. சென்னையில் ஸ்ரீமதி வி. ஆர். சந்திராவின் பாட்டைக் கேட்டுப் பார்க்கலாம்.

18வ. திருச்சியில் ஸ்ரீமதி வசந்த கோகிலத்தின் இன்னிசை.

19வ. சென்னையில் ஸ்ரீ பி. எஸ். ராஜு ஐயங்காரின் கச்சேரி; காது பத்திரம்!

20வ. சென்னையில் ஸ்ரீ ராமநாராயணன் இரவு 9-30க்கு விச்ராந்தியான நேரத்தில் பாடுகிறார்.

21வ. திருச்சியில் சேலம் ஸ்ரீ தேவிகள் பாடுகிறார். எல்லாம் புதிய தமிழ் சாஹித்யங்கள்.

23வ. சென்னையில் ஸ்ரீ வி. வி. சடகோபன் கச்சேரி; தக்க பக்க வாத்தியங்களும் உண்டு.

கோயமுத்தூர் கச்சேரியிலும் சபையோர் இவர்களுடைய வாசிப்பைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

மிருதங்கம் கஞ்சிரா தனி ஆவர்த்தனங்களின்போது சபையில் நிறுத்தச் சொல்வதற்காகச் சபையோர் கைதட்டிய காலம் மாறி, இப்போது தான வாத்தியங்களையும் இவ்வளவு தூரம் சபையோர் அநுபவிக்கும் காலம் வந்ததைக் கண்டதில் எனக்கு ஒரே குதூகலமாயிருந்தது.

* * *

ஸுஸ்வரிபா கச்சேரி வரிசையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் அஞ்சாவது கச்சேரி தஞ்சாவூரில் செப்டம்பர் 24உ நடக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவின் தேச பக்தியும் சங்கீத ரஸிகத் தன்மையும் பிரசித்தி பெற்றவை. தஞ்சாவூர்க்காரர்கள் மற்ற ஜில்லாக்காரர்களுக்கு ஒருக்காலும் பின் வாங்க மாட்டார்கள் என்பது என் நம்பிக்கை. எனவே, தஞ்சாவூரில் நடக்கும் அஞ்சாவது கச்சேரி பண வசூலிலும், பாட்டின் சிறப்பிலும் சிகரமாக விளங்குமென்று எதிர்பார்க்கிறேன்.



திருச்சி டாக்டர் ஓ. ஆர். பானு அவர்களின் குமாரி சௌபாக்கியவதி [illegible] மதுரை ஸ்ரீ. ஆர். மீனாக்ஷிசுந்தரமய்யர் குமாரர் ஸ்ரீ. எம். வெங்கட்ராமனுக்கும் ஆகஸ்டு 27-ம் தேதியன்று திருச்சியில் வெகு விமர்சையாகத் திருமணம் நடந்தது.

ஆகாச வெடி

"யுத்தத்துக்கு முன் வந்து கொண்டிருந்த அவ்வளவு கற்பூரமும் இப்போது எங்கே போகிறது என்று தெரியாமல் சென்னைக் கற்பூர வியாபாரிகள் கஷ்டப்படுகின்றனர்." —ஒரு செய்தி.

அது கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

★

"சென்னை லைட் ஹவுஸ் பத்து தினங்களாக எரிந்து கொண்டிருக்கிறது."

—ஒரு செய்தி.

அடாடா! ஏ. ஆர். பி. நெருப்பணைக்கும் படைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?

★

"திருப்பதி சிறையில் சிறைக் கம்பிகளுடன் மூன்று காவல் கைதிகள் தப்பி ஓடி விட்டனர். போலீஸார் புலன் விசாரித்து வருகிறார்கள்." —ஒரு செய்தி.

கைதிகள் எந்தக் கதி யானாலும், சிறைக் கம்பிகளுக்குப் புலன் அகப்பட்டு விடுமென்று நம்புகிறோம்.

★

"ஜனாப் ஜின்னா காந்திஜியுடன் பேச ஆரம்பித்ததும் ஜன்னல் கதவை மூடி விட்டார். இதனால் பத்திரிகை நிருபர்களால் ஒன்றும் கவனிக்க முடியவில்லை."

—ஒரு செய்தி.

பத்திரிகை நிருபர்கள் கவனிப்பதை ஜின்னா விரும்பவில்லை என்பதைக் கூடவா கவனிக்க முடியவில்லை?

★

"லார்டு வேவல் வைஸ்ராயாகும் முன்பு 'புலியின் வன்மை' என்றொரு கட்டுரை எழுதி அதற்காக ரூ. 2000 சன்மானம் வாங்கினார்." —ஒரு செய்தி.

அட பாவமே! பேசாமல் கட்டுரை எழுதி சம்பாதிப்பதை விட்டு எதற்காக வைஸ்ராயாக வந்து கஷ்டப்படுகிறார்?

★

"நேபாள மகாராஜாவுக்குச் சொந்தமான 55 புஸ்தகங்களைத் திருடியதற்காக ஒரு ஆளுக்கு 6 மாத தண்டனை விதிக்கப்பட்டது."

—ஒரு செய்தி.

திருடிய 55 புத்தகங்களையும் படிப்பதற்கு ஆறு மாதம் போதுமா?

சிந்தாமணி டாக்கிதான் தென்னாட்டிலேயே சிறந்த டாக்கிக் கொட்டகை என்று கருதுகிறேன். அவ்வளவு விஸ்தாரமாயும், அலங்காரமாயும் கட்டியிருக்கிறார்கள். அதில் அன்றைக்கு சங்கீத மேடையும் வெகு அழகாக அமைத்திருந்தார்கள். மின்சார விசிறிகள் சுழன்று கொண்டே இருந்தன. உட்காரும் வசதிகளுக்குக் குறைவில்லை. பாதிக் கச்சேரியில் மழை பிடித்துக் கொண்டு கொட்டியும் கூடக் கச்சேரிக்கு எவ்வித இடையூறும் ஏற்படவில்லை.

மூன்று இடங்களுக்குள்ளும் கோயமுத்தூரிலேதான் கூட்டம் அதிகம் என்று தோன்றியது. கொட்டகைக்குள்ளே எள்ளுப் போட்டால் விழாத கூட்டம். நூறு ரூபாய் கொடுத்தவர்களுக்குக் கூடப் பெரிய நாற்காலி கிடையாது. சின்னச் சின்ன நாற்காலிகளில் நெருக்கியே உட்கார்ந்திருந்தார்கள். கொட்டகைக்கு வெளியிலும் வாசற்படியை யடுத்து வரிசை வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். இப்படியிருந்தும் சபையில் ஒரு சின்னக் கலவரம், ஒரு சின்னக் கூக்குரல், ஒரு குழந்தை 'வீல்' என்று அழுவதுகூடக் கிடையாது. அவ்வப்போது உற்சாக கரகோஷத்தைத் தவிர மற்றப்படி ஒரே நிசப்தந்தான்.

ஸ்ரீ வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களின் வெகு நீளமான வந்தனோபசாரப் பேச்சின்போது கூட அந்தப் பெருங் கூட்டம் அமைதியாக இருந்தது.

கோயமுத்தூர் இவ்வளவு சபை நாகரிகத்திலும் சங்கீத ரஸிகத் தன்மையிலும் சிறந்து விளங்கும் என்பதாக நான் எதிர்பார்க்கவே யில்லை.

• • •

இந்த உத்தமமான கைங்கரியத்தில் பக்கவாத்தியம் வாசித்து உதவி புரிந்த வித்வான்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும்; அவர்களுடைய அதிர்ஷ்டத்தையும் பாராட்ட வேண்டும்.

பிடில் சங்கரய்யர் உயர்ந்த சங்கீத பரம்பரையில் வந்தவர்; கர்நாடக சுத்தமான தஞ்சாவூர் பாணியைக் கையாள்பவர். அதோடு, பரமசாது. அவருடைய சுபாவத்திலோ, வாசிப்பிலோ, முறுக்கு சிறுக்கு ஒன்றும் கிடையாது. பாட்டுக்கு ஒத்தாசையாகவும், சபைக்கு ரஞ்சகமாகவும் வாசித்துக் கச்சேரியை ஒப்பேற்றுவதில் எப்போதும் நிகர உடையவர். கஸ்தூரிபா நிதிக் கச்சேரிகள் எல்லாவற்றிலும் பக்க வாத்தியம் வாசித்து ஆயிரக்கணக்கான ரஸிகர்களின் பாராட்டுதலைப் பெற்ற பிடில் சங்கரய்யர் பாக்கியசாலி என்பதில் சந்தேகமில்லை.

அதே மாதிரி கல்பாத்தி ராமநாதனும் ஸ்ரீ வேணு நாயக்கரும் ஒருவரோடொருவர் போட்டி யிட்டுக்கொண்டு செய்த சேவையைப் பெரிதும் பாராட்டுகிறேன். இவர்களுடைய மிருதங்கத்துக்கும் கஞ்சிராவுக்கும் வெகு நல்ல பொருத்தம். இராமநாதனின் மிருதங்கத்தில் பல சமயம் பாலக்காட்டு மணியின் கை வேலைகளைக் காண்கிறோம்; மணியின் மதுர ஒலிகளையும் கேட்கிறோம். ஸ்ரீ வேணு நாயக்கரோ, பழைய பெரிய கை; இன்று கஞ்சிரா வாத்தியத்தில் ஏறக் குறைய இணையற்று விளங்குகிறார்.

இந்த இரண்டு பேரும் ஸ்ரீமதி எம். எஸ். பாடும் போது அவருடைய இனிய குரலுக்கு



மதராஸ் வேணு நாயக்கர்

மேலும் இனிமை கொடுக்கும் முறையில் அடக்கமாக வாசிக்கிறார்கள்.

தனி ஆவர்த்தனங்கள் வாசிக்கும்போது தங்களுடைய கைவரிசைகளைப் பூரணமாய்க் காட்டுகிறார்கள்.

திருச்சிராப்பள்ளிக் கச்சேரியில் இவர்கள் இருவரும் வாசித்த தனி ஆவர்த்தனத்தில் மாற்றி மாற்றிக் குறைத்துக்கொண்டு வந்து முடிவில் ஒன்று சேர்ந்து இடி இடித்து ஓய்வதுபோல் முத்தாய்ப்பு வைத்தபோது, ஹாலின் கொட்டகையே இடிந்துவிடும் போன்ற கரகோஷம் சபையில் ஏற்பட்டது. இரண்டாவது தனி ஆவர்த்தனத்துக்கும் இதே மாதிரி ஆரவாரமான பாராட்டுதல் அவர்களுக்குக் கிடைத்தது.



பிடில் சங்கரய்யர்

எம். எஸ். வின் கச்சேரி என்றால், சங்கராபரணம் இல்லாமல் பூர்த்தியாகாது என்று ஏற்பட்டுவிட்டது. எனவே, மூன்று கச்சேரிகளிலும் எம். எஸ். சங்கராபரண ராக ஆலாபனம் செய்தார். அதோடு,

"யாரோ என்றெண்ணாமலே
நானும் — இவன்
அதிசயங்களைச் சொல்லக்
கேளும்!"

என்னும் அருணாசலக் கவியின் ராம நாடகக் கீர்த்தனையையும் பாடினார். இந்தக் கீர்த்தனத்தில் சரணத்தில் வரும், "உங்கள்— பருத்த வில் இவன் கைக்குப் போதுமோ போதாதோ என்று—பார்க்க வேணுமென் றோர் ஆசை" என்னுமிடத்தில் நிரவல் செய்யும்போது தான், ஒவ்வொரு கச்சேரியும் உச்சத்தை யடைந்தது என்று சொல்லக்கூடியதா யிருந்தது.

"வாழ்க நீ எம்மான்" என்ற மகாத்மா வாழ்த்துப் பாட்டும் அவ்விதமே மூன்று கச்சேரிகளுக்கும் பொதுவா யிருந்ததுடன், கச்சேரி உன்னத சிகரத்தை யடைந்து பூர்த்தி பெறுவதற்குக் காரணமாயிருந்தது. இராக மாலிகையாக மேற்படி விருத்தத்தைப் பாடி, கடைசியில் மோகன ராகத்தில்,

"வாழிய வாழ்க காந்தி மகாத்மா நீ வாழ்க வாழ்க!" என்று உச்சஸ்தாயியில் முடித்த போது, சபையில் ரோமாஞ்சலி ஏற்பட்டுப் பரவசமடையாதவர்களே இல்லை யென்று சொல்லலாம்.

சபைகளின் அமைப்பைப் பொறுத்த வரையில், மூன்று இடங்களிலும் ஒவ்வொரு அம்சம் சிறப்பாக இருந்தது.

திருச்சியில் கூடிய சபையினர் உற்சாக முள்ள ரஸிகர்கள். நல்ல சங்கதிகளோ, அபூர்வமான பிடிகளோ விழும் ஒவ்வோ ரிடத்திலும் அவர்கள் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஸர் ஸி. வி. ராமன் ஒருசமயம் ஒரு சங்கீதக் கச்சேரியில் சபையைப் பார்த்துக் கோபமாகச் சொன்னார்:—"வித்வான் எவ்வளவு சிரமப்பட்டு எவ்வளவு நன்றாகப் பாடினாலும் நீங்கள் ஏன் கடப்பாரையை விழுங்கியவர்கள் போல் உட்கார்ந்திருக் கிறீர்கள்? உங்கள் கைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? ஏன் கையைத் தட்டி உங்கள் சந்தோஷத்தைத் தெரியப் படுத்தக் கூடாது? சீமையிலே இந்த மாதிரி ஒரு வித்வான் பாடினால் கொட்டகை இடிந்து விழும்படி சபையோர் கரகோஷம் செய்து தங்கள் உற்சாகத்தைத் தெரி விப்பார்களே!" என்றார்.

இந்த ஸர் ஸி. வி. ராமனின் கட்சியைச் சேர்ந்தவர்கள் திருச்சி ரஸிகர்கள். "சங்கீதம் கேட்கும்போது மூச்சுக்கூட விடாமல் அமைதியாயும் நிச்சப்தமாயும் இருக்கவேண்டும்" என்னும் கொள்கையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே, தங்கள் சந்தோஷத்தை அடிக்கடி அமோக மாகத் தெரியப்படுத்தினார்கள்.

மதுரையில் கூடியிருந்த சபையோ பார்ப்பதற்கு வெகு அழகாயிருந்தது. மதுரை



கல்பாத்தி ராமநாதன்

ஆடல் பாடல்

"கர்நாடகம்"

பசுமையான மரத்தில் பொன்னிற மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. அந்த மலர்களிலிருந்து நறுமணம் கமழ்ந்து நாலா புறமும் பரவுகிறது. இந்தக் கண்ணுக்கினிய காட்சியைக் கண்டு களிக்கிறோம்; மணத்தை முகர்ந்து அநுபவிக்கிறோம்.

மரங்கள் புஷ்பிப்பதனால் என்ன பிரயோஜனம், மலர்களின் ஸுகந்தத்தினால் என்ன லாபம் என்று யாரும் கேட்க மாட்டார்கள்.

ஆனால் அதே புஷ்பங்களைப் பொறுக்கி எடுத்து மாலையாகக் கோத்துப் பகவானுடைய திவ்ய மங்கள திருமேனியை அலங்கரிக்கும்போது, அந்தப் புஷ்பங்களுக்கு என்றுமில்லாத மகிமை ஏற்பட்டு விடுகிறது; மலர்களின் அழகும் பன்மடங்கு அதிகமாகி விடுகிறது.

* * *

இந்த உலகத்தில் நாம் அநுபவிக்கக் கூடியதாயிருக்கும் ஆனந்தங்களுக்குள்ளே மிக உயர்ந்தது, தூய்மையானது, சங்கீதக் கலையினால் வரும் ஆனந்தமாகும். அத்தகைய சங்கீதக் கலை மிகவும் உத்தமமான ஒரு தர்ம கைங்கரியத்துக்குப் பயன்படும்போது, அதன் மகிமை எத்தனையோ மடங்கு உயர்ந்து விடுவதில் வியப்பில்லையல்லவா?

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி தமது சங்கீதக் கலையை அவ்விதம் புனிதமான தர்ம காரியத்துக்குப் பயன்படுத்த முன் வந்ததை நேயர்கள் அறிவார்கள். தெய்வத்தின் அருளால் அடைந்த அமுதம் பொழியும் தமது குரலையும், அரிதில் முயன்று பெற்ற அற்புதமான சங்கீத வித்தையையும் அன்னை கஸ்தூரிபா நிதிக்குப் பணம் சேகரிப்பதற்காக உபயோகப்படுத்தி ஐந்து கச்சேரிகள் செய்ய ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஒப்புக்கொண்டார். அவற்றில் நாலு கச்சேரிகள் பூர்த்தியாகிவிட்டன.

சென்னைக் கச்சேரியைப் பற்றிய விவரம் முன்னொரு "கல்கி" இதழில் வெளியாகியிருக்கிறது. பின்னர், ஆகஸ்டு 25உ திருச்சியிலும், செப்டம்பர் 1உ மதுரையிலும், 3உ கோயமுத்தூரிலும் கச்சேரிகள் நடந்தன. திருச்சி, மதுரை, கோயமுத்தூர் கச்சேரிகளில் முறையே ரூ. 11,001, ரூ. 15,006, ரூ. 15,544 வசூலாயிற்று. ஆக மொத்தம் நாலு கச்சேரிகளிலுமாகக் கஸ்தூரிபா நிதிக்கு ரூபாய் ஐம்பத்து மூவாயிரத்துச் சொச்சம் சேர்ந்திருக்கிறது.

கச்சேரிகளைப் பொறுத்த வரையில், மூன்று இடங்களில் நடந்த கச்சேரிகளும் ஒன்றைவிட ஒன்று உயர்வாக இருந்தன என்று சொல்லலாம். ஆனால் எதைவிட எது உயர்வாக இருந்தது, அல்லது எதில் உயர்வாக இருந்தது என்று கேட்டால், சொல்ல முடியாது. ஒவ்வொரு கச்சேரியையும் கேட்டுக்கொண்டிருந்தபோது அதுவே மிகவும் மேலானதாகத் தோன்றியது.

மூன்று கச்சேரிகளிலும் எம். எஸ். ஸின் குரல் அதன் பூரண இனிமையும் சக்தியும் பொருந்தி, சுருதி சேர்த்த வீணைக் கம்பியைப் போல் ரீங்காரம் செய்தது. ஒவ்வொரு கச்சேரியிலும் அவர் மேல் ஸ்தாயியில் கார்வை கொடுத்து ராக சஞ்சாரம் செய்தபோது, சபையோரை வானுலகுக்கே கொண்டு போவதுபோலிருந்தது. அருமையான ஸாஹித்யங்களை உணர்ச்சி பாவத்துடன் பாடியபோது சபையோர் உள்ள முருகி ஊனுருகி மெய் மறந்து நிற்கவேண்டியதாயிற்று.

மூன்று கச்சேரிகளுக்கும் பொதுவாக இருந்த இரண்டு சிறப்பான அம்சங்களைப் பற்றி மட்டும் குறிப்பிடவேண்டும்.

ஜப்பான் 'புண்ணிய' பூமியைப் பகைவர்களிடமிருந்து காப்பதற்காக ஒரு கோடி ஜப்பானியர் தயாராயிருக்கின்றனர் என்று சமீபத்தில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. உண்மையில், ஜப்பானை அன்னியரிடம் ஒப்படைப்பதைக் காட்டிலும் ஜப்பானியர் அவ்வளவு பேரும் கூண்டோடு கைலாசமாகப் பரலோக யாத்திரை போகவும் தயாராயிருப்பார்கள்.

இப்படிப்பட்ட முரட்டுத் தற்கொலைக்கார சாதியோடு யுத்தம் செய்வது மகா கடினமான விஷயந்தான். ஆகையினாலேயே, பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும், அமெரிக்கப் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் தற்சமயம் க்யூபெக்கில் சந்தித்திருக்கிறார்கள். ஜெர்மனியின் தோல்வி ஒருவாறு நிச்சயமாகி விட்டபடியால், இனிமேல் ஜப்பான் மீது தீவிர யுத்தம் தொடங்குவது பற்றித் திட்டம் போடவே அவர்கள் சந்தித்திருக்கிறார்கள் என்று அரசாங்க அறிக்கைகளே கூறுகின்றன.

ஜப்பானை ஜயிப்பதற்கு இரண்டு வித முறைகளில் அவர்கள் திட்டங்கள் வகுக்கலாம்.

ஒரு முறை, கடினமான முறை: இரத்த வெள்ளத்தைப் பெருக்கி அளவில்லாத உயிர்ச் சேதத்தை உண்டு பண்ணக் கூடியது; யுத்தம் முடிந்த பிறகுகூட உலகத்தில் அமைதி இல்லாமல் செய்யக் கூடியது.

இன்னொரு முறை, சற்று சுலபமான முறை: இராஜபாட்டையில் செல்வது போன்ற முறை: உலகத்தின் வருங்கால க்ஷேமத்துக்கே அனுகூலமானது.

முதல் முறையின்படி, பிரிட்டிஷ் பலத்தையும் அமெரிக்க பலத்தையும் ஒன்று திரட்டி, தரைப்படை கடற்படை ஆகாசப் படை எல்லாவற்றினாலும் நாலா புறங்களிலும் அகண்டிருக்கும் ஜப்பானை நெருக்க வேண்டியது. ஜப்பான் ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கும் தேசங்களையெல்லாம் விடுவித்துப் பழையபடி பிரிட்டிஷ் அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டியது. கடைசியாக, ஜப்பானை ஜப்பானிலேயே போய்த் தாக்கி நிர்மூலம் செய்ய வேண்டியது. அப்புறம், என்றென்றைக்கும் பசிபிக் சமுத்திரத்தின் ஆதிக்கத்தை பிரிட்டனும் அமெரிக்காவும் பங்கிட்டுக் கொள்ள வேண்டியது.

இரண்டாவது முறை என்னவென்றால் ஜப்பானை ஜயிக்கும் விஷயத்தில் தற்போது ஜப்பான் ஆதிக்கத்தின் கீழுள்ள நாடுகளின் ஜனங்களுடைய கூட்டுறவையும் தேட வேண்டியது. பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைபலத்தோடு அந்தந்த நாட்டு ஜனங்களின் பூரண உதவியையும் பெற்றுக் கொண்டு யுத்தம் செய்ய வேண்டியது. யுத்தம் முடிந்ததும் அந்தந்த நாடுகளை அந்தந்த நாட்டு மக்களிடமே ஒப்படைப்பதாக உடனே உறுதிமொழி கூற வேண்டியது.

இந்த இரண்டாவது முறையில், உயிர்ச் சேதம் கம்மியாயிருக்கும். வெற்றியும் இன்னும் கொஞ்சம் விரைவில் கிடைக்கும். ஜப்பானியருடைய யுத்த வெறிகூடத் தணிந்து, அவர்களே தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு போரை நிறுத்திவிடக் கூடும்.

ஆனால், இரண்டாவது முறையைக் கடைப் பிடிப்பதாயிருந்தால் அதற்குப் பூர்வாங்கமாகச் செய்ய வேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது.

பிரிட்டிஷ் — அமெரிக்கரின் வாக்குறுதியை பர்மியர், மலாய் நாட்டார் முதலியோர் நம்ப வேண்டுமானால், இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷார் அந்தக் கொள்கையைக் கடைப் பிடித்துக் காட்ட வேண்டும். அதாவது இப்பொழுதே, இன்றைக்கே, இந்தியாவில் உண்மையான ஜனப் பிரதிநிதிகளின் ஆட்சியை நிலை நாட்ட வேண்டும்.

இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்க விரும்பாமல் அடிமைத் தேசமாகவே வைத்திருக்கும் எண்ணமிருந்தால், அதற்கு ஆயிரம் சாக்குகளையும் பொய்க் காரணங்களையும் நியாயமாய்க் கற்பித்துச் சொல்லலாம்.

ஆனால் இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையைத் தள்ளிப் போட உண்மையான, நியாயமான, காரணம் ஒன்றுகூடக் கிடையாது. உலகம் ஒப்புக்கொள்ளக் கூடிய காரணம் ஒன்றுகூடக் கற்பனை செய்யவும் முடியாது.

எனவே, சுலப முறையில், இராஜபாட்டையான முறையில், ஜப்பானை ஜயிக்க விரும்பினால், அதற்கு முதல் காரியமாக இந்தியாவுக்கு விடுதலை அளிக்க வேண்டும்.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "மூடு முட்டாள்" என்னும் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: எஸ். எஸ். மார்க்கண்டன், சீர்காழி.

இந்தத் தர்ம சங்கடத்துக்கு என்ன செய்வதென்று யமதர்மர் சிறிது யோசனை செய்துவிட்டு, கோஷமிட்ட தூதர்களைத் தனியே அழைத்து, ''உங்களை ஒரு மாதத்துக்கு வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்திருக்கிறேன். யம லோகத்திலிருந்து தொலையுங்கள்!'' என்று கட்டளையிட்டார்.

அந்த யம தூதர்கள் வெளியே போகையில் ஒருவருக்கொருவர் கண்ணடித்துக் கொண்டு, ''நாம் பூலோகத்திலே இந்தியாவிலுள்ள பீஹார் மாகாணத்துக்குப் போய் காலரா ரூபம் எடுத்துக் கொள்வோம். அங்கேயுள்ள கவர்னர் ரூதர்போர்டு துரை நமக்கு ரொம்பவும் வேண்டியவர். அவருடைய சகாயத்துடன் இன்னும் அநேக உயிர்களை யம லோகத்துக்கு அனுப்பிச் சித்திரகுப்தனுடைய கையை நன்றாய் ஒடிப்போம்!'' என்று காதோடு காதாகப் பேசிக்கொண்டு போனார்கள்.

* * *

யம லோகத்தில் மேற்கண்ட விதமான நெருக்கடி ஏன் ஏற்பட்டது என்பதைச் சற்று ஆராய்வோம். அதற்குரிய காரணங்களைக் கண்டு பிடிப்பதற்காகப் பூலோகத்தில் நாலா புறமும் நோக்குவோம். அப்படி நோக்கும் போது, மேற்கு ஐரோப்பாவின் மகா பயங்கர கோரக் காட்சி நம் கண் முன்னே வருகின்றது. ஐந்து வருஷங்களுக்கு முன்னால் சமுத்திரம் கரையை உடைத்துக் கொண்டு வருவதுபோல் பெருகி வந்த ஜெர்மன் சைன்யங்கள் பிரான்ஸிலிருந்தும் பெல்ஜியத்திலிருந்தும் ஹாலந்திலிருந்தும் பின்வாங்கி ஓடுகின்றன. அவற்றைத் துரத்திக் கொண்டு, நேசக் கட்சி சைன்யங்கள் போகின்றன. இந்த இரண்டு சைன்யங்களின் நடமாட்டத்துக்கு ஆளான பிரதேசங்கள் பாலைவனச் சுடுகாடாக ஆகிவருகின்றன.

நேசக் கட்சியைச் சேர்ந்த ஐந்து பெரும் சைன்யங்கள் இப்போது ஜெர்மன் எல்லையை அடைந்து விட்டன. பெயர் பெற்ற ஜெர்மன் அரணான ஸீக்பிரீட் அரணை நேசகட்சியார் தாக்கத் தொடங்கி விட்டார்கள். கூடிய சீக்கிரத்தில் ஜெர்மனி தேசத்துக்குள்ளேயே இரத்த வெள்ளம் பெருகி ஓடும் என்பதில் ஐயமில்லை.





நேசக் கட்சியின் பிரதம தளபதி ஐஸன்ஹவர் ஜெர்மன் பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை கொடுத்து விட்டார். ''ஜாக்கிரதை! திரும்பி ஓடும் ஜெர்மன் சைன்யங்களை நேசப் படை விமானங்கள் தொடர்ந்து வந்து குண்டு போட்டு நொறுக்கப் போகின்றன. உயிர் பிழைக்க விரும்புவோர் ஓடி ஒளியுங்கள்!'' என்று சொல்லி விட்டார்.

இந்த விபத்தைத் தடுப்பதற்கு ஜெர்மன் ஜனங்கள் ரொம்பவும் விரும்புவார்கள். நாஜித் தலைவர்களும அதற்கு ஆசைப்படுவார்கள். தோல்வி நிச்சயம் என்று ஏற்பட்டு விட்டபடியால் அவர்கள் சரணாகதி அடையவும் சமாதானப் பேச்சுப் பேசவும் தயாராயிருப்பார்கள்.

ஆனால் அதற்கு நேசக் கட்சித் தலைவர்கள் இணங்குவது இயலாத காரியம். ஏனெனில் ஹிட்லர் முதலிய நாஜித் தலைவர்களுக்கு எதிராக அவ்வளவு தீவிரமான பிரசாரம் நடந்திருக்கிறபடியால் அவர்களுடன் சமாதானம் பேசுவதை உலகம் ஒரு நாளும் ஒப்புக் கொள்ளாது. எனவே, அந்தகைய தைரியம் நேசக் கட்சித் தலைவர்களுக்கு ஒரு நாளும் வராது.

நாஜித் தலைவர்களுடன் ராஜிப்பேச்சு இல்லை என்றால், யுத்தம் இறுதிவரையில் நடந்துதான் ஆகவேண்டும். ஏனெனில், நாஜிக் கட்சித் தலைவர்களின் கையில் ஜெர்மனியும் ஜெர்மன் சைன்யமும் வெகு பலமாகச் சிக்கிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மன் ராணுவ வீரர்களோ எத்தனையோ காலமாகக் கட்டுப் பாட்டுக்கு உட்படும் பயிற்சி பெற்றவர்கள். எனவே, நாஜித் தலைவர்கள் தங்களுடன் சமாதானம் பேச நேசக் கட்சியார் சம்மதிக்கா விட்டால் கடைசி வரையில் போரிட்டு உயிரை விடவே பார்ப்பார்கள். ஆகவே, ஜெர்மன் யுத்தம் முடிவதற்குள் அந்த நாட்டில் பெரிய இரத்த ஆறுகள் ஓடித்தான் ஆகவேண்டியிருக்கும்.

இந்த இரத்தவெள்ள கைங்கரியத்தில், ஜெர்மனிக்கு மற்றொரு பக்கத்தில் முன்னேறும் ருஷியப் படைகளும், தெற்கே இத்தாலியிலிருந்து முன்னேறும் நேசப் படைகளும் உரிய பங்கை எடுத்துக் கொள்ளும்.

மேற்குத் திசையிலிருந்து இப்போது நமது கவனத்தைக் கிழக்கே திருப்புவோம். பஸிபிக் சமுத்திரத்தைப் பார்ப்போம். இந்த விஸ்தாரமான மகா சமுத்திரத்திலுள்ள தீவுகளில் ஆங்காங்கே அமெரிக்கப் படைகள் தாவித் தாவி முன்னேறி வருகின்றன. ஆங்காங்கு தலைகாட்டும் ஜப்பான் கப்பல்களை அமெரிக்க ஆகாச விமானங்கள் குண்டு போட்டு மூழ்கடிக்கின்றன.

ஆனால் இவையெல்லாம் ஜப்பானைத் தோற்கடிக்கும் விஷயத்தில் கொசுக் கடிக்குச் சமானம்தான்.

அதற்கு இன்னும் எவ்வளவோ தீவிரமான யுத்தம், பயங்கரமான யுத்தம், நடத்தியாக வேண்டும்.

ஜெர்மனியை ஜயிப்பதைக் காட்டிலும் ஜப்பானை ஜயிப்பது பன்மடங்கு கடுமையான காரியம் என்பதற்குச் சமீபத்தில் சில அறிகுறிகள் தென்பட்டிருக்கின்றன.

ஜெர்மானியர் மகா வீரர்கள், தைரியசாலிகள்தான்; ஆனாலும் அவர்களுக்கு உயிர்மேல் ஆசையில்லாமலில்லை. தோல்விதான் என்று நிச்சயமானால் அவர்கள் சரணாகதி அடைந்து விடுகிறார்கள். எதிரிகளால் கைதி செய்யப் படுவதற்கும் தயாராயிருக்கிறார்கள்.

வெற்றியோ, தோல்வியோ எது வந்தாலும், உயிரோடு தப்பினால் விசேஷந்தான் என்பது ஜெர்மானியரின் கொள்கை. அதுவேதான் ஐரோப்பிய தேசத்தார் அனைவருடைய கொள்கையும். உயிரோடு இருந்தால்தான் வெற்றி கிடைத்தால் அதை அனுபவிக்கலாம். உயிரோடு இருந்தால் இப்போது தோல்வியடைந்தாலும் அடுத்த முயற்சியிலாவது வெற்றியடையலாம். இதை முன்னிட்டுத்தான் ஐரோப்பிய தேசத்தார் அவ்வளவு பேரும் இந்த யுத்தத்தில் உயிர்ச் சேதத்தைக் கூடிய வரையில் குறைப்பதில் முனைந்திருந்தார்கள். உயிர் பிழைப்பதற்காகப் போர்க்களத்தில் பின்வாங்கி ஓடுவதற்கோ, எதிரிகளிடம் கைதியாவதற்கோ அவர்கள் கொஞ்சமும் தயங்கவில்லை.

ஆனால் ஜப்பானியருடைய கொள்கை இதற்கு நேர்மாறானதாகக் காண்கிறது. "கௌரவத்துக்காகத் தலையைக் கொடுத்துக் கொள்கிறவர்"களைப் பற்றி நாம் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் ஜப்பானியரோ கௌரவத்துக்காகத் தலையை வெட்டிக் கொள்கிறவர்களாயிருக்கிறார்கள். ஜப்பானியருடைய தற்கொலை வெறியைப் பற்றிய இரண்டு பயங்கரமான செய்திகள் சமீபத்தில் பத்திரிகைகளில் வெளியாகி யிருந்தன.

ஆஸ்திரேலியாவில் சில ஜப்பானியக் கைதிகள் தகுந்த பந்தோபஸ்துடன் வைக்கப் பட்டிருந்தார்கள். யுத்தக் கைதிகளுக்கு அளிக்கப்படும் சகல சௌகரியங்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. ஆயினும் திடீரென்று அவர்கள் ஒருநாள் கலகமாகக் கிளம்பிக் காவலை உடைத்துக்கொண்டு தப்பி ஓடப் பார்த்தார்கள். இந்த முயற்சியில் பலர் சுடப்பட்டு இறந்தார்கள். மற்றவர்கள் எல்லாம் தங்களைத் தாங்களே கொன்றுகொண்டு இறந்தார்கள்!

இதைக் காட்டிலும் பயங்கரமான இன்னொரு செய்தி ஸைபான் என்னும் பஸிபிக் தீவிலிருந்து வந்திருக்கிறது. அந்தத் தீவைச் சமீபத்தில் ஜப்பானியரிடமிருந்து அமெரிக்கர் கைப்பற்றினார்கள். அப்படிக் கைப்பற்றப்பட்ட தீவில் பத்தாயிரம் ஜப்பானியர் இருந்தனர். இவர்கள் போர் வீரர்கள் அல்ல. பெண்டு பிள்ளைகள் உள்ளிட்ட குடித்தனக்காரர்கள். இவர்களுக்குத் தப்பிச் செல்ல வழியே யில்லாமற் போகவே, அவ்வளவு பேரும் 'ஹரகிரி' செய்து கொண்டு மாண்டனர். அதாவது, மனைவிகளைப் புருஷர்களும் குழந்தைகளைத் தாய்மார்களும் கொன்றதுடன் மிஞ்சியுள்ளவர்கள் தற்கொலை செய்து கொண்டு இறந்தனர்!

மேனாட்டாரிடமிருந்து எத்தனையோ காரியங்களைக் கற்றுக்கொண்டிருக்கும் ஜப்பானியர், கூடுமான வரையில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் தத்துவத்தையும் கற்றுக் கொள்ளாதது பற்றிப் பெரிதும் வருந்துகிறோம்.

ஆனால் நாம் வருத்தப்படுவதினாலே ஜப்பானியருடைய சுபாவத்தை மாற்றி விட முடியாது.

அந்த சுபாவம், அதாவது எதிரிகளின் கீழ் பிடிபட்டு வாழ்வதைக் காட்டிலும் சாவதே மேல் என்று தற்கொலை புரிந்துகொள்ளும் சுபாவம், ஜப்பானியரிடம் இருக்கிறபடியினால், ஜெர்மனியை ஜயிப்பதைவிட ஜப்பானை ஜயிப்பது கடினமான காரியம் என்பதை நாம் மறுக்க முடியாது.

யமனுக்கு வேட்டை

மகா-ா-ா-ஸ்ரீ மகாகனம் பொருந்திய ரைட் ஆனரபிள் திவான் பகதூர் ஸர் யமதர்மன் கே. ஸி. ஐ. இ. ராஜா ஆப் யமலோகம் அவர்கள் தமது தர்ம சிம்மாசனத்தில் அமர்ந்து, யமலோகமெல்லாம் நடுநடுங்கும்படியாக ஒரு வீர கர்ஜனை புரிந்து, "எங்கே சித்திரகுப்தன்?" என்று இடி முழக்கக் குரலில் கேட்டார்.

பெரிய பெரிய கணக்குப் புஸ்தகங்களுக்குப் பின்னால் மறைந்திருந்த சித்திர குப்தன் மெதுவாகத் தலையை நீட்டி, "மகாராஜா! இதோ ஆஜர்!" என்றான்.

"ஓகோ! வேலை ரொம்ப மும்முரமாயிருக்கிறதுபோல் தோன்றுகிறது!"

"ஆம், மகாராஜா! யமலோகத்துக்கு வருகிற உயிர்களின் கணக்கு எழுதி எழுதிக் கை ஒடிந்து விடும் போலிருக்கிறது!"

"சபாஷ்! நமது தூதர்கள் எல்லாம் வெகு சுறு சுறுப்பாயிருக்கிறார்கள் என்று தெரிகிறது!"

"அதுதான் இல்லை, மகாராஜா! நமது தூதர்களுக்குப் பூலோகத்தில் இப்போதெல்லாம் வேலையே இருப்பதில்லை. பூலோகத்து ஜனங்கள் அப்படித் தாங்களாகவே போட்டி போட்டுக் கொண்டு வந்து குவிகிறார்கள்!"

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்! நமது தூதர்கள் வெகு காலமாக விடுமுறை கேட்டுக்கொண்டிருக்கிறார்களே? இந்தச் சமயம் கொடுக்கலாமே? எங்கே நமது தூதர்கள்?"

"இதோ வந்து விட்டோம், மகாராஜா!" என்று யமதூதர்கள் அத்தனை பேரும் திமுதிமு வென்று உள்ளே வந்து நின்றார்கள்.

"தூதர்களே! பூலோகத்து மனிதர்கள் யமலோக வாழ்க்கையில் ஆசை கொண்டவர்களாய் அவர்களாகவே வந்து குவிந்து நமது கணக்குப் பிள்ளையின் கையை ஒடிக்கிறார்களாம். ஆகவே, இந்தச் சமயத்தில் நீங்கள் வெகு நாளாகக் கோரி வரும் விடுமுறையை அளிக்க உத்தேசிக்கிறேன். ஒரு மாதம் எல்லாருக்கும் ரஜா; வழக்கமான சம்பளத்தோடு, வார் அலவுன்ஸ், கார் அலவுன்ஸ், உளுத்து அலவுன்ஸ் எல்லாம் உண்டு!" என்று யமதர்ம ராஜன் சொன்னதும், யமதூதர்கள் ஒரே குரலாக, "எஜமானருக்கு ஜே! யமதர்ம ராஜருக்கு ஜே!" என்று வாழ்த்தி, தங்களுடைய மகத்தான வெற்றிக்கு அறிகுறியாக ஒருவருக்கொருவர் இரண்டு விரலை V வடிவமாக்கிக் காட்டிக் கொண்டார்கள்.

அந்தச் சமயத்தில் வாசற்பக்கத்திலிருந்து, "ஓஹோ!" "ஆஹா!" "நன்று!" "நீ நன்று!" "எட்டு!" "நீ எட்டு!" "ஐயையோ! விழுந்து விட்டேனே!" "யமலோகத்தில் கேள்வி முறை யில்லையா?" என்ற கூக்குரல்கள் கிளம்பவே, யமதர்ம ராஜா சித்திரகுப்தனைப் பார்த்து, "இது என்ன கூத்து?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை! இதுதான் யமலோகத்தின் வெற்றி! எங்கே பார்த்தாலும் நமக்குத்தான் வெற்றி" என்று சித்திர குப்தன் கூறி, இரண்டு விரலை விரித்துக்காட்டி, "ஆமாம்; தர்ம ராஜா! நமக்கு வெற்றி V! மற்றவர்களுக்கெல்லாம் பட்டை நாமம்!" என்றார்.

"பட்டை நாமம் என்றால், தென்கலை நாமமா வடகலை நாமமா?" என்று யமராஜா கேட்க, "அதை அப்புறம் சாவகாசமாகப் பூலோகக் கோர்ட்டிலே தீர்த்துக் கொள்ளலாம். இப்போது, யமதூதர்களுக்கு நீங்கள் கொடுத்த ரஜாவை உடனே ரத்து செய்யுங்கள். பூலோகத்திலிருந்து முண்டியடித்துக் கொண்டு வரும் பெருங் கூட்டத்தை ஒழுங்குபடுத்தி, தள்ளல் விழல்களினால் உயிர்ச்சேத மில்லாமல் எல்லாருக்கும் அவரவர்களுடைய இடத்தைக் காட்டுவதற்கு யமதூதர்கள் அவ்வளவு பேருடைய சேவையும் தேவையாயிருக்கிறது. வேண்டுமானால், அவர்களுடைய பத்தப் படியை இரட்டிப்பு ஆக்கிவிடலாம்!" என்று சித்திரகுப்தன் சொன்னான்.

உடனே யமதூதர்களில் சிலர், "யமராஜா வாழ்க! சித்திரகுப்தன் ஒழிக!" என்று கோஷம் செய்யவே, "இந்தக் கிளர்ச்சிக்காரர்களுக்குத் தக்க தண்டனை அளிக்கா விட்டால் நான் வேலையை உடனே ராஜிநாமாச் செய்து விடுவேன்!" என்றான் சித்திரகுப்தன்.

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 7

என்ன சேதி?

எழுத்தாளர் மகாநாடு

கோவை எழுத்தாளர்களின் தீவிர முயற்சியினால் தமிழ் மாகாண எழுத்தாளர் மகாநாடு இம்மாதம் 23, 24 தேதிகளில் அந்நகரில் நடைபெறுகிறதென்று அறிந்து உவகையடைகிறோம். இம் மகாநாட்டை ஸ்ரீ வ. ரா. திறந்து வைக்கிறார் என்றும், மகாநாட்டுக்கு ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் தலைமை வகிக்கிறார் என்றும் அறிந்ததில் நமது மகிழ்ச்சி இரட்டிப்பு ஆகிறது. தமிழ் எழுத்து உலகில் ஸ்ரீ வ. ரா. வும் ஸ்ரீ சொக்கலிங்கமும் ஏறக்குறைய "இரட்டையர்கள்" என்று சொல்லக் கூடியவர்கள்; இணை பிரியா நண்பர்கள். ஸ்ரீ வ. ரா. வுக்கு அடுத்தபடி தமிழ் உலகில் நீண்ட கால எழுத்துத் தொண்டு செய்தவர் ஸ்ரீ சொக்கலிங்கம். எனவே, இவர்களில் ஒருவர் திறப்பாளராயும் இன்னொருவர் அக்கிராசனராயும் அமைந்தது மிகவும் பொருத்தமானதாகும். இவர்களுடைய ஐக்யத் தலைமையின் கீழ் முதலாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு சீரும் சிறப்புமாக ஆரம்பமாகி, பெரும் புகழுமாக முடிவு பெறும் என்று எதிர் பார்க்கிறோம்.

பூட்டியாச்சு!

தற்போது நடக்கும் சென்னை அட்வைஸரி சர்க்காருக்கு முப்பது நல்ல இலட்சணங்கள் இருக்கின்றன; ஆனால் இரண்டே இரண்டு லட்சணங்கள்தான் இல்லை. அதாவது, தாங்களாகவே சரியான காரியத்தைச் செய்யத் தெரியாது; மற்றவர்கள் சொன்னாலும் கேட்க மாட்டார்கள்!— இந்த சமாசாரம் சமீபத்தில் இந்திய வைத்தியக் கலாசாலை விஷயத்தில் அவர்கள் நடந்து கொண்டதிலிருந்து நன்கு வெளியாயிற்று.

"வீட்டுக்குள்ளே புகைகிறது; நெருப்புப் பிடித்திருப்பதுபோல் தோன்றுகிறது!" என்று பார்க்கிறவர்கள் சொன்னால், செய்ய வேண்டியது என்ன? நெருப்பு அணைக்கும் எஞ்சினை உடனே வரவழைக்க வேண்டும். வீட்டுக்குள்ளே போய்ப் பார்த்து நெருப்பு இருந்தால் அணைக்க வேண்டும். அவ்விதமில்லாமல், "வீட்டுக்குள்ளே புகைகிறதா? வாசற் கதவை இழுத்துப் பூட்டு! நெருப்புப் பிடிக்கிறதைப் பார்த்து விடலாம்!" என்று ஒருவன் சொன்னால் அவனுடைய புத்திசாலித்தனத்தைப் பற்றி நாம் என்ன நினைப்பது? மேற்படி இந்திய வைத்தியக் கலாசாலை விஷயத்தில் அவ்வளவு புத்திசாலித்தனமாகத்தான் காரியம் நடந்திருக்கிறது. கலாசாலையின் குழப்பங்களை மாணாக்கர்கள் எடுத்துச் சொல்லப் போக, அதன்மேல், "கலாசாலையை இழுத்துப் பூட்டிவிடு!" என்று சர்க்கார் உத்தரவு பிறந்தது. அவ்விதமே இழுத்துப் பூட்டியாகி விட்டது!

திறக்க வேண்டும்

காலஞ் சென்ற ஜஸ்டிஸ் கட்சியானது இரட்டை யாட்சி காலத்தில் அதிகாரம் வகித்தபோது, 'ஒன்றே ஒன்று, கண்ணே கண்ணு' என்பதாக ஒரு நல்ல காரியத்தைச் செய்தது. அதாவது இந்தியாவில் பூர்வீகமான உன்னத ஆயுள்வேத வைத்திய முறையை நவீன ஆராய்ச்சி முறையில் வளர்ப்பதற்காக 'இண்டியன் மெடிகல் ஸ்கூல்' என்று ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தியது. இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்துத் தேர்ச்சி பெற்று எல். ஐ. எம். என்னும் பட்டமும் பெற்று வெளியேறியவர்கள் ஏதோ அநாதைப் பிள்ளைகளாகவும், தாயில்லாக் குழந்தைகளாகவும் காலட்சேபத்தை நடத்தி வருகிறார்கள். இதை

வெல்லாம் பார்த்தும், சுதேச வைத்திய முறையில் அபிமானமுள்ள இளைஞர்கள் பலர் அப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்து வருகிறார்கள். சமீபத்தில், மேற்படி பள்ளிக்கூடத்தில் பயிற்சி முறையும் பரீட்சை முறையும் அடைந்திருக்கும் சீர் கேட்டை அப்பள்ளிக்கூட மாணாக்கர்கள் வெளிப்படுத்திப் பரிகாரம் கேட்டார்கள். இந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து பரீட்சைக்குப் போகும் மாணாக்கர்களில் 100-க்கு 10 பேர் வீதம் பரீட்சையில் தேறி விடுகிறார்களாம்! குட்டிச் சுவரில் முட்டிக் கொள்வதற்கு வெள்ளெழுத்தா என்பது போல், மேற்படி பள்ளிக் கூடத்துப் பயிற்சி முறையிலோ பரீட்சை முறையிலோ ஊழல் இருக்கிறதென்பதற்கு வேறு அத்தாட்சியோ, விசாரணையோ வேண்டுமா? எத்தனையோ பணத்தைச் செலவிட்டு, காலத்தைச் செலவிட்டு, போயும் போயும் ஆயுர் வேத வைத்தியம் கற்க வரும் மாணாக்கர்கள், வேண்டுமென்று பரீட்சையில் கோணலாக எழுதி 'பெயில்' ஆவார்களா? எனவே, ஊழல் பயிற்சியிலோ பரீட்சையிலோ தான் இருக்கவேண்டும். அதை அதிகாரிகளுக்கு எடுத்துக் காட்ட எவ்வளவோ நேர்மையான முயற்சிகள் செய்தும், இந்தக் காகிதப் பஞ்ச காலத்தில் எவ்வளவோ மகஜர்கள் எழுதியும் பயனில்லாமற் போகவே, விஷயத்தை அதிகாரிகளின் கவனத்துக்குக் கட்டாயமாய்க் கொண்டு வருவதற்கு மாணாக்கர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். இதற்குப் பதில்தான், "பள்ளிக்கூடத்தையே பூட்டு!" என்ற உத்தரவு. அதோடு இல்லை; ஐந்து மாணாக்கர்கள் டிஸ்மிஸ்! மற்றவர்களுக்கெல்லாம் ஒரு ரூபாய் அபராதம்!

உள்ளே நெருப்பை வைத்து விட்டு வெளியே கதவை இழுத்துப் பூட்டும் மேற்படி முட்டாள் தனத்தை உடனே திருத்த வேண்டும். பூட்டிய கதவைத் திறக்க வேண்டும். மாணாக்கர்கள் எடுத்துக் காட்டியிருக்கும் ஊழல்களைப் பற்றி விசாரித்து அவற்றை நீக்க உடனே பிரயத்தனம் எடுக்க வேண்டும். கிளர்ச்சி செய்த மாணாக்கர் தலைவர்களை 'டிஸ்மிஸ்' செய்ததற்குப் பரிகாரமாக, ஒரு பொதுக் கடமையை நிறைவேற்றியதன் பொருட்டு அவர்களுக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்க வேண்டும்! — இவ்வளவும் செய்தால்தான் சென்னை அட்வைஸரி சர்க்காருக்கு இந்திய வைத்தியக் கலாசாலை சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் அசட்டுப் பட்டம் நீங்குவது சாத்தியமாகும்.

பிரதம மந்திரி சர்ச்சில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டைச் சந்திப்பதற்காகக் கியூபெக் சென்று இறங்கியதும், வெற்றி **V** க்கு அறிகுறியாக இரட்டை விரலைக் காட்டி. "எங்கும்



வெற்றி!" என்றாராம். பிறகு அவருக்கும் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டுக்குமா நடந்திருக்கக் கூடிய சம்பாஷணையை நமது சித்திரக்காரர் கற்பனை செய்கிறார்.



கல்கி
பொருளடக்கம்

மலர் 4 இதழ் 7 | 1944 செப்டம்பர் 17 | தாரண ௵ புரட்டாசி 2

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

தமிழ்நாட்டின் சகோதரியாகிய ஆந்திர அன்னை எத்தனையோ வீரப் புதல்வர்களைப் பெற்றெடுத்திருக்கிறாள். அவர்களில் சிறந்த ஒருவர் ஸ்ரீ காளா சுப்பராவ். பதின்மூன்று வருஷத்துக்கு முன்பு நடந்த உப்பு சத்தியாக்கிரஹ இயக்கத்தின் போது ஸ்ரீ காளா சுப்ப ராவ் கைனுபஜாரில் சாத்விக மறியல் செய்தார். இரக்கமற்ற போலீஸ் வீரர்களின் ஏறக்குறைய அறுபது அடிகள் வாங்கியும் மன உறுதி குலையாமல் நின்று ஸ்மரணையற்று விழுந்தார். அதன் பிறகு பத்திரிகைக் காரியாலயங்களும் சர்க்கார் சிறைக் கூடங்களுமாக அவரது வாழ்க்கை மாறி மாறி நடந்து வந்திருக்கிறது.



தேகத்தின் அடிமைத்தனத்தை விட அறிவின் அடிமைத்தனம் மிகக் கொடுமையானது. தேகம் அடிமைப் பட்டிருந்தாலும் ஆத்மா சுதந்திரமாயிருக்கலாம். ஆனால் அறிவை அடிமைப்படுத்தி விட்டால் ஆத்மநாசமே நேரிடும். ஆகையினால் தான் பலவகைச் சுதந்திரங்களுக்குள் அபிப்பிராய சுதந்திரத்துக்கு முதல் ஸ்தானம் கொடுக்கப்படுகிறது. நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய வீரர் காளா சுப்பராவ் தமது அபிப்பிராய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதிலும் மகாதீரர் என்பது சமீபத்தில் வெளியாயிற்று. அபிப்பிராய சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு அவர் சமீபத்தில் ''ப்ரஜா'' பத்திரிகையிலிருந்து விலக நேர்ந்ததை நேயர்கள் அறிந்திருப்பார்கள். நமது சகோதரத் தொழிலாளி ஒருவரின் நெஞ்சுறுதியையும் தீரத்தையும் மனமாரப் பாராட்டுவதற்கு அறிகுறியாகவே, இந்த இதழ் அட்டையில் அவருடைய படத்தை வெளியிட்டிருக்கிறோம்.


மிகவும் குளிர்ச்சியுடையது!
களைப்பை போக்குகிறது!
உத்ஸாகத்தை அளிக்கிறது!
வினோலியா உபயோகித்து ஸ்நானம் செய்தால் குளிர்ச்சி உண்டாகும் போது நீங்கள் ஏன் வெப்பத்தினால் கஷ்டப்பட வேண்டும். இந்த சோப்பின் வெண்ணிறம் வாய்ந்த நுரை உங்களை சுத்தமாக்கும் பொழுது ஏன் வியர்வையுடன் இருக்கவேண்டும். வினோலியா சோப்பின் வாசனை களு களுப்பையும், உத்ஸாகத்தையும் உண்டுபண்ணி, மனதிற்கு சுகத்தையும் அளிக்கிறது.
வினோலியா
ஒயிட் ரோஸ் சோப்பு
VINOLIA White Rose Soap
VWR. 17-46 TM
VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND

சிறு சேமிப்புத் திட்டம்

கஷ்ட காலத்தில் தேசீய சேமிப்பை விட
வேறு சிறந்த பாதுகாப்பு நாட்டிற்கு
கிடையாது

சேமித்து கடன் கொடுங்கள்.
பதுக்காதீர்கள் அல்லது செலவு செய்யாதீர்கள்

நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளை

வாங்கி

உங்கள் பணம் ரூ. 10-க்கு 15 ஆகவும், 100-க்கு 150 ஆகவும், 1,000-க்கு 1,500 ஆகவும் 5,000-க்கு 7,500 ஆகவும் பெருகச் செய்யுங்கள்.

●

குறிப்பு:—

A. ஸ்தல ஸ்தாபனங்களும் (1897 இந்திய பொது சட்டத்தில் விவரிக்கப் பட்டுள்ளவை) ரெஜிஸ்தர் செய்துள்ள கூட்டுறவு சங்கங்களும் ரூ. ஒரு லக்ஷம் வரை நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளில் முதலீடு செய்யலாம்.

B. ஷெட்யூல்ட் பாங்கிகளும் மாகாண கூட்டுறவு பாங்கிகளும், தங்களது வாடிக்கைக்காரர், மைனர், அல்லது ஸ்தாபனங்கள் அல்லது அஸோஸியேஷன் சார்பில் ரூ. 5,000 வரை முதலீடு செய்யலாம்.

C. நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளை எந்த காலத்திலும் செக்யூரடியாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு மாற்றலாம்.

D. இதை வைத்திருப்பவர் இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வருமான வரிக்காக "மொத்த வருமான"த்தில் சேர்க்க வேண்டாம். இதன் மூலம் கிடைக்கும் வருமானம் இதர துறைகளில் கிடைக்கும் வருமானத்தின் வரி விகிதத்தை அதிகரிக்கச் செய்யாது.

அழகிய கூந்தல் -

இதன் இரகசியம் என்ன?



பண்டைக் காலத்தில் நம் பாரத நாட்டு நாரீமணிகள் தங்கள் மனமோகன கூந்தல் ஜோடிப்புகளால் நிகரற்று விளங்கினர் — பாமாலைகளில் புகழ் சூடப் பெற்றுள்ள வீர ரஜபுத்திர ரமணிகளும் சரி, மைசூர் ஹொய்சாலா அரசர்களின் கொலு மண்டப ஆரணங்குகளும் சரி — அல்லது கொச்சி திருப்பணித்துறை அரண்மனைச் சுவர்களில் அழிவற்றிருக்கச் செய்திருக்கும் வடிவழகிகளும் சரி, இவர்கள் அறிந்திருந்தனர் அழகிய கூந்தலின் இரகசியம் என்னவென்பது!

ஏன், இந் நாளிலும் அழகிய மேனியும் பளபளப்பும் வாய்ந்த கூந்தல் தேக வனப்பையும் வசீகரத்தையும் அதிகப்படுத்தத்தான் செய்கிறது. ஆக்ஷேபணை இல்லை.

டாம்கோ கூந்தல் தேங்காயெண்ணெயும் ஷாம்பூவும்



டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

TIL 4356


கொலம்பியா ரிகார்டுகளில்
கிருஷ்ண பிக்சர்ஸ் பிரபாவதி
டாக்கீ பாட்டுகள்
T. R. ராஜகுமாரி
GE. 6150 [கோமாதா நீயே
வருவாரே
நாகர்கோயில்
மகாதேவன்
GE. 6151
என் தடுமாறுகின்றாய்
நீயே துணை
T. V. நமசிவாயம்
ப்ரத்யுமனன் பாட்டு
GE. 6153
சித்தமிரங்காதா..
வனிதையிவள்
குறத்தி பாட்டுகள்
GE. 6154 [வெள்ளிமலை
திருமாதும்.
G.H.RAO
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ் மவுண்ட்ரோட், மதராஸ்.